அரசியல்

நல்லகண்ணு - அ.மார்க்ஸ்

தென்திசை

பதிப்பாளர் : மை.பா.நாராயணன்　முதன்மை ஆசிரியர் : ப.திருமாவேலன்
இணைஆசிரியர் : விஜயன்　புத்தகஆக்கம் : தங்கப்பாண்டியன்
ஆசிரியர் குழு : ராஜுமுருகன், த.செ.ஞானவேல், எழிலன், எஸ்.கிருபாகரன்
வடிவமைப்பு : முகி　அட்டை : பாபு

அரசியல்

Araciyal

KK Books ©

First Edition : Jan' 2008 Pages : 88 Thenthisai an imprint of K.K. Books Pvt. Ltd.
19, Srinivasa Reddy Street, T.Nagar, Chennai - 600 017. Phone : 044-2433 8169
E-mail : kkbooks07@rediffmail.com Website : www.thenthisai.com
Printed at Meera offset, Chennai - 5.

Price : Rs. 50

நூற்றாண்டு விழா காணும்
தோழர் சீனிவாசராவுக்கு....

ஒருவித தேவையின் பொருட்டு....

வெகுஜன ஊடகங்கள் எந்தப் பொருள் குறித்தும் செறிவான விவாதங்களை, விமர்சனங்களை தங்கள் தளத்தில் அனுமதிப்பதில்லை. அப்படியே அவசியத்தின் பொருட்டு வெளியிட்டாலும் அவை முழுமையாக இல்லாமல் சிதைக்கப்பட்டிருக்கும். இதை நிவர்த்தி செய்ய புறப்பட்ட சிறு பத்திரிகைகளின் மொழிநடையும், பாடு பொருளும் வெகுமக்களை வில்லெடுத்து விரட்டிக் கொண்டி ருக்கின்றன.

எனவே இந்தப் புத்தகம் ஒருவித தேவையின் பொருட்டு தயாரானது.

கண்முன் தெரிவதை தோண்டிப் பார்ப்பதும், நேரில் எதிர்கொள்வதை சொல்லிப் பார்ப்பதுமான முயற்சியாகவே இந்த ஏற்பாட்டுக்கு நாள் குறிக்கப்பட்டது. கடந்து போன சில மாத அரசியல் நிகழ்வுகளே இதன் கருப்பொருள்.

அணிச்சேர்க்கையும், ஆளுங்கட்சி யார் என்பதும்தான் இங்கு அரசியல். அணிகள் மாறுவதும்,

ஆளுங்கட்சி சறுக்குவதுமே அரசியல் நடவடிக்கைகள். மற்றவை பற்றி மக்களுக்குக் கவலையில்லை. இதை தாண்டி யோசித்து விடாமல் கட்சிகளும் கவனமாய் இருக்கின்றன. ஊடகங்களும் பார்த்துக் கொள்கிறது.

மிகப்பெரிய பொருளாதாரச் சுழலில் சிக்கிக் கொண்டிருக்கிறது நாடு. வெளிநாட்டு மூலதனக் காரர்கள் உள்ளே வந்து இறங்குவதையும், ஸ்ரீபெரும்புதூர் நிலத்தின் மதிப்பு ஏறிக் கொண்டே போவதையும் வளர்ச்சியாக வரவு வைத்தால் ஏமாந்து போவோம். மக்களுக்கு மானியமாக காட்டப்படும் சலுகைகளை கணக்குப் பார்த்து கைவைப்பதில் இருக்கும் ஆர்வம், ராணுவ செலவுகளுக்காக கையெழுத்து போடும்போது காணாமல் போய் விடுகிறது. தனியார் நிறுவனங்களுக்கு இடம், பொருள் அனைத்தும் ஏவல் இல்லாமல் கிடைத்து விடுகிறது. ஒரு பொதுத்துறை நிறுவனத்தை உருவாக்குவதற்குள் நாக்குத் தள்ளி விடுகிறது.

அந்நிய மூலதனத்தையோ, பன்னாட்டு கம்பெனிகளையோ முற்றிலுமாக நிராகரிப்பதல்ல எங்கள் சிலரின் நோக்கம். இவர்களின் தொழில் முயற்சிக்கு வாசல் வைக்கும்போது என்ன நிபந்தனைகளை அரசு முன் வைக்கிறது என்பதே முக்கியம். நிபந்தனையற்ற ஆதரவு- ஆளுங்கட்சிக்கு ஒரு கட்சி தந்து விட்டுப் போகட்டும். நிபந்தனையற்ற அனுமதி- எந்தக் கம்பெனிக்கும் ஒரு ஆட்சி தரலாகாது. இந்த அடிப்படையை முன்வைத்தே புதிய பொருளாதார கொள்கை, உலகமயமாதல், அணி ஒப்பந்த எதிர்ப்பு, அமெரிக்கா மீதான விமர்சனம் போன்ற கருத்துகள் பேசப்படுகின்றன. ஜனநாயகத்திலிருந்து சோசலிசத்துக்கு தடம் மாறுவதும் அல்லது சர்வாதிகாரத்துக்கு இடம் மாறுவதும், மாறாக பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கு போய்ச் சேருவதுமான தத்துவார்த்த பரிசோதனைகள் இந்த விவாதத்தில் பரிமாறப்படவில்லை.

வாய்ப்பு ஏற்பட்டால் அரசு, அதன் வடிவம் குறித்து தனி விவாதம் வைக்கப்படும். தொன்மையான இந்திய அரசாங்கத்தின் வரலாறு வேடிக்கையும் விநோதமும் நிரம்பியது. கௌடில்யரின் அர்த்தசாஸ்திரம் கண்டெடுக்கப் பட்டு 102 ஆண்டுகள் ஆகிவிட்டது. அதிலிருந்து தொடங்கினாலும் வரலாற்றுப் பேச்சு

பெரும் பேச்சாகி விடும். இந்தியாவை மட்டப்படுத்த பிரிட்டிஷ் எழுத்தாளர்கள் எழுதியது முறையா, தேசீய வேகத்தை வளர்த்தெடுக்க நம்மவர் எழுதியது சரியா என்ற விவாதங்களுக்கு இன்று தேவையும் இல்லை.

எனவே இன்றைய அரசியல் நடப்பை மட்டுமே மையப் பொருளாக எடுத்துக் கொண்டோம். அமெரிக்காவுடன் செய்து கொள்ளப்பட்ட அணு ஒப்பந்தம் குறித்து அதிகமாகப் பேசப்பட்டது. இந்திய ஆட்சியை அசைத்துப் பார்க்கும் விவகாரம் அது. இன்றும், நாளையும் மிரட்டலுக்கு பயன்படும் ஆயுதமாகவும் மாறிவிட்டது. 'இனி உலகத்தில் சாவதற்கு பயப்பட வேண்டியதில்லை. வாழ்வதற்கு தான் பயப்பட வேண்டியிருக்கிறது' என்று அருந்ததி ராய் சொன்ன இந்த விவகாரம் குறித்து பேசும்போது நல்லகண்ணு–அ.மார்க்ஸ் இருவருமே அமெரிக்கா வுடன் நிபந்தனையின்றி ஒப்பந்தம் செய்து கொள்வது குறித்து எதிர்ப்பு தெரிவித்தனர். அணு ஆற்றலே தேவையில்லை என்றார் அ.மார்க்ஸ். ஆனால் அது வளர்ச்சிக்கு தேவைதான் என்று நல்லகண்ணு கருதுகிறார். அணுசக்திக்கு மாற்று கண்டுபிடித்தே தீர வேண்டும் என்பதில் இருவரும் ஒன்றுபட்டார்கள்.

மிக நீண்ட இடைவெளிக்கு பிறகு சோவியத் குறித்த விவாதம் தமிழ்ச்சூழலில் நடப்பதாகவே நினைக்கிறேன். கம்யூனிஸ்ட் எதிர்ப்பாளர்கள் செய்யும் எதிர் பிரசாரங்களை இதில் கணக்கெடுக்கத் தேவையில்லை.

பெரிஸ்த்ரோய்கா, கிளாஸ்நாஸ்ட் என்ற பெயர்கள் 1990களின் தொடக்க காலத்தில் பிரபலமாக்கப்பட்டு 70 ஆண்டு கால சோவியத் சமூகத்தை வீழ்த்தியது. இதன் தொடக்கம் யார் கோர்பசேவா, அதற்கும் முன்பா.... அல்லது ஸ்டாலினா.... இல்லை லெனின்தானா? இந்த வீழ்ச்சியிலிருந்து நாம் கற்றுக் கொண்டது என்ன? மறுபரிசீலனை செய்தது என்ன என்பதை பதினைந்தாண்டுகள் கழித்து பேசுவதில் அர்த்தம் இருப்பதாகவே உணர்ந்தோம். வீழ்ச்சிக்குக் காரணம் மையப்படுத்தப்பட்ட கட்சியா, மறைமுகமாக மையப்படுத்திக் கொண்ட தலைமையா என்ற கேள்வி சோவியத்துக்கு மட்டுமல்ல அனைத்து நாட்டுப் பிரச்னைகளுக்கும் பொதுவானது. போல்ஷ்விக் கட்சியை மட்டுமல்ல எல்லா பூர்ஷ்வா கட்சிகளையும் நிறுத்துப் பார்க்க பயன்படும் என்பதால் அவை

விரிவாகவே பேசப்பட்டது. நல்லகண்ணு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் முக்கிய பொறுப்பில் இருப்பவர். மார்க்சீயத்தின் பால் மாறாத பற்றுக் கொண்டவராக சொல்லிக் கொள்பவர் அ.மார்க்ஸ். எனவே இவர்கள் இருவரும் சோவியத் பற்றி பேசியது பொருத்தமானது. சோவியத் வீழ்ச்சி சம்பவம் குறித்து பேசும்போது நல்லகண்ணு குரல், உடைந்து போய் கம்மியது. உள்மனது ஏக்கப் பெருமூச்சு விட்டது. சில மார்க்சீய-லெனினிய குழுக்கள் 'சோவியத் ஒரு சமூக ஏகாதிபத்தியம்' என்று கூறுவதை அ.மார்க்ஸ் நிராகரித்தார். இருவருமே 'இது ஒரு தத்துவத்தின் தோல்வியல்ல' என்று சொல்லிக் கொண்டார்கள்.

இந்த போக்கு, போஸ்ட்மார்டனிசம் பக்கமாக விவாதத்தைத் திருப்பியது. 'உங்கள் அளவுக்கு போஸ்ட்மார்டனிசம் குறித்த மூல நூல்களை நான் படிக்கவில்லை' என்றுமார்க்ஸிடம் மெதுவாக சொன்ன நல்லகண்ணு, பல வலுவான எதிர்வினைகளை செய்தார். ஐம்பது, அறுபது ஆண்டுகளுக்கு முன்னால் குறிப்பாக தஞ்சை, நெல்லை மாவட்ட கிராமங்களில் விவசாயத் தொழிலாளர்கள் மத்தியிலும், தலித் மக்களுடனும் செங்கொடி சங்கம் செய்த அழுத்தமான காரியங்களை உண்மைச்சாட்சியாய் உட்கார்ந்து நல்லகண்ணு மூலமாய் கேட்டது ஆச்சர்யம் தந்தது. கொள்கைப்பூர்வமாக வடித்தெடுக்கப்பட்ட கட்டுப்பாடான கூட்டம், நிலப்பிரபுத்துவ உச்சங் களையும் உயர்சாதி எச்சங்களையும் நொறுக்கிய நிகழ்வுகள் தொய்வில்லாமல் தொடர்ந்திருக்குமானால் 67இல் கீழ்வெண்மணி நடந்திருக்காது. அடுத்த முப்பதாண்டுகள் கழித்து திண்ணியம் தொடர்ந் திருக்காது. இதற்காக பொறுப்பேற்க வேண்டியவர்கள் கம்யூனிஸ்ட்கள் மட்டுமல்ல, கூடுதலாக திராவிட இயக்கத்தினர். சமூக ஏற்றத்தாழ்வின் வேரைக் கண்டுபிடித்து பல பத்து ஆண்டுகள் ஆகிவிட்டது. அதை வெட்டி விடத்தான் எல்லோரும் பேசுகிறார்கள். ஆனால், வேர் இன்னும் இன்னுமாக தடித்துக் கொண்டே போகிறது. அதனால்தான் ஏழு ஆண்டுகள் சிறையில் கழித்த, பல ஆண்டுகள் ஒரு அரசியல் இயக்கத்துக்கு தலைமை வகித்த, வயது எண்பதை கடந்த தோழர் நல்லகண்ணு அவர்களை கூட தியாகம், உழைப்பு எல்லாமே வீணோ என்று வேதனைப்பட வைத்திருக்கிறது சாதிக்கொடுமை.

இடஒதுக்கீடு மூலமாக சாதி ஒழியுமா? ஒழியாது. படிப்பறிவு இல்லாமல் ஏழையாக கிராமத்தில் இருந்து சாதி பார்த்தவன், படித்து பட்டம் பெற்று நகரத்தில் வாழ்ந்து சாதி பார்க்கிறான். அவ்வளவுதான். இடஒதுக்கீட்டின் பலன் தாழ்த்தப்பட்ட, பிற்படுத் தப்பட்டோரை படிக்க வைத்தது. சமூக வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியது. இன்னும் சொன்னால் அதிகாரத்தில் பங்கெடுக்க வைத்தது. அதிகாரத்தை பயன்படுத்த அனுமதி தந்தது. சமுதாய தேவைக்காக சாதி சங்கங்கள் அமைத்த காலம் போய், ஆதிக்க சாதியினரே சங்கம் வைத்து தங்கள் கட்டுமானத்தை உடையாமல் காத்துக் கொண்டு வருகிறார்கள். இவர்களுக்கு தமிழ்நாட்டு மேடைகளில், பத்திரிகைகளில் தரப்படும் விளம்பரம் அருவருப்பானது. காந்தி ஜெயந்தியன்று சத்தியாகிரகம் உணர்ந்த தியாகிகள் கீழே விபரம் இல்லாமல் ராட்டை சுற்றிக் கொண்டிருக்க, சாதிக்கிரகங்கள் மேலே நின்று, காந்திக்கு பட்டு வெண் சாமரத்தை வீசிக் கொண்டிருப்பது ஐம்பதாண்டுகளில் அனைத்துத் துறைகளிலும் ஏற்பட்ட வீழ்ச்சியின் சாட்சி. இந்தப் புதிய மனிதர்களை பார்த்து புண்ணாகிப் போயிருக்கிறார் நல்லகண்ணு.

கட்சி நடத்துவது, தேர்தலில் பங்கேற்பது-போன்றவற்றில் ஏற்படும் செலவுகள் குறித்து நல்லகண்ணு வருத்தப்பட்டார். பிரதிநிதித்துவ தேர்தல் முறையை அதற்கு மாற்றாக அ.மார்க்ஸ் முன்வைத்தார். தேர்தலில் பங்கேற்பது மட்டுமல்ல ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு கூட இங்கு அதிகமாக காசு தேவைப் படுகிறது. மாதத்துக்கு நான்கு ஆர்ப்பாட்டம் நடத்திய ஒரு கட்சியை குறிப்பிட்டு எனது நண்பர் சொன்னார்: "அவங்க பணக்கார கட்சிப்பா" என்று.

"இன்று மருத்துவ செலவே காஸ்ட்லி ஆகிவிட்டது. எனக்கு திடீரென்று ஆபரேஷன் என்றால் ரெண்டு லட்சம்... மூணு லட்சத்துக்கு எங்கே போவேன்" என்று சில ஆண்டுகளுக்கு முன் நல்லகண்ணு ஒரு மேடையில் பேசியது நினைவுக்கு வருகிறது. இதனாலெல்லாம் சேர்த்துதான் இந்த விவாதத்துக்கு பொருத்தமானவராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தோழர் நல்லகண்ணுக்கு அறிமுகம் தேவையில்லை. தமிழ்நாட்டு அரசியல் அரங்கில்

கிராமப்புற விவசாயியைப் போல வலம் வந்து பண்பாட்டை பயிர் செய்தவர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் நிலைப்பாட்டை ஏற்காதவர்கள் கூட, 'நல்லகண்ணு நல்லவர்.... நியாயம் தவறமாட்டார்' என்று சொல்லி சமாதானப்பட்டுக் கொள்ளக் கூடிய பேர் வாங்கியவர். அரசியலில் மட்டுமல்ல எல்லா இடத்திலும் 'நல்லவர்' என்ற பெயரை பெறுவது தான் கஷ்டம். அதை லேசாக பெற்றவர்.

1940களின் தொடக்கத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தவர். 23 வயதில் நெல்லை சதிவழக்கில் கைது செய்யப்பட்டவர். ஏழாண்டுகள் கழித்துதான் விடுதலை ஆனார். இளமையை சிறையில் தொலைத்தவர். அப்போதே நிறைய படித்தவர். 1952இல் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் மீது இருந்த தடை விலக்கப்பட்டதால் சதி வழக்கில் ஆயுள் தண்டனை பெற்றவர்கள் விடுதலை ஆனார்கள். வெடிமருந்து சட்டத்தின்படி இன்னொரு வழக்கும் இருந்ததால் நல்லகண்ணு தொடர்ந்து சிறையில் இருந்தார்.

விவசாயிகளை சங்கமாக்குவது, அவர்களுக்கு குறைந்தபட்ச கூலியையாவது பெற்றுத்தருவது இவரது நோக்கமாக இருந்தது. சாதிகளை மறந்து வர்க்க ரீதியாக திரளும்போதுதான் உழைக்கும் மக்களால் உருப்படியாக ஒன்றைச் சாதிக்க முடியும் என்ற பாலபாடத்தை இந்த நிகழ்வுகள் தனக்கு உணர்த்தியதாகச் சொல்கிறார். தட்டச்சு செய்யப்பட்ட லெனினின் 'அரசும் புரட்சி'யும் நூல் தன்னை அதிகம் பாதித்தது என்கிறார்.

1966ஆம் ஆண்டு கோவில்பட்டி பகுதியில் புஞ்சை நிலங்களுக்கு விளையாத காலத்துக்கும் தீர்வை வசூலிக்கப்பட்டதை எதிர்த்து நல்லகண்ணுவும், அழகர் சாமியும் தொடர் போராட்டம் நடத்தினார்கள். அப்போது பக்தவச்சலம் முதலமைச்சர். விவசாய கடனுக்காக ஏர் மாடுகளையும், வீட்டின் கதவு நிலைகளையும் ஜப்தி செய்தார்கள். நாச்சியார்புரம் என்ற ஊரில் மாடுகளை ஜப்தி செய்து கொண்டு போனதை எதிர்த்து தோழர்கள் இருவரும் நடத்திய போராட்டம் முக்கியமானது. மூன்று மாதங்கள் கழித்து ஏர்மாடுகள் மீண்டும் விவசாயிகளிடம் ஒப்படைக்கப் பட்டது. இன்று வரை இந்திய

கம்யூனிஸ்ட் கட்சி கோவில்பட்டி பகுதியில் உறுதியாக இருப்பதற்கு அடித்தளமாக அமைந்தது அந்தப் போராட்டம்தான்.

இப்படிப்பட்ட அனுபவங்களின் வழித்தடத்தில் நின்று அரசியல் விமர்சனங்களை கேட்கவே அவர் அழைக்கப்பட்டார். தீவிரமான படிப்பின் அடையாளமாக அ.மார்க்ஸை தேர்வு செய்தோம்.

பொ.வேல்சாமி, பொதியவெற்பன், ரவிக்குமார் ஆகியோர் கூட்டுடன் அ.மார்க்ஸ் எடுத்து வந்த 'நிறப்பிரிகை' இன்று 35-40வயதுக்குட்பட்டவர்களுக்கு 1990களில் ஆதர்சமாக இருந்த கருத்தாக்க இதழ். இதை இன்று சொல்லிக் கொள்ள சிலருக்கு கூச்சம் இருக்கலாம். ஆனால் அதுதான் உண்மை. அதில் அரசியல் விவாதங்களுக்கு தரப்பட்ட முன்னுரிமையை எந்தப் பத்திரிகையும் தரவில்லை. தமிழக அறிவுச்சூழலில் இயங்கிய இருபது, முப்பது பேர் கூடி விவாதம் நடத்தி அவை அப்படியே நிறப்பிரிகையில் பதிவானது. இன்று பரவலாகப் பேசப்பட்டு வரும் பெண்ணியம், பாலியல், அரசு–அதிகாரம், சாதீயம், தலித்தியம் குறித்து கூட்டு விவாதங்கள் நடந்தது.

அறிவுஜீவிகளால் தீண்டப்படாத நபராக கருதப்பட்ட பெரியார் குறித்த சில செதில்களை நீக்கி காண்பித்ததில் அ.மார்க்ஸ் பங்கு முக்கியமானது. திராவிடப் பாரம்பர்யத்தில் இருந்து தனித்துப் பார்க்கப்பட வேண்டியவர் பெரியார் என்பது மட்டுமல்ல. அவரே தனித்து நிற்பதை அ.மா. அடையாளப்படுத்தினார். பெரியார் எதிர் காலாச்சாரவாதியாக உருவகப்படுத்தப்பட்டார். ஆழமான வாசிப்புக்கான தளமாகவும் அதற்கு தூண்டுதலாகவும் நிறப்பிரிகையை நகர்த்தி வந்ததில் அ.மார்க்ஸின் பணி முக்கியமானது. இதனாலேயே அதிகளவு எதிர்தாக்குதலை சம்பாதித்தார்.

முதன்முதலில் சி.பி.எம். கூட்டமொன்றில் பேசியதில் இருந்து மார்க்ஸின் அரசியல் ஆரம்பம். இந்திரா காந்தி ஆட்சியில் அமலுக்கு வந்த அவசர நிலைப் பிரகடனத்துக்கு எதிராக தனது எதிர்ப்பை பதிவு செய்தார். அவரது அப்பா ராமதாஸ் என்கிற அந்தோணிசாமி, மலேசிய கம்யூனிஸ்ட் கட்சியுடன் தொடர்புடையவர். தலைக்கு விலை வைக்கப்பட்டு தேடப்பட்டவர் என்பதால் அரசியல் ஆர்வம்

இயல்பானது. ஈழத்தமிழர் பிரச்னை தொடர்பாக சி.பி.எம். எடுத்த நிலைப்பாட்டில் முரண்பட்டு அ.மார்க்ஸ் அதிலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார். பின்னர் மார்க்சிய-லெனினிய குழுக்களுடன் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டுள்ளது. ரஷ்யா குறித்த மதிப்பீடுகள் தொடர்பாக அங்கும் முரண்பட்டு வெளியேறுகிறார்.

இதனிடையே அரசு கல்லூரி ஆசிரியராக இருந்த அவர், ஆசிரியர் சங்கம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்றார். பத்தாண்டுகளில் அடுத்தடுத்து ஆறு கல்லூரிகளுக்கு இடமாறுதல் செய்யப்பட்டார். அரசு பணியில் இருந்தாலும் ஆட்சியாளர்களுக்கு எதிராக, போலீசுக்கு எதிராக எப்போதும் தனது கருத்தை பதிவு செய்வதில் மார்க்ஸ் தயங்கியதில்லை. சாதி மத மோதல்கள், போலீஸ் தாக்குதல்கள் நடக்கும் இடங்களுக்குச் செல்லும் உண்மையறியும் குழுவில் அவரது பெயர் நிச்சயம் இருக்கும். ரஷ்யாவில் நடப்பதென்ன மார்க்சீயத்தின் பேரால், நமது மருத்துவ நல பிரச்சினைகள், இந்துத்துவம், காந்தியும் தமிழ்ச் சனாதிகளும்....என விரியும் அவரது விமர்சனங்கள் முக்கியமானவை.

இவர்கள் இருவருமே ஒருவர் மீது ஒருவர் மரியாதை கொண்டிருந்ததால் எங்களுக்கு வேலை சுலபமானது. "என்னுடைய தந்தை இன்று இருந்தால் அவரிடம் என்னவெல்லாம் கேட்பேனோ அதைத்தான் உங்களிடம் கேட்க இருக்கிறேன்" என்று அ.மார்க்ஸ் ஆரம்பித்தார். "உங்கள் அளவுக்கு நான் நிறைய படித்தவனல்ல" என்று நல்லகண்ணு பணிவுகாட்டினார். கடந்த நவம்பர் *19, 20* நாட்களில் *(2007)* சென்னையில் இந்த விவாதம் நடந்தது. முழுமையாக பதிவு செய்யப்பட்டது. அதை அப்படியே நான் குறிப்பாக எடுத்துக் கொண்டேன்.

விவாதம் அப்படியே என்னால் எழுத்து வடிவமாக்கப்பட்டு இருவருக்கும் வழங்கப்பட்டது. விடுபட்டுப் போனதை சரி செய்து கொடுத்தார்கள். நீங்கள் வாசிக்கும் முழுமை- மொத்த அரசியலுக்கான முழுமையல்ல. இதை எல்லாமே இருக்கும் சூப்பர் மார்க்கெட்டாகவோ அனைத்துக்குமான சர்வலோக நிவாரணியாகவோ கருதத் தேவையில்லை. அப்படியொரு நினைப்போடு விவாதமும் நடத்தப் படவில்லை.

தொடரும் அரசியல் விவாதத்தில் இருந்து வெட்டியெடுக்கப்பட்ட ஒரு பகுதி. இந்த ஒரு பகுதியை நிறைவு செய்த தோழர்கள் நல்லகண்ணு- அ.மார்க்ஸ் இருவரும் நன்றிக்குரியவர்கள். இந்த விவாதத்தை அடுத்தடுத்த கட்டங்களுக்கு நகர்த்திச் செல்பவர்களும்தான்.

ப.திருமாவேலன்

கேட்க நினைத்த கேள்விகள்

“தோழர் ஆர்.என்.கே. அவர்களையும் உங்களையும் சந்திக்க வைத்து உங்கள் உரையாடலைப் பதிவு செய்து ஒரு சிறு நூலாக வெளியிடலாம் என நினைக்கிறோம். உங்களுக்குச் சம்மதமா?” -என நண்பர் திருமாவேலன் திடீரெனத் தொலைபேசியில் கேட்டபோது எனக்குச் சட்டென்று ஒன்றும் புரியவில்லை. பிறகு அவர் விளக்கினார். நான் சற்றுத் தயக்கத்துடன் ஒத்துக் கொண்டேன்.

ஆர்.எஸ்.எஸ்.காரர்களுடனெல்லாம் தொலைக் காட்சி விவாதங்களில் பலமுறை பங்கேற்றுள்ளேன். அதற்கெல்லாம் நான் தயங்கியதில்லை. ஒரு முறை, ஒரு பாரதீய ஜனதாகாரர் விவாதத்தைப் பாதியிலேயே நிறுத்திவிட்டு, என் முகவரியை எல்லாம் கேட்டு மிரட்டிவிட்டு அகன்றிருக்கிறார்.

அப்போதெல்லாம் ஏற்படாத தயக்கம் எனக்கு இப்போது ஏற்பட்டது. அவர்கள் எனது கருத்துக்கள் எல்லாவற்றிலும் மாறுபட்டவர்கள். ஆனால் தோழர் நல்லகண்ணு அவர்களைப் பொருத்தமட்டில் சில அம்சங்களைத் தவிர பல அம்சங்களில் அவர் கருத்துக்களை நான் ஏற்பவன். முக்கிய இடதுசாரிக் கட்சி ஒன்றின் பெருந்தலைவர், எல்லோராலும் மதிக்கப்படுபவர், மூத்த அரசியல்வாதி, தியாக வாழ்க்கைக்கு உரியவர். அவரிடம் ஏதும் ஏடாகூடமாகக் கேட்டு விடக்கூடாது என்பதே என் தயக்கத்தின் அடிப்படை.

உண்மையில் இன்று உங்கள் கைகளில் இருப்பது விவாதமல்ல. என்னுடைய கருத்தே சிறந்தது என்கிற எண்ணத்துடனோ, எதிரே அமர்ந்து விவாதிப்பவரின் கருத்தை வெல்ல வேண்டும் என்கிற நோக்கத்துடனோ இதில் நான் பங்கு பெறவில்லை. சிலவற்றை விளங்கிக் கொள்வதற்கும், சுட்டிக் காட்டுவதற்குமான ஒரு வாய்ப்பாகவே இதை நான் பயன்படுத்திக் கொண்டேன்.

நல்லகண்ணு அவர்கள் எனது எந்தக் கேள்வியாலும் துணுக்குறவில்லை. மிக்க அமைதியுடனும் புன்முறுவலுடனுமே எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டு பேசினார். சுமார் 35 ஆண்டுகளுக்கு முன்பு மறைந்த என் தந்தையின் நினைவு எனக்கு வந்தது. அவரும் ஒரு கம்யூனிஸ்ட். ஆயுதந் தாங்கிப் போரில் ஈடுபட்டவர். தலைக்கு விலை கூறப்பட்டவர். நாடு கடத்தப்பட்டவர். என்னுடைய இளம் வயதிலேயே அவர் இறந்து போனார். சோவியத் யூனியன் வீழ்ந்த காட்சியை யெல்லாம் காணாமலே போனவர் அவர். அடடே, நமது அப்பா இருந்திருந்தால் இதைப் பற்றியெல்லாம் பேசியிருக்கலாமே என நான் பலமுறை நினைத்ததுண்டு.

கிட்டத்தட்ட என் தந்தை வயதுள்ள தோழர் ஆர்.என்.கே.யுடன் இரண்டு நாட்கள் விரிவாகப் பேச ஒரு வாய்ப்பு என்றவுடன், எனக்கு அப்பாவிடம் கேட்டிருக்கலாமே என்று அடிக்கடி தோன்றுவதுதான் நினைவுக்கு வந்தது. ஆனால் ரொம்பவும் சமகால அரசியலையே பேச வேண்டியிருந்ததால் எல்லாவற்றையும் பேச முடியவில்லை.

நல்லகண்ணு அவர்கள் அரசியலில் ரொம்பவும் 'பிசி'யாக உள்ளவர். இதற்காக அவர் நேரம் ஒதுக்கியது அவரது பெருந்தன்மையையே காட்டுகிறது. அதனால்தான் என்னிடம் வசதியான தேதியை திருமாவேலன் கேட்ட போது கூட அவர் கூறுகிற எந்தத் தேதியிலும் வரத் தயார் என்றேன்.

தோழர் நல்லகண்ணு அவர்களின் வயது, அரசியற் பொறுப்பு ஆகியவற்றை மனதிற்கொண்டு தர்மசங்கடம் அளிக்கும் கேள்விகள் எல்லாவற்றையும் தவிர்த்துவிட்டேன்.

இங்கே கூறப்பட்டுள்ள என் கருத்துக்களில் சில நான் தொடர்ந்து பேசி வருபவைதான். எனினும் இந்த நூலில், இந்த *context*ல் அவை புதிய அர்த்தம் பெறுகின்றன. இதுவரை எனது இந்தக் கருத்துக்கள் போகாத இடங்களுக்குப் போக ஒரு வாய்ப்பாகவும் இது அமைந்து விட்டது.

இந்த இனிய வாய்ப்பை அளித்த கே.கே.புக்ஸ் தோழர்களுக்கு நன்றி.

ஜனவரி 2, 2008

அ.மார்க்ஸ்
சென்னை - 20.

அரசியல்

ப.திருமாவேலன்:

அணு விவகாரத்தில் இருந்து உங்கள் விவாதத்தை ஆரம்பிக்கலாம் என்று நினைக்கிறேன். இந்தியாவின் எதிர்காலமே இந்த விவகாரத்தில் அடங்கியிருப்பதாக பிரசாரம் செய்யப்படுகிறது.

இந்தியா மின்சார பற்றாக்குறை உள்ள நாடுதான் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இல்லை. அதைப் பூர்த்தி செய்வதற்காக அமெரிக்காவுடன் அணுசக்தி ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. பொருளாதார வளர்ச்சி விகிதத்தை அதிகரிக்கச் செய்வதற்கு அணுமின்உற்பத்தி மிகவும் அவசியம் என்று மத்திய அரசால் கூறப்படுகிறது. 2030ஆம் ஆண்டில் இந்தியாவின் மின்தேவை ஒரு லட்சம் மெகாவாட்டாக அதிகரிக்கும். எனவே அணு மின்உற்பத்தி மூலம் இந்த தேவையை தொடர்ச்சியாக நிவர்த்தி செய்யலாம் என்று வாதம் வைக்கப்படுகிறது.

அமெரிக்காவுடனான இந்த ஒப்பந்தம், எதிர்ப்பு பூதம் கிளப்பப்படும் இந்த மாதத்தில் ஏற்படவில்லை. 2 ஆண்டுகளுக்கு முன் 2005இல் கையெழுத்தானது.



ஜார்ஜ் புஷ்சுடன் மன்மோகன்.

இப்போது சர்வதேச அணுசக்தி கழகத்துடன் பேச்சு நடத்தப்படுகிறது. இன்னும் சில நாட்களில் பேச்சு தொடங்கலாம். இதை தொடர்ந்து 45 நாடுகளை உறுப்பினராக கொண்ட என்.எஸ்.ஜி. என்று சொல்லப்படும் அணுமூலப் பொருட்கள் பகிர்வு குழுமத்துடன் பேச்சு நடக்கும். இறுதியில் அமெரிக்க பாராளுமன்றம் பச்சைக்கொடி காட்டும்.

அமெரிக்க அணுசக்தி சட்டத்தின்படி, அணுஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தில் கையெழுத்து போடாத நாடுகளுடன் அணுவர்த்தகம் செய்ய முடியாது. ஆனால் இந்தியாவுக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது பெருமையாக கூறப்படுகிறது. அணுவின் தன்மையை நாம் புரிந்து கொள்ளாததன் பலவீனத்தையே இது காட்டுகிறது.

ஆனால் ஆரம்பத்தில் இடதுசாரி கட்சிகள் தங்கள் எதிர்ப்பை அழுத்தமாக பதிவு செய்தன. மத்திய அரசு கவிழ்ந்து விடும் என்ற எதிர்பார்ப்பு கூடியது. ஆனால் எட்டிப்பார்த்த பூனைக்குட்டி மீண்டும் உள்ளே போய்விட்டது. இனி அமெரிக்காவுடனான அணுமின் உற்பத்தி ஒப்பந்தத்துக்கு எந்தத் தடையும் இல்லை என்பதே நிரந்தர நிலையாக மாறிக் கொண்டிருக்கிறது.

இந்தியாவை, மத்திய அரசின் ஸ்திரத்தன்மையை கேள்விக்குறியாக்கியதால் உலகத்தையே உன்னிப்பாக கவனிக்கச் செய்திருக்கும் இந்த விவகாரம் தொடர்பாக, மையமான எதிர்ப்பை பதிவு செய்த முக்கிய அகில இந்திய கட்சியின் பொறுப்பாளர் என்ற வகையில் நல்லகண்ணுவிடம் உங்களது சந்தேகங்களை எழுப்புவதன் மூலமாக நீங்கள் (அ.மார்க்ஸிடம்) விவாதத்தை தொடங்கி வையுங்கள்....

அ.மார்க்ஸ்:


அமெரிக்காவுடன் ஏற்பட்டுள்ள அணு ஒப்பந்தத்தில் உருவாகியுள்ள ஆபத்து தொடர்பாக இந்தியாவில் ஓரளவாவது விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளதாகவே நினைக்கிறேன். ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள மத்திய அரசை ஆதரிக்கும் கட்சிகளாக இருந்தபோதிலும் ஒப்பந்தத்தை எதிர்ப்பதன் மூலம் இதை மக்கள் பிரச்சினையாக ஆக்கியதில் முக்கிய பங்கு இடதுசாரிகளுக்கு இருக்கிறது. எங்களைப் போன்றவர்கள் எல்லாம் கூட இதுபற்றி எழுதிக் கொண்டிருந்தாலும் பெரிய அளவில் மக்கள் மத்தியில் கொண்டு சென்றது கம்யூனிஸ்ட் கட்சிகள்தான்.

இதை மக்கள் பிரச்சினையாக ஆக்கியதில் முக்கிய பங்கு இடதுசாரிகளுக்கு இருக்கிறது.

சொல்லப் போனால் கம்யூனிஸ்ட் கட்சிகள் மட்டும்தான் இதைச் செய்து கொண்டிருக்கிறார்கள். மாநிலக் கட்சிகள் மற்றும் அடித்தள மக்களைப் பிரதிநிதித்துவம் செய்கிற கட்சிகளெல்லாம் இது ஏதோ தங்களுக்குச் சம்பந்தமில்லாத விஷயம் போல இருக்கின்றனர். லல்லு பிரசாத் யாதவ், 'எனக்குப் புரியல' என்கிறார். கருணாநிதி வாயே திறக்கவில்லை. பாரதீய ஜனதா கட்சி ஒப்பந்தத்தை எதிர்த்தாலுங்கூட சொல்லுகிற காரணம் வேறு. ஹைட் சட்டம் மூலம் நமது நாட்டின் இறையாண்மைக்கு ஆபத்து வந்துள்ளது என்பதோ, 2005-இல் புஷ் வாக்குறுதி அளித்ததற்கு மாறாக ஒப்பந்தப் பிரிவுகள் உள்ளன என்பதோ, நமது அணு ஆற்றல் முயற்சிகள் எல்லாம் இனி சர்வதேசக் கண்காணிப்பிற்கு உட்பட்டதாக மாறப் போகிறது என்பதோ, இவ்வளவு 'ரிஸ்க்' எடுத்து, இவ்வளவு செலவு செய்து மிகக் குறைந்த அளவே கிடைக்கப் போகிற அணு மின்சாரம் நமக்குத் தேவைதானா என்பதெல்லாம் அவர்களுக்குக் கவலையில்லை.

இந்தப் பின்னணியில்தான் இடதுசாரிகள் எதிர்ப்பு முக்கியத்துவம் பெறுகிறது. இந்த எதிர்ப்பின் விளைவாக இன்று இந்த ஒப்பந்தம் மேலே செயல்பாட்டை நோக்கி நகராமல் முடக்கப்பட்டது பாராட்டுக்குரியது. ஆனால், அமெரிக்கா ஓய்ந்துவிடவில்லை. பல்வேறு வகைகளில் அழுத்தம் கொடுக்கிறது. கோண்டலிசா ரீஸ் போனில் பேசுகிறார். தான் ஒரு தூதர்தான் என்பதை மறந்து அமெரிக்காவின் இந்தியத் தூதர் டேவிட் மல்போர்டு இடதுசாரி கட்சித் தலைவரைச் சந்திக்கிறார், அத்வானியைச் சந்திக்கிறார், வற்புறுத்துகிறார். ஹென்றி கிசிங்கர் இதற்கென இந்தியாவிற்கு வந்து புத்ததேவ் பட்டாச்சார்யாவுக்கு அழுத்தம் கொடுக்கிறார். நிக்கோலஸ் பர்ன்ஸ் நீண்டகால ராணுவக் கூட்டு பற்றிச் சொல்வதோடு பல லட்சம் கோடி மதிப்புள்ள 126 அமெரிக்க போர் விமானங்களை இந்தியாவிற்கு விற்பது குறித்தும் பேசியுள்ளார்.

இந்த நிலையில் திடீரென புத்ததேவ் பட்டாச்சார்யா நமது நாட்டுக்கு அணுஆற்றல் தேவைதான் என்று கூறியுள்ளார். நாங்கள் இந்த ஒப்பந்தத்துக்குத்தான் எதிரி. அணு ஆற்றலுக்கு அல்ல என்று காரட்டும் கூறுகிறார். இடதுசாரிகள் ஏதோ ஒரு கட்டத்தில் சமரசமாகி விடுவார்கள் என்று சொல்லி வந்தவர்களுக்கு இது மிகப்பெரிய ஐயத்தை ஏற்படுத்தியுள்ளது. இப்போது இந்த ஐயத்தை உறுதிப்படுத்துவதுபோல சர்வதேச அணு ஆற்றல்



ஆணையத்துடன் இந்திய அரசு பேச்சு வார்த்தை நடத்துவதற்கு இடதுசாரிகள் சம்மதித்துள்ளனர். ஒப்பந்த எதிர்ப்பு விஷயத்தில் இடதுசாரிகள் உறுதியாக இருப்பார்களா?

நல்லகண்ணு:


நல்லகண்ணு

ஏகாதிபத்திய எதிர்ப்புதான் இன்றைய மையக் கருத்தாக அமைந்துள்ளது. ஏகாதிபத்தியத்தின் சூழ்ச்சி முறைகளில் வரும் ஆபத்தை எச்சரிக்கை உணர்வுடன் தொடர்ந்து சுட்டிக் காட்டி வந்திருக்கிறோம்.

இரண்டாவது உலகமகா யுத்தத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் பலத்த அடியை பெற்று வீழ்ந்தது. தொழில் முன்னேற்றம் காரணமாக புத்துயிர் பெற்று புதிய ஆதிக்க சக்தியாக சோவியத் எழுந்தது. சோவியத் வீழ்ச்சிக்குப் பிறகு அமெரிக்கா தனித்த ஏகாதிபத்தியமாக இன்று வளர்ந்து வருகிறது. இந்த அபாயத்தை, ஆபத்தை கம்யூனிஸ்ட் இயக்கம் புரிந்து கொண்டது மாதிரி வேறு எந்த இயக்கமும் புரிந்து கொள்ளவில்லை.

இந்தியாவைப் பொறுத்தவரையில் பிரதமர் நேரு காலத்தில் பொதுத்துறை வளர்ந்தது. ஆனால் இன்று உலகமயமாக்கல், தனியார் துறையின் ஆதிக்கம் வலுப்பட மட்டுமே உதவி புரிந்து வருகிறது. இன்றைய தொழில் வளர்ச்சிக்கு மின்சார உற்பத்தி முக்கியமானது. மின் உற்பத்திக்கு அணுசக்தி ஒப்பந்தம் பயன்படும். அதேசமயம் இந்த ஒப்பந்தத் ததால் உள்ளார்ந்த ஆபத்து உள்ளது என்பதை பொதுமக்களுக்கு புரிய வைப்பதில் சிரமம் உள்ளது.

அமெரிக்காவுடன் ஒப்பந்தம் செய்து கொள்வது குறித்து கேள்வி எழுப்பினாலோ, அதிலுள்ள சந்தேகங்களை கேட்டாலோ, 'இந்தியாவின் தொழில் வளர்ச்சிக்கு இடதுசாரிகள் இடைஞ்சலாக இருக்கிறார்கள்' என்று ஏகாதிபத்தியமும், இந்திய முதலாளிகளும் பிரசாரம் செய்ய தொடங்கி விடுகிறார்கள். அமெரிக்காவுடன் இந்தியா அணுமின் ஒப்பந்தம் செய்து கொள்வது சீனாவுக்கு பிடிக்கவில்லை, சீனா தூண்டி விட்டுத்தான் இடதுசாரிகள் எதிர்ப்பை கிளப்புகிறார்கள் என்றும் அவதூறு செய்யப்படுகிறது.

அணுமின் ஒப்பந்தம் குறித்த எங்கள் சந்தேகங்களுக்கு விளக்கமளிக்காமல் 'கம்யூனிஸ்ட்டுகள் என்றாலே வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடுபவர்கள்; தொழில் வளர்ச்சியை விரும்பாதவர்கள்' என்று கம்யூனிஸ்ட் எதிர்ப்பு பிரசாரத்தை உடனே சிலர் தொடங்கி விடுகிறார்கள். அமெரிக்க ஆபத்தை சுட்டிக்காட்டினால் கம்யூனிஸ்ட்டுகள் ஆதரவை வாபஸ் வாங்கினாலும் பரவாயில்லை என்று மிரட்டுகிறார்கள். இந்த மிரட்டலே ஒரு சூழ்ச்சிதான்.

இந்த சூழ்ச்சிக்கு பலியாகி கோபப்பட்டு மத்திய அரசுக்கு கொடுத்து வரும் ஆதரவை வாபஸ் வாங்கினாலும் பெரிதாக என்ன விளைவு ஏற்பட்டு விடப்போகிறது? இந்த ஒப்பந்தமே இன்று நேற்று வந்ததல்ல. வாஜ்பாய் காலத்தில் இதற்கு வழி வகுக்கப்பட்டது. இன்று நிலை நிறுத்தப்படுகிறது. எனவே ஏகாதிபத்திய சூழ்ச்சிகளை அம்பலப் படுத்துவதன் மூலம் அதன் ஆபத்தை பொது மக்களுக்கு உணர்த்த இந்த விவகாரத்தை கையிலெடுத்துக் கொண்டோம். ஜனநாயக நாட்டில் விழிப்புணர்வு பிரசாரம்தான் அடிப்படையான விஷயம். அதைத்தான் இடதுசாரிகள் பொதுவாக கையாண்டு வருகிறோம்.

அ.மார்க்ஸ்:



அ.மார்க்ஸ்

தொழில் வளர்ச்சி மற்றும் மின்சார உற்பத்தி பற்றி எல்லாம் பேசினீர்கள். நிச்சயமாகத் தொழில் வளர்ச்சி நமக்குத் தேவைதான். இந்தியா ஒரு விவசாய நாடாகவே இருக்க வேண்டுமென்று யாரும் விரும்பமாட்டார்கள். தொழில் வளர்ச்சிக்கு அடிப்படை மின் உற்பத்தி என்பதிலும் யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது. ஆனால் தொழில் வளர்ச்சி என்பதற்காக சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் உட்பட கார்ப்பரேட்களுக்கு ஏராளமான அதிகாரம் வழங்குவதும், ரொம்பவும் ஆபத்தான அணு மின்சாரத்தை ஆதரிப்பதும் எப்படிச் சரியாக இருக்கும்?

மின் உற்பத்தியை அணு ஆற்றல் மூலம் செய்வது என்பதுதான் நம் முன் உள்ள ஒரே வழியா? நம்மிடம் அபரிமிதமாக உள்ள நீராற்றலைப் பயன்படுத்துகிற முயற்சிகளில் இறங்கலாமே. ஒரு பக்கம்

வடமாநிலங்களில் வெள்ளம். இன்னொரு பக்கம் தென்மாநிலங்களில் பஞ்சம். நதிகளின் இணைப்பு, அதன்மூலம் தண்ணீரைத் தேக்கி மின்சாரம் உற்பத்தி செய்தல் என்பது குறித்தெல்லாம் வெறும் வாயளவில் பேசிக் கொண்டிருக்கிற நமது அரசு அணு ஆற்றல் விஷயத்தில் ஏன் இவ்வளவு உற்சாகம் காட்டுகிறது.

அணு ஆற்றல் மலிவானதுமல்ல, சுத்தமானதும் அல்ல.

நான் ஒரு இயற்பியல் ஆசிரியன் என்கிற வகையில் ஒன்றை உறுதியாகச் சொல்ல முடியும். அணு ஆற்றல் மலிவானதுமல்ல, சுத்தமானதும் அல்ல. எந்த உற்பத்தியிலும் கழிவுகள் தவிர்க்க முடியாதவை. அணு உற்பத்தியிலும் கழிவுகள் உண்டு. இந்த அணுக்கழிவுகளை பாதுகாப்புடன் தொலைத்துக் கட்டுவதற்கான வழிமுறைகள் எதையும் இதுவரை அணு விஞ்ஞானிகள் கண்டுபிடிக்கவில்லை. எந்தநாட்டில் அரசியல் விழிப்புணர்வு இல்லாத, இளிச்சவாய் மக்கள் இருக்கிறார்களோ அங்கே கொண்டு போய் புதைப்பது என்பதுதான் இதுவரை வழிமுறையாக இருந்து வந்துள்ளது. தவிரவும் ஒரு அணு உலையின் ஆயுள் சுமார் 30 அல்லது 35 ஆண்டுகள்தான். ஆனால் அதற்குப் பின் பல ஆயிரம் ஆண்டுகள் அது கதிர்வீச்சுத் தன்மையுடையதாகவே இருக்கும். கதிர் வீச்சிலிருந்து மட்டுமல்ல, பயங்கரவாதத் தாக்குதல் முதலியவற்றிலிருந்தும் அதைப் பல்லாயிரம் ஆண்டுகள் பாதுகாத்தாக வேண்டும். இப்போது கணக்கிட்டுச் சொல்லப்படும் அணு மின்சாரத்திற்கான தயாரிப்புச் செலவுகளில் இந்த விஷயங்கள் எல்லாம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. அதனால்தான் சொல் கிறோம், அணுமின்சாரம் *Neither Cheap Nor Clean* என்று.

இன்னொன்றும் இங்கே முக்கியமானது. பிரகாஷ் காரட் கூடச் சொல்லியிருக்கிறார். இன்றுள்ள நிலையில் மொத்த மின் உற்பத்தியில் அணு மின்சாரத்தின் பங்கு 25 சதம் அல்லது 3 சதம்தான். மன்மோகன்சிங் சொல்கிறபடி எல்லாம் நடந்து, ஒப்பந்தம் நிறைவேறி, அமெரிக்கா உதவியுடன் அணு உலைகளெல்லாம் கட்டப்பட்டு மின் உற்பத்தி தொடங்கினாலும்கூட 2020ஆம் ஆண்டில் மொத்த மின் உற்பத்தியில் அணுவின் பங்கு வெறும்

7 சதவீதமாகத்தான் இருக்க முடியும். இவ்வளவு குறைவான மின்சாரத்தை, இவ்வளவு அதிக பணம் செலவு செய்து, இத்தனை ஆபத்துகளையும் எதிர்கொண்டு இந்த முறையில் தயாரிப்பது தேவைதானா? அணுசக்தியின் தேவை குறித்தே இடதுசாரிகள் ஒரு சரியான முடிவெடுக்க வேண்டும். அணு சக்தி தேவை, ஒப்பந்தம்தான் தப்பு என்றால், பின்னாளில் வேறு வழியில்லை எனச்சொல்லி சமரசமாவதற்குத்தான் வழிவகுக்கும்.

கூடங்குளம் அணுஉலை விஷயத்தில் இடதுசாரிகள் முடிவு இப்படித்தான் உள்ளது. உலை வேண்டும் என்றுதான் சொல்கிறீர்கள். இந்த ஒப்பந்தத்தை எதிர்க்கும் பாரதிய ஜனதா கட்சிக்கும், கம்யூனிஸ்ட்களின் எதிர்ப்பும் எந்த அம்சத்தில் வேறுபடுகிறது? அவர்களும் அணு ஆற்றல் வேண்டாம் எனச்சொல்லவில்லை. இந்த வடிவில் ஒப்பந்தம் இருக்கக் கூடாது என்று சொல்கிறார்கள். அதாவது, அணு ஆயுதப் பரிசோதனை செய்யும் உரிமை இந்தியாவுக்கு இருக்க வேண்டும் என்பது மட்டும்தான் அவர்கள் வற்புறுத்துவது. இடதுசாரிகள் இன்னும் ஒருபடி மேலே போய் ஹைட் சட்டம், இந்தியாவின் இறையாண்மை ஆகியவற்றைப் பற்றிப் பேசுகிறார்கள். ஆக வித்தியாசம் ஒன்றும் பெரிய அளவில் இல்லை என்றாகி விடுகிறது.

அமெரிக்காவை ஆதரிப்பதைக் காட்டிலும் சீனா, ரஷ்யா போன்ற நாடுகளை ஆதரிப்பதே சரி.

சீனாவை முன்வைத்து உள்நோக்கம் கற்பிக்கப்படுகிறது என்று நீங்கள் சொன்னீர்கள். அதாவது சீனாவைத் திருப்திப்படுத்த இந்திய கம்யூனிஸ்ட்கள் முனைகிறார்கள் என்று குற்றம் சாட்டப்படுவதைக் குறிப்பிடுகிறீர்கள். இன்றைய சூழலில் இந்தக் குற்றச்சாட்டு எடுபடாது. தொண்ணூறுகளுக்கு முன் இருந்ததுபோல இன்று சீன ஆதரவுக்கட்சி, ரஷிய ஆதரவுக் கட்சி என்றெல்லாம் கிடையாது. இன்னொரு பக்கம் இன்றைய சூழலில் அமெரிக்காவை ஆதரிப்பதைக் காட்டிலும் சீனா, ரஷ்யா போன்ற நாடுகளை ஆதரிப்பது என்பதே சரியான அரசியலாக இருக்க முடியும்.

இன்று உலக அளவில் அமெரிக்கா கண்டு அஞ்சுவது சீனாவைத்தான். ரஷியாகூட 1990களில் இருந்ததைக் காட்டிலும் இன்று வலுவடைந்துள்ளது. யெல்ட்சின் கால ரஷ்யா அல்ல புடின் காலத்து



1975ஆம் ஆண்டில் அணு சோதனை நடத்தப்பட்ட இடத்தை பார்வையிடும், பிரதமர் இந்திரா.

ரஷ்யா. எண்ணெய் வளம் அதன் பலங்களில் ஒன்று. பழைய சோவியத் யூனியனிலிருந்த நாடுகள் எல்லாம் ஒன்றிணைந்து இன்று உருவாக்கியுள்ள கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்த அமைப்பு-*Collective Security Organisation-CSTO* இன்றைய சூழலில் ரொம்பவும் முக்கியமான ஒன்று. அதேபோல சீனாவின் முன்முயற்சியில் இன்று உருவாக்கப்பட்டுள்ள 'ஷங்காய் கார்ப்பரேஷன் ஆர்கனிசேஷன்'-*SCO*என்பது இன்று உலக நாடுகளால் கூர்மையாகக் கவனிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் அமைப்பு. ஆசிய நாடுகள் பலவும், ஈரான், கிர்கிஸ்தான், கஜகிஸ்தான் போன்ற நாடுகளும் இதில் பங்கேற்கின்றன. பாகிஸ்தான், இந்தியா, மங்கோலியா எல்லாம் பார்வையாளர் அந்தஸ்தில் உள்ளன. ஆனால் இந்தியா இதில் தீவிரமாகப் பங்கேற்பது இல்லை. அலட்சியம் செய்கிறது. பிருந்தா காரத் கூட ஒரு முறை இதுகுறித்து பேசினார்.

இன்று *CSTO*வும் *SCO*வும் இணைந்து செயல்படுகின்றன. அமெரிக்க எடுபிடியான *NATO* வுக்கு எதிரான ஒரு வலுவான இயக்கமாக இது உருப்பெற்றுள்ளது. ஒரு துருவ உலகம் என்பதற்குப்

பதிலாக இப்படியான வலுவான பிராந்தியக் கூட்டணிகள் உருவாவது வரவேற்கப்படக் கூடியதுதானே. இதை ஆதரிப்பதுதானே ஒரு நேர்மையான காரியமாக இருக்கும். அதுதானே ஒரு அறம் சார்ந்த அரசியலாகவும் இருக்கும். இந்த விஷயத்திலெல்லாம் இடதுசாரிகள் மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்காதது ஏன்?

ஆட்சியைக் கவிழ்ப்போம் என்பதை கம்யூனிஸ்டுகள் வெளிப்படையாகவே சொல்ல வேண்டும்.

நீங்கள் ஒரு பொறுப்பான எதிர்க்கட்சியின் பொறுப்புமிக்க அகில இந்தியத் தலைவர். எச்சரிக்கையோடு பேச வேண்டிய கடப்பாடு உங்களுக்கு உண்டு. எங்களைப் போன்றவர்கள் கொஞ்சம் வெளிப்படையாகவே சிலவற்றைச் சொல்ல முடியும். அமெரிக்காவால் இங்கே திணிக்கப்பட்டுள்ள பிரதமர் மன்மோகன் சிங்கின் தனிநபர் நேர்மையையே (*Personal Integrity*) நாங்கள் சந்தேகப்படுகிறோம். இந்நிலையில் ஒப்பந்தத்தை நிறைவேற்றும் முயற்சியில் இன்னும் ஓரடி முன்னால் நகர்ந்தால் ஆட்சியைக் கவிழ்ப்போம் என்பதை கம்யூனிஸ்டுகள் வெளிப்படையாகவே சொல்ல வேண்டும்.

நல்லகண்ணு:

அப்படி முடிவெடுப்பதில் அரசியல் ரீதியாக சிரமங்கள் இருக்கின்றன. பல்வேறு விஷயங்களை பார்க்க வேண்டியிருக்கிறது. அதேசமயம் ஆதரவு தெரிவித்து விட்டு இடதுசாரிகள் கண்ணை மூடிக் கொண்டு இருந்து விடுவதில்லை. பல்வேறு நிர்ப்பந்தங்கள் மூலமாக மத்திய அரசை வலியுறுத்தி வருகிறோம்.

சோவியத், சீனா பற்றி நீங்கள் சொன்னீர்கள். எந்தக் காலத்திலும் இந்தியா தொழில் வளர்ச்சியில் முன்னேற வேண்டும் என்று அமெரிக்கா நினைத்ததே கிடையாது. உதவி செய்ததும் இல்லை. நூறு கோடி மக்கள் வாழும் நாட்டை தனது பொருட்களையும் ஆயுதங்களையும் விற்கும் சந்தையாக மாற்றவே அமெரிக்கா திட்டமிட்டு செயல்படுகிறது.

நேரு பிரதமராக இருந்த காலத்தில் குஜராத்தில் பெட்ரோலிய எரிபொருள் இருக்கிறதா என சோதனை செய்ய சோவியத் நிபுணர்களை வரவைத்தார். குஜராத்தில் எண்ணெய் கிணறு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அஸாமில் இருப்பதும்

கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் இதை அமெரிக்கா விரும்பவில்லை. இப்போது சிறப்பாக செயல்பட்டு வரும் நெய்வேலியில் கூட அமெரிக்க நிபுணர்கள் வந்து பார்த்து விட்டு, லிக்னைட் பழுப்பு நிலக்கரி குறைந்த எரிசக்தித் திறனுள்ளது என்றும், இதனால் பலன் கிடையாது என்றும் சொன்னார்கள். ஆனால் இங்கும் சோவியத் நிபுணர்கள் வந்துதான் லிக்னைட் பழுப்பு நிலக்கரியில் அதிக எரிசக்தி இருப்பதை உறுதிப்படுத்தினார்கள்.

இன்று கூட ஈரானிலிருந்து பாகிஸ்தான் வழியாக எரிவாயு கொண்டு வர மத்திய அமைச்சர் மணிசங்கர ஐயர் மூலமாக செய்யப்பட்ட ஒப்பந்தம் வலுக்கட்டாயமாக ரத்து செய்யப்பட்டிருக்கிறது. அணுசக்தியை மட்டுமல்ல எரிபொருள் ஆதிக்கமும் யாருக்கும் போய்விடக்கூடாது என்று அமெரிக்கா நினைக்கிறது. எனவேதான் தங்கள் விருப்பங்களுக்கு தகுந்த மாதிரியான அரசியலை பல்வேறு நாடுகளில் அமெரிக்கா திணித்து வருகிறது.

அவர்களாலேயே உருவாக்கப்பட்ட சதாம் உசேன் இன்று என்ன கதிக்கு ஆளானார். இன்றைய பாகிஸ்தான் நாடே நெருக்கடியில் கிடக்கிறது, இது முஷ்ரப்புக்கும் சேர்த்து ஏற்பட்டுள்ள நெருக்கடிதான். பர்மா, இஸ்ரேல், இந்தோனேஷியா என சர்வாதிகார ஆட்சி முறை வந்துவிட்டது. சர்வாதிகார ஆட்சி முறையானது தொழில் வளர்ச்சியை தடுக்கும். உலக ஆதிக்கத்தை நிலை நிறுத்தும். இப்படி சுற்றிலும் பயமுறுத்தும் நிலைமைகள் தான் இருக்கிறது. எனவே ஒரு அரசாங்கத்தை ஆதரிப்பது, வாபஸ் வாங்குவது இரண்டிலும் நிதானம் தேவை.

அவர்களாலேயே உருவாக்கப்பட்ட சதாம் உசேன் இன்று என்ன கதிக்கு ஆளானார்.

அணு ஆற்றலுக்கு எதிராக நீங்கள் பேசினீர்கள். மின்சாரம் என்பது தொழில் வளர்ச்சிக்கு முக்கியமான தேவைகளில் ஒன்று. எனவே அணு ஆற்றல் மூலம் மின்சாரம் தயாரிப்பதில் தவறு இல்லை.

அ.மார்க்ஸ்:

அணு ஆற்றல் தேவை என்றாலும்கூட அதை இந்திய விஞ்ஞானிகளை வைத்து, இங்கே கிடைக்கும் அபரிமிதமான தோரியத்தைப் பயன்படுத்தி, இந்த ஒப்பந்தம் இல்லாமலேயே உதவி செய்யத் தயாராக உள்ள நாடுகளின் உதவிகளையும் பயன்படுத்தி

இதைச் செய்யலாம். நமது நாட்டில் யுரேனியம் குறைவு. ஆனால் தோரியம் அதிகம். தோரியத்தை நேரடியாகப் பயன்படுத்த முடியாது என்பதுதான் பிரச்சினை. ஆனால் இந்தியா செய்த அணுகுண்டு வெடிப்புச் சோதனைகளை ஒட்டி விதிக்கப்பட்ட தடைகளுக்குப் பின் இந்திய அணு விஞ்ஞானிகள் வெளிஉதவியின்றி இங்குள்ள யுரேனியத்தையும், தோரியத்தையும் பயன்படுத்தி அணு உலையை இயக்கும் முறை ஒன்றை உருவாக்கியுள்ளனர். முதலில் 'அழுத்தப்பட்ட கனநீர் உலை- அதாவது *PHWR* என்பார்கள். பின் அதிலிருந்து கிடைப்பவற்றைப் பயன்படுத்தி வேக ஈனுலை- *FBR* உலைகள், பின் இறுதியாக வளர்ச்சியடைந்த கனநீர் உலை *AHWR* என்கிற மூன்று நிலைகளில் தோரியத்தைப் பயன்படுத்தி அணு ஆற்றலை உற்பத்தி செய்யும் வழிமுறை ஒன்று இங்கே சுயேச்சையாக உருவாகியுள்ளது. அமெரிக்க உதவியோ, ஒப்பந்தமோ தேவையில்லை. நம்முடைய தொழில் வளர்ச்சிக்கு அமெரிக்கா உதவியதில்லை என்று நீங்களே சொன்னீர்கள். அதுதான் உண்மை. இப்போது அமெரிக்கா நம்முடன் ஒப்பந்தத்துக்கு வருவதற்கு காங்கிரஸின் அமெரிக்க சார்பு நிலைதான் காரணம் என்று நான் நினைக்கிறேன்.

நேரு காலத்தில் உருவாக்கப்பட்ட அணிசேராக் கொள்கை, இன்று அணிசேரும் கொள்கையாக மாறிவிட்டது. இஸ்ரேலுடன் நட்பு அதிகமாகிறது. பாலஸ்தீன ஆதரவு குறைகிறது. மன்மோகன்சிங், சோனியா மற்றும் பாரதிய ஜனதா ஆகியோருக்கு வெளியுறவு கொள்கை ஒன்றுதான். ஈரானிலிருந்து பாகிஸ்தான் வழியாக எரிவாயு கொண்டு வரும் ஒப்பந்தம் சாதகமாக முடிந்த பிறகு ரத்தாவதாக அறிவிக்கப்பட்டதன் பின்னணி என்ன? *123* ஒப்பந்தம் போடப்படும் நிலையில் இதுபோன்ற ஒப்பந்தம் போடக் கூடாது என்று அமெரிக்கா நிர்ப்பந்தம் செய்தது. இதற்கு இடதுசாரிகள் எதிர்ப்பு தெரிவித்திருக்க வேண்டும். அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்ற அழுத்தம் கொடுத்திருக்க வேண்டும். மாநில கட்சிகள் இது ஏதோ தங்களுக்கு சம்பந்தமில்லாத பிரச்னை என்று நினைப்பதை தவிர்த்து போராட்டம் நடத்தியிருக்க வேண்டும். குழாய் மூலம் எரிவாயு அளிக்கும் திட்டத்தை இன்று

நேரு காலத்தில் உருவாக்கப்பட்ட அணிசேராக் கொள்கை, இன்று அணிசேரும் கொள்கையாக மாறிவிட்டது.

ஈரான், பாகிஸ்தான் வரைக்கும் மட்டுமே செயல்படுத்தி வேலை நடக்கிறது. இந்திய அரசு ஒத்துழைக்காததன் விளைவு இது. மன்மோகன் தன்னிச்சையாக எடுத்த ரொம்பவும் கேவலமான தேசவிரோத முடிவு இது. இதை நீங்கள் கடுமையாக எதிர்த்திருக்க வேண்டுமே.

மக்கள் சக்தியை திரட்டவில்லை என்று பொதுவாக சொல்லிவிட முடியாது.

இந்த கொந்தளிப்பான சூழலில் பிரதமர் மன்மோகன்சிங், சோவியத் சென்றார். 4 அணு உலைகள் அமைக்கும் ஒப்பந்தத்தில் கையெழுத்து போடப்போவதாக முதலில் கூறப்பட்டது. ஆனால் அதில் கையெழுத்து போடப் போவதில்லை என்ற முடிவோடுதான் அவர் சென்றார். 123 ஒப்பந்தத்தின் முக்கியத்துவத்தை இது குறைத்து விடும் என்பதற்காக அவர் கையெழுத்து போடவில்லையா என்பது நமக்குத் தெரியாது. இதற்கு இடதுசாரிகள் முக்கியத்துவம் தர வேண்டும். மக்களை திரட்டியிருக்க வேண்டும். திரட்டாதது தான் கவலைக்குரிய விஷயம்.

நல்லகண்ணு:

மக்கள் சக்தியை திரட்டவில்லை என்று பொதுவாக சொல்லிவிட முடியாது. நிமிட்ஸ், அமெரிக்க போர்க்கப்பல் சென்னைத் துறைமுகம் வந்தபோது அதை தடுக்கும் போராட்டத்தை கம்யூனிஸ்ட் கட்சிகள்தான் நடத்தியது. அதை செய்யாமல் இருந்திருந்தால் எதிர்க்குரல் இல்லாமல் கப்பலை கொண்டு வந்து நிறுத்தியிருப்பார்கள். 1937ஆம் ஆண்டு கன்னியாகுமரி கடற்கரைக்கு வந்த மகாத்மா காந்தி, "இந்த குமரிக்கடல் பரிசுத்தமானதாகவே இருக்க வேண்டும். கப்பல்கள் வந்து அசுத்தத்தை ஏற்படுத்தக் கூடாது. இதேபோல் எல்லாக் கடற்கரைகளும் இருக்க வேண்டும்" என்றார். ஆனால் இன்று அதை எதிர்பார்க்க முடியாது.

அணுசக்தி இன்று வியாபாரத்துக்குத் தான் பயன்படுத்தப்படுகிறது. ஆயுத உற்பத்தியும், போர்க்கருவி தயாரிப்பும்தான் அதன் பொருளாதார அடித்தளம். அமெரிக்காவிடமிருந்து தான் இந்தியாவும் ஆயுதம் வாங்குகிறது. அமெரிக்காவும் உலக நாடுகளில் தனது ஆயுதங்களை விற்று வருகிறது. ஆனால் அதே சமயம் அணு சக்தியை

மின் உற்பத்திக்கு பயன்படுத்தலாம். தவறு இல்லை. நீங்கள் அணு ஆற்றலே தேவையில்லை என்கிறீர்கள். அறிவியல் விரிவடைந்து வியாபித்து வருகிறது; தொழில்நுட்பப் புரட்சி யுகத்தில் வாழ்கிறோம்; தொலைத் தொடர்பு அதிகரிப்பும், விண்வெளிப் பயணமும் நாளுக்கு நாள் புதிய அதிசயங்களைக் கண்டுபிடித்து வருகிறது. அப்படியானால் மாற்று என்ன என்பது குறித்த விவாதங்கள் விஞ்ஞானிகள் மட்டத்தில் தொடங்க வேண்டும்.

சோவியத் வீழ்ச்சியிலிருந்து நாம், குறிப்பாக இடதுசாரிகள் பெற்ற படிப்பினை என்ன?

ப.திருமாவேலன்:

அணு ஆயுதத்தை பயன்படுத்துவது, அணு ஆற்றல் ஒரு நாட்டின் வீரத்தோடு சம்பந்தப்பட்டதாக கருதப்படுகிறது. அணுவை பயன்படுத்துவதை ஆண்மையாக(?) பெருமை பீத்திக் கொள்கிறார்கள். 1975 ஆம் ஆண்டில் இந்திரா காந்தி இதை செய்தபோது இரும்பு மனுஷியாக அவர் வர்ணிக்கப்பட்டார். போக்ரானில் அணுகுண்டு வெடிப்பு சோதனை நடத்தியபோது வாஜ்பாய்க்கு ஹீரோ அந்தஸ்து கிடைத்தது. எனவே பொதுமக்கள் மத்தியில் உள்ள இதுபோன்ற கற்பிதங்கள் கடும் பிரசாரங்கள் மூலமாக துடைத்தெறியப்பட வேண்டும்.

இதுபற்றி பேசும்போது இரண்டு பேருமே சோவியத் பற்றி குறிப்பிட்டீர்கள். சோவியத்தின் வீழ்ச்சிதான் அமெரிக்கா பிரமாண்டமாக எழக் காரணம் என்பது உண்மைதான். சோவியத் இருந்திருந்தால் இன்று அமெரிக்கா கொஞ்சம் அடக்கி வாசிக்கும் என்பதும் உண்மைதான். ஆனால் விழும்போது (1990களில்) இருந்த சோவியத் மக்களுக்கானதா? ஏகாதிபத்திய தன்மை இல்லாததா? அதன் வீழ்ச்சியிலிருந்து நாம், குறிப்பாக இடதுசாரிகள் பெற்ற படிப்பினை என்ன?

நல்லகண்ணு:

சோவியத் வீழ்ச்சியை கேள்விப்பட்டபோது எங்களுக்கே அதிர்ச்சியாக இருந்தது.

சோவியத்தில் 1917 அக்டோபர் புரட்சிக்கு முன்னதாகவும், பின்னதாகவும் ரஷ்ய போல்ஷ்விக் கட்சியின் தலைமை காரணமாக சோஷலிசம் அங்கு நீண்டகாலம் நிலைக்க முடிந்தது. ஆனால் இரண்டாம் உலகப் போரில் அதிகமான சேதங்கள் அடைந்த நாடு சோவியத். அதன் பிறகுதான் அணு

உற்பத்தியில் சோவியத் கவனம் செலுத்தியது. விண்வெளி ஆய்வு செய்தார்கள். அகில உலகுக்கு யார் தலைமை தாங்குவது என்பதில் அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் போட்டி ஏற்பட்டது. அமெரிக்க பாணிமுறை சோவியத்திலும் பின்பற்றப்பட்டது. விருப்பப்படி பொருளாதார திட்டத்தில் மாறுதல்கள் செய்து கொண்டார்கள். என்றாலும் இரண்டாம் உலகப் போரில் பாசிசத்தை முறியடித்த பெருமை சோவியத்துக்கே உரியது.

அமெரிக்காவை தனியாதிக்கம் செய்ய முடியாமல் சோவியத் தடுத்து வந்தது. சீனாவுக்கு ஆதரவு தந்து வந்தது. கியூபாவுக்கு படை அனுப்புவதை ரஷ்யா தடுத்து வந்தது. எனவேதான் ரஷ்யா இரும்புத் திரை போட்ட நாடு என்று உலக முதலாளித்துவம் பிரசாரம் செய்தது. ஸ்டாலினுடைய மறைவுக்குப் பிறகு ரஷ்யாவை ஜனநாயகப்படுத்த வேண்டும் என்று பேச ஆரம்பித்தார்கள்.

சோசலிசம் என்பது ஒரு புதிய சமூக அமைப்பு. அதை நடைமுறைப்படுத்தும்போது அவர்களுக்கு பல சிக்கல்கள் வந்தது. பொருளாதார விவகாரங்களிலும் தவறுகள் நடந்தது. அதற்காக தத்துவம் தவறானதல்ல. சீனா, வியட்நாம், கியூபா, நேபாளம் போன்ற நாடுகளில் மார்க்சீயத்துக்கு ஏற்பட்ட செல்வாக்கு குறைத்து மதிப்பிடக்கூடியதல்ல.

அ.மார்க்ஸ்:



சோவியத் ரஷ்யா இருந்தவரை அமெரிக்கா தன் விருப்பம்போல நடக்க இயலவில்லை. ஒரு துருவ உலகமாக உலகம் ஆகவில்லை. சோவியத் யூனியன் வலிமையுடன் இருந்திருந்தால் இந்த ஆப்கானிஸ்தான், ஈராக் படை எடுப்புகளெல்லாம் நடந்திருக்குமா என்பதெல்லாம் கூட ஐயமே. பல நாடுகளில் நடந்த விடுதலைப் போராட்டங்களுக்கு சோவியத் ரஷ்யா உதவி செய்துள்ளதும் உண்மைதான். ஆனால் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் மீது கம்யூனிசத்தின் பெயரால் அது செலுத்திய ஆதிக்கத்தை நாம் மறந்துவிட முடியாது. ஹங்கேரி, செக்கோஸ்லோவியா நாடுகளின் மீது செலுத்தப்பட்ட அடக்குமுறைகளெல்லாம் இன்னும் அந்த மக்களுக்குச் சிம்ம சொப்பனமாகவே உள்ளது. ஆனால் அதற்காக சோவியத் ரஷ்யாவை சமூக

ஏகாதிபத்தியம் என வரையறுத்த மாவோயிஸ்டுகளிடம் எனக்கு உடன்பாடில்லை. நான் ஒரு மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சியில் இருந்து செயல்பட்டுக் கொண்டிருந்தபோது இந்தக் காரணத்திற்காகவே நான் அதிலிருந்து வெளியேற நேரிட்டது. அடுத்த சில ஆண்டுகளிலேயே நம் கண்முன் அது உடைந்து சிதறியது. ஏகாதிபத்தியமாக இருந்திருந்தால் அவ்வளவு சுலபமாக அப்படி ஆகியிருக்காது.

மாவோயிஸ்டுகள் சொல்லும் சமூக ஏகாதிபத்தியமாக அது இல்லை என்பதால் அது ஒரு சோசலிச நாடு என்று கூறவும் முடியாது. இந்த அம்சத்தில் எங்களைப் போன்றவர்களால் இங்குள்ள இடதுசாரிக் கட்சிகளின் கருத்தையும் ஏற்க இயலவில்லை. அதன் கட்டுமானத்தில், அல்லது தொடர்ச்சியில் சில கோளாறுகள் இருந்ததாக நீங்களே சொல்லியுள்ளீர்கள். சோவியத் யூனியனும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் இன்று வீழ்ந்ததென்றால் அதற்கு புறக்காரணங்களை மட்டுமே நாம் சொல்ல முடியாது. அமெரிக்காவும் இதர முதலாளித்துவ நாடுகளும் சோவியத் யூனியனைக் குறிபார்த்துக் காத்திருந்தது உண்மைதான். எழுபதாண்டு காலம் அவர்கள் காத்திருந்தார்கள். நம்முடைய பாரதியாரே கூட அதைப் பற்றிச் சொல்லியுள்ளார். உரலுக்கு ஒரு பக்கம் இடி-இந்த லெனினுக்கு எத்தனை பக்கம் இடி என்றார்.

ஆனால் சோவியத் சிதைந்ததற்கு இது மட்டும் காரணமில்லை. உள்ளுக்குள் பிரச்சினைகள் இருந்தன. செங்கொடிக்குக் கீழிருந்த அத்தனை நாடுகளிலும் அந்தந்த நாட்டு மக்களே அவைகளைத் தூக்கி எறிந்ததை நாம் கண்முன் கண்டோம். சீசெஸ்கு கொல்லப்பட்டது, ஸ்டாலின் சிலைகள் உடைக்கப்பட்டது இதிலெல்லாம் இருந்த மக்கள் பங்கேற்பை நாம் மறக்க முடியாது. எல்லாவற்றையும் அமெரிக்க உளவாளிகள் செய்தனர் என்று சொல்லித் திருப்தி கொள்வது பூனை கண்களை மூடிக் கொள்வது போலத்தான்.

மாவோயிஸ்டுகள் சொல்லும் சமூக ஏகாதிபத்தியமாக அது இல்லை

சோவியத் யூனியனில் என்றைக்குமே சோஷலிசம் நடைமுறையில் இல்லை. "எல்லா அதிகாரங்களும் சோவியத்திற்கே" என்று முழங்கினார்கள்.

சோவியத்திடம் அதிகாரம் இருந்தது உண்மைதான். ஆனால் அது மக்கள் அதிகாரமாக மாறவில்லை. கட்சி அதிகாரம்தான் அங்கு நிலவியது. ஒரு கட்சி ஆட்சிமுறையில் கட்சி அதிகாரம் என்பது நிச்சயமாக சர்வாதிகாரம்தான். கட்சித் தலைவர்கள் சுல்தான்களைப் போல ஆனார்கள்.

புரட்சிக்குப் பிந்திய ரஷ்யாவின் தனியுடமை ஒழிக்கப்பட்டது.

இந்த விஷயத்தில் ஒன்றை நான் அழுத்திச் சொல்ல விரும்புகிறேன். சோவியத் யூனியனில் இந்தப் பிரச்சினைகள் எப்போதிலிருந்து தொடங்கியது என்பதில் பலவிதமான கருத்துக்கள் உள்ளன. ஒரு சிலர் குருஷ்சேவ்வுக்குப் பின்னால்தான் எல்லாம் கெட்டுப்போயிற்று என்பார்கள். இப்படிச் சொல்பவர்கள் ஸ்டாலின் காலத்தைப் பொற்காலம் என்பார்கள். இன்னும் சிலர் ஸ்டாலினை இட்லருக்கு ஒப்பிடவும் தயங்க மாட்டார்கள். ஸ்டாலின்தான் சோஷலிசத்தைக் கெடுத்து ரஷ்யாவில் ஒரு அரசு முதலாளித்துவம் தொடங்கியதற்குக் காரணம் என்பார்கள். லெனின் காலத்தை ஒரு லட்சிய சோஷலிசக் காலமாகக் கருதுவார்கள். என்னைப் பொருத்தமட்டில் ஆரம்பம் முதலே அங்கு தவறுகள் நடந்தன. சோஷலிசக் கட்டுமானம் குறித்த போல்ஷ்விக் கட்சியின் அணுகுமுறையிலேயே தவறுகள் இருந்தன.

புரட்சிக்குப் பிந்திய ரஷ்யாவின் தனியுடமை ஒழிக்கப்பட்டது. பெருந்தொழில்கள் எல்லாம் அரசுடைமையாக்கப்பட்டன. நிலவுடைமை ஒழிக்கப்பட்டு கூட்டுப்பண்ணைகள் உருவாக்கப்பட்டன. சோவியத்கள் உருவாக்கப்பட்டு அதிகாரம் அவற்றிடம் சென்றது. எல்லாம் சரிதான். ஆனால் இவை மட்டுமே சோஷலிசம் அல்ல. தனியுடைமையை ஒழிப்பது உலக முதலாளியத்திலிருந்து துண்டித்துக் கொள்வது, மையப்படுத்தப்பட்ட திட்டமிடுதல், உற்பத்தி சக்திகளை வளர்ப்பது என்பதெல்லாம் சோஷலிசத்திற்கான அவசிய நிபந்தனைகள் என்பதில் நமக்கு ஐயமில்லை. ஆனால் இவை போதுமான நிபந்தனைகள் *Sufficient conditions* அல்ல. நகரம் X கிராமம்; தொழிலாளி X விவசாயி; மூளையுழைப்பு X உடலுழைப்பு முதலிய சமூக ஏற்றத்தாழ்வுகள் நீக்கப்பட வேண்டும். கூலியில் அதிக ஏற்றத்தாழ்வு இருக்கக் கூடாது.

எல்லாவற்றைக் காட்டிலும் உற்பத்தி சக்திகளின் மீது அடிப்படை வர்க்கம் அதாவது தொழிலாளிகள், விவசாயிகள் ஆகியோரின் கட்டுப்பாடு இருக்க வேண்டும். உள்ளூர் அளவிலும், ஒட்டுமொத்தமாக பொருளாதார அளவிலும், சமூக நிர்வாக அளவிலும் பாட்டாளி வர்க்கத்திடம் நேரடியாக அதிகாரம் அமைந்திருக்க வேண்டும். கொள்கை உருவாக்கத்தில் மட்டுமல்ல; அதைச் செயல் படுத்துவதிலும் அவர்களின் கட்டுப்பாடு இருக்க வேண்டும். அப்போதுதான் அங்கே உண்மையான அரசியல், சமூக ஜனநாயகம் நிறுவப்படும்.

சோவியத் யூனியனில் இது நடக்கவே இல்லை. பாட்டாளி வர்க்கம் என்பதைப் பாட்டாளி வர்க்கக் கட்சி பிரதிநிதித்துவப்படுத்தும் என்று கூறி எல்லா அதிகாரங்களும் கட்சிக்கு மாற்றப்பட்டது. எனவே அங்கே அடிப்படை வர்க்கம் முதலாளித்துவ நாடுகளைப் போலவே அதிகாரமற்றதாக இருந்தது. மக்களுக்கு அடிப்படை ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டன. இந்தியா, பாகிஸ்தான் முதலான நாடுகளில் உள்ள 'ஹேபியஸ் கார்பஸ்' உரிமை கூட அங்கு இருந்ததில்லை. இந்த நாடுகளில் ஹேபியஸ்



லெனினுடன்
ஸ்டாலின்

காா்பஸ் உரிமை நெருக்கடி நிலை காலத்தில்தான் ரத்து செய்யப்படுகிறது. ஒருவகையில் பார்த்தால் சோவியத் யூனியனில் எல்லாக் காலங்களிலுமே ஒருவித நெருக்கடி நிலை அமுலில் இருந்தது எனலாம். 'பாட்டாளி வர்க்கத்தைக் கட்சி பிரதிநிதித்துவம் செய்யும் என்பது கட்சியை 'சென்ட்ரல் கமிட்டி' பிரதிநிதித்துவப்படுத்தும் சென்ட்ரல் கமிட்டியை, செயலாளர் பிரதிநிதித் துவப்படுத்துவார் என..... சர்வாதி காரத்திற்கும் வழிவகுக்கப்பட்டது.

'புதிய பொருளாதாரக் கொள்கை' என்கிற பெயரில் முதலாளித்துவ நடைமுறைகள் புகுத்தப்பட்டன.

இன்னொரு பக்கம் ரஷ்யாவில் தொழில்துறைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு விவசாயம் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டது. சோவியத் அதிகாரத்துடன் பெருந் தொழில் வளர்ச்சி, உயர் தொழில் நுட்பம் ஆகியவை இருந்தாலே சோஷலிசம் தானாகவே வந்துவிடும் என லெனின் கருதினார். சோவியத் + எலக்ட்ரிசிடி (மின்சாரம்) = சோஷலிசம் என்று கூட அவர் கூறினார். கம்பெனி நிர்வாகங்கள் முதலியவற்றில் முதலாளிய வடிவங்கள் அப்படியே கடைபிடிக்கப்பட்டால்தான் முதலாளித்துவத்துடன் போட்டியிட முடியும் என்று அவர் நம்பினார். அந்த காலகட்டத்தில் உலக அளவில் 'தொழிலாளர் கவுன்சில்' இயக்கம் பிரபலமாக இருந்தது. தொழிற்சாலை நிர்வாகங்கள் தொழிலாளர்களிடமே இருக்க வேண்டும் என்பதுதான் அது. இரட்டை ஆட்சி (*Diarchy*) என்கிற கருத்தும் கூட இந்தப் பின்னணியில்தான் உருவானது. இந்த நிலையும் லெனின் காலத்திலேயே முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. 'புதிய பொருளாதாரக் கொள்கை' என்கிற பெயரில் முதலாளித்துவ நடைமுறைகள் புகுத்தப்பட்டன. தொழிற்சாலைகள் லாபகரமாகச் செயல்படுவதற்கு பழைய முதலாளிய நிர்வாகங்களிடமே கொடுக்க வேண்டும் என்று கூட ஒரு கட்டத்தில் லெனின் கூறினார். இதை புகாரின், ஓசின்ஸ்கி போன்றோர் கடுமையாக எதிர்த்தனர். ஓசின்ஸ்கி ஓரங்கட்டப்பட்டு வெளியேற்றப்பட்டார்.

சோஷலிச உள்ளடக்கம் இருந்தால் போதும் முதலாளிய வடிவம் பற்றிக் கவலையில்லை என போல்ஷ்விசம் கருதியது. அதனுடைய இலக்கியக் கொள்கையில் இது வெளிப்படையாகத் தெரிந்தது. சோஷலிச உள்ளடக்கம் + எதார்த்தவாத வடிவம்



சோவியத்தில் லெனின் சிலை இடிக்கப்பட்ட போது....

என்பதே சோஷலிச எதார்த்தவாதம். இந்த வகையில் புதிய இலக்கிய வடிவங்கள், கோட்பாடுகள், சோதனை முயற்சிகள் எல்லாம் புறக்கணிக் கப்பட்டன.

கல்வி, மருத்துவம் இப்படி எல்லாவற்றிலும் முதலாளித்துவ நடைமுறைகளே பின்பற்றப்பட்டன. கல்வியை எடுத்துக் கொண்டால் பாடத் திட்டங்களை மட்டும் மாற்றினால் போதும் கற்பித்தல் வடிவம், ஆசிரிய - மாணவர் உறவு, தேர்வு முறை எல்லாம் முதலாளிய வடிவில் இருப்பதில் தவறில்லை எனக் கருதினார்கள். அமெரிக்காவிலிருந்து கொண்டு ரஷ்யப் புரட்சியை ஆதரித்தவரும், லெனினுடன் தொடர்பு கொண்டிருந்தவருமான எம்மா கோல்ட்மான் என்கிற 'அனார்கிஸ்ட்' லெனின் காலத்திய ரஷ்யாவிற்கு வந்து பார்த்துவிட்டு அங்கிருந்த கல்வி முறையின் முதலாளித்துவ வடிவைக் கண்டு மனம் நொந்து எழுதினார். குடும்பம், பாலியல் நிலை குறித்த கருத்தியல்களும் முதலாளித்துவத் தன்மையிலேயே அமைந்தன.

ஒரு பக்கம் கட்சியிடம் குவிந்த அபரிமிதமான அதிகாரம், இன்னொரு பக்கம் முதலாளித்துவ வடிவம் ஆகியன புரட்சிக்குப் பிந்திய நாடுகள் ஒரு எதேச்சதிகார சமூக கட்டமைப்பை உருவாக்கின. உள்நாட்டு அரசியல்தானே வெளியுறவிலும் பிரதிபலிக்கும். பரஸ்பர பொருளாதார உதவிக் கவுன்சில், 'கோமிகான்' போன்ற பெயர்களில் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் குறிப்பாக பல்கேரியா, ஹங்கேரி,

கிழக்கு ஜெர்மனி, செக்கோஸ்லாவியா, போலந்து ஆகிய நாடுகள் அடக்கப்பட்டன. சோவியத் வீழ்ச்சி இப்படித்தான் தொடங்கியது.

நீங்கள் சொல்வது போல சோவியத் வீழ்ச்சியை, மார்க்சியத் தத்துவத்தின் வீழ்ச்சியாக நானும் கருதவில்லை. இன்றும் கூட முதலாளியச் சுரண்டலை விமர்சிக்கும் ஆற்றல் வாய்ந்த கருவியாக அதுதான் இருக்கிறது. சோவியத் வீழ்ச்சிக்காக கம்யூனிஸ்ட்கள் குற்ற உணர்ச்சி கொண்டு ஒதுங்கத் தேவையில்லை. ஆனால் அதே நேரத்தில் பிரச்சினை என்ன என்பது குறித்து வெளிப்படையான விவாதம், ஆய்வு தேவை. அவை நடந்துள்ளனவா?

நல்லகண்ணு:

இருபதாம் நூற்றாண்டில் ஒரு கம்யூனிஸ்டின் முதல் பெரும் அரசியல் கடமை ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடுவதுதான் என்று வரையறுக்கப்பட்டது.

ஏகாதிபத்திய எதிர்ப்பை, மார்க்சீயத் தத்துவத்தின் இருபதாவது நூற்றாண்டின் அரசியல் பொருளாதார மாற்றத்துக்கான கட்டமாக லெனின் கருதினார்; அன்றைய உலக ஆதிக்க சக்தியாக விளங்கிய முதலாளித்துவத்தின் வளர்ச்சிக் கட்டத்தையும் அதன் தன்மையையும் விளக்கி “ஏகாதிபத்தியம்” *(Imperialism)* என்ற நூலை எழுதினார்; இந்நூல் மார்க்சுக்குப் பின்னால், மார்க்சீயத்தின் கண்ணோட்டத்தில் எழுதப்பட்ட புதிய தொடர்ச்சியாகக் கருதப்படுகிறது.

ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடுவது தான் கம்யூனிஸ்டின் கடமை.

இதன் தாக்கமாகத்தான், உலகில் பல்வேறு நாடுகளைப் பங்கு போட்டுக்கொண்டு ஆதிக்கம் செலுத்திய ஐரோப்பிய ஏகாதிபத்திய நாடுகளான போர்ச்சுக்கல், பிரிட்டன், பிரான்ஸ், ஸ்பெயின் ஆகிய நாடுகளை எதிர்த்து, அடிமைப்பட்ட நாடுகளில் விடுதலைப் போராட்டம் வெடித்துக் கிளம்பியது; விடுதலைப் போராட்டங்களில் உறுதியாகக் களத்தில் இறங்கிப் போரிட்ட தலைவர்கள், கம்யூனிஸ்ட் இயக்கத்தின்பால் ஈர்க்கப்பட்டார்கள்; இரண்டாவது உலகப் போர் முடிந்தும், வியட்நாமில் பிரெஞ்சு, அமெரிக்க ஏகாதிபத்தியங்களை எதிர்த்து இருபதாண்டுகாலம் தொடர்ந்து வீரச்சமர் புரிந்து

வியட்நாம் வெற்றி வாகை சூடியது. அதன் தலைவர் ஹோ-சி-மின் லெனினைப் பாராட்டினார்; ஏகாதிபத்திய எதிர்ப்புப் போருக்கு அறிவு ஆயுதமாக லெனினது ஏகாதிபத்திய எதிர்ப்புத் தத்துவமே என்று விளக்கினார்; தன்னைப் போலவே லெனினும் பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் மாவீரனாக லெனினைப் பார்ப்பதாகக் கூறினார்.

இந்தியாவிலும் காங்கிரஸ் தேசீய இயக்கம் துவக்க காலத்தில் பிரிட்டிஷ் ஆட்சி அதிகாரத்தில் பங்கு கேட்பதோடு, இந்தியாவுக்கு குடியேற்ற நாட்டு அந்தஸ்து (Dominion Status) வேண்டுமென்று தான் தீர்மானம் போடப்பட்டது. 1923இல் கயாவில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் மார்க்சீய சிந்தனையாளர் ம.சிங்காரவேலர் கலந்து கொண்டார்; 'தோழர்களே' என்று பேசத் தொடங்கியதே, பிரதிநிதிகளுக்கு ஆச்சரியமாக இருந்தது; 'இந்தியாவுக்கு முழு சுதந்திரமே நமது இலட்சியமாகும்' என்று அறுதியிட்டுக் கூறினார்; ஏழு மாநாடுகள் கழித்து, 1929இல் நடந்த லக்னோ மாநாட்டில்தான் முழு விடுதலைத் தீர்மானம் ஒத்துக்கொள்ளப்பட்டது. 1930 ஜனவரி 26 சுதந்திர தினக் கோரிக்கை நாளாக நாடெங்கும் கிளர்ச்சி துவக்கப்பட்டது.

ருஷ்ய நாட்டில் 1917இல் நடந்த நவம்பர் புரட்சியை மகாகவி பாரதிதான் இந்தியாவில் முதன்முதல் பாராட்டிப் பாடல் இயற்றினார்.

"ஆகா" என்றது பார் யுகப்புரட்சி என்று புகழ்ந்தார். இது உலகத்துக்கே மாற்றத்தை அளிக்கும் உலகப்புரட்சி என்று பாடினார்.

நவம்பர் புரட்சியை பாரதிதான் இந்தியாவில் முதன்முதலாக பாராட்டிப் பாடல் இயற்றினார்.

சோவியத் புரட்சியை முளையிலேயே கிள்ளி எறிந்து விட ஏகாதிபத்திய நாடுகள் பெரும் சூழ்ச்சியில் ஈடுபட்டன. ருஷ்ய நாட்டின் நிலப்பிரபுக்களைத் தூண்டி விட்டார்கள்; உள்நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தினார்கள். ருஷ்ய நாட்டைச் சுற்றி பல எல்லைகளிலும் அந்நியப் படையெடுப்புகளும் தாக்குதல்களும் துவங்கப்பட்டன.

சோவியத் புரட்சிக்கு துவக்கத்தில் ஏகாதிபத்திய நாடுகள் மூலம் ஏற்படுத்தப்பட்ட தொல்லைகள் உலகத்திலுள்ள முற்போக்கு சிந்தனையாளர்களைப் பாதித்தது.

மகாகவி பாரதியார் எழுதினார். "பேய்க்கனவு" என்ற கட்டுரையில் குறிப்பிடுகிறார்; உரலுக்கு ஒரு பக்கம் இடி; மத்தளத்துக்கு இருபக்கமும் இடி; ஆனால் இந்த மாபெரும் லெனினுக்கு எத்தனை பக்கத்திலிருந்து தாக்குதல்" என்று தனது தூக்கத்திலும் கண்ட வேதனைக் கனவைப் பதிவு செய்திருக்கிறார். சோவியத் புரட்சி, உலகெங்கும் அடிமைப்பட்டுக் கிடந்த ஆசிய நாடுகளின் விடுதலை இயக்கத்துக்கு ஊக்கத்தைக் கொடுத்தது; மேலும் உறுதியாகப் போராடுவதற்கு வழிகாட்டியாகவும் அமைந்தது;

பொருளாதார அடித்தளத்தை அமைப்பதற்கு சோவியத் அரசு பெரும்பாடுபட்டது.

சோவியத் புரட்சி வெற்றி பெற்றதும் ருஷ்ய ஜார் சக்கரவர்த்தியின் அதிகாரத்துக்குட்பட்ட பல்வேறுபட்ட தேசீய இனங்களின் கூட்டமைப்பாக லெனின் வடிவமைத்தார். ருசியக் குடியரசு என்று அறிவிக்கவில்லை; ருஷ்யப் பேரினவாத ஆதிக்கம் உருவெடுத்து விடக்கூடாதென்பதில் எச்சரிக்கையாக இருந்தார்; சோவியத் சோஷலிஷக் கூட்டமைப்பு *(Union of Soviet Socialist Republic-USSR)* என்று அழைக்கப்பட்டது.

உலக நாடுகளோடு சமாதானம்; உழுபவர்களுக்கு நிலம் சொந்தம்; பழைய கடன்கள் அனைத்தும் தள்ளுபடி என்று முதல் அரசாணை பிறப்பிக்கப்பட்டது; உலகறிய அறிவிக்கப்பட்டன. சோஷலிசக் கட்டுமானத்துக்கான திட்டமிட்ட பொருளாதார அடித்தளத்தை அமைப்பதற்கு சோவியத் அரசு பெரும்பாடு பட்டது. தொழில் வளர்ச்சிக்கு புதிய பொருளாதாரத் திட்டம் தீட்டப்பட்டது; நாட்டின் அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்ப்பதில் முழுக்கவனம் செலுத்தப்பட்டது. உலகலெங்கும் முதலாளித்துவ அமைப்புகளும் சூழ்ந்துள்ளன; ஏகாதிபத்திய வல்லரசுகளும் வல்லூறுகளாகப் பதி போட்டு பறந்து வந்து தாக்கின. இதே வேளையில், அடிமை நாடுகளின் விடுதலைக்கான கருத்து வலுப்படு வதற்காக ஆதரவளித்து வந்தது.

சோஷலிசக் கட்டமைப்பு வலுப்பெற்று வந்தபோதுதான் இரண்டாம் உலகப் போர் வெடித்தது. ஜெர்மன் பாசிஸம் இயக்கத்தின் தலைவனாக ஹிட்லர் விளங்கினான்: கிழக்கு ஐரோப்பிய நாடுகளைக் கைப்பற்றினான்; 1939இல் இரண்டாம்

உலகப் போர் வெடித்தது; ஹிட்லர் சோவியத் ருஷ்யாவின் மீது தாக்குதல் தொடுத்தான்; பிரிட்டனும் பிரான்சும் அமெரிக்காவும் சோவியத் ருஷ்யாஅழியட்டும் என்று பார்த்துக் கொண் டிருந்தன; அதைத் தடுக்க மூன்றாவது போர் முனையைத் துவக்கத் தயங்கினார்கள்; சோவியத் யூனியன் தன்னந்தனியாக நின்று போராடியது. சோவியத் செஞ்சேனை பாசிஸப் படைகளைத் துரத்தியடித்தது; பெர்லின் வரை விரட்டிச் சென்றது; பெர்லின் மாளிகையிலும் செஞ்சேனை வெற்றிக் கொடி நாட்டியது; நேரடியாகப் போர்க்களத்தில் தலையிடாதிருந்த அமெரிக்கப்படைகள், இறுதி முத்திரை பதிப்பதற்காக ஜெர்மனியில் சில நகரங்களில் குண்டுகளை வீசித் தாக்கியது, ஜப்பானில் நாகசாகி, ஹிரோஷிமா நகரங்களில் இரு அணுகுண்டுகளை வீசி அழித்தது; மறைமுகமாகத் தங்கள் மேலாதிக்கத்தை நிலை நிறுத்தத் திட்டமிட்டது. செஞ்சேனையின் வீரத்தை உலகப்புகழ் எழுத்தாளர்களெல்லாம் வீரகாவியமாகப் படைத்தார்கள். சோவியத் யூனியனில்தான் இரண்டாவது உலகப் போரில் இரண்டு கோடி பேர் மடிந்தார்கள்; போர் முடிந்ததும் சோவியத் யூனியன் அரசு பேரழிவிலிருந்து மறுவாழ்வுக்கான திட்டமிட வேண்டியிருந்தது; வரலாறு காணாத முன்னேற்றம் கண்டது. உலகில் முதன்முதல் சந்திர மண்டலத்தில் கால் பதித்து சரித்திரம் படைத்தது சோவியத் அறிவியல் வளர்ச்சியாகும். மனித குலத்தின் இதயத்தில் ஈரம் இருக்கிறவரை சோவியத் செஞ்சேனையின் வீரம் பாராட்டப்படும் என்று சாமிநாத சர்மா அவர்கள் சோவியத் ருஷ்யா என்ற நூலில் எழுதினார்.

மனித குலத்தின் இதயத்தில் ஈரம் இருக்கிறவரை சோவியத் செஞ்சேனையின் வீரம் பாராட்டப்படும்

இரண்டாவது உலகப்போர் முடிந்ததும் அதைத் தொடர்ந்தேஅமெரிக்க ஏகாதிபத்தியம் சோவியத் யூனியனின் பெருமையைச் சிறுமைப்படுத்தவும், புதிதாகத் தோன்றிய சோஷலிச நாடுகளைச் சீர்குலைக்கவும், பரவிவரும் முற்போக்கு இயக்கங்களை முடக்கவும் மறைமுகமான பனிப்போரைத் தொடங்கியது.

இத்தனை தொல்லைகளையும் தாங்கிக் கொண்டு, சோவியத் நாட்டில் சோஷலிசம் நடை முறைப்படுத்தப்பட்டது. கல்வி, சுகாதாரம், வேலை

வாய்ப்பு அனைவருக்கும் உறுதிப்படுத்தப்பட்டது. முதியவர்களுக்கும், குழந்தைகளுக்கும் முன்னுரிமைகள் வழங்கப்பட்டன. உலகெங்கும் முற்போக்காளர்களுக்கும், தொழிற்சங்கங்களுக்கும் ஆதர்சமாக விளங்கியது.



சோவியத் சோஷலிச அமைப்பின் தாக்கத்தை உணர்ந்த முதலாளித்துவ அரசுகள் தங்கள் நாட்டிலும் சலுகைகள் வழங்க முற்பட்டன. மக்கள் நல்வாழ்வு அரசுத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

அ.மார்க்ஸ்:

தொழிற்சாலைகளை நிர்வாகம் செய்யும் வாய்ப்பை அனுபவம் வாய்ந்த முதலாளிகளிடமே ஒப்படைக்கலாம் என்று லெனின் காலத்தில் கூறப்பட்டதை எதிர்த்தவர்கள் கட்சியிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். ஒசின்ஸ்கி பற்றி முன்பே சொன்னேன்.

நல்லகண்ணு:

ஜார்மன்னன் காலத்தில் பின்தங்கிய நிலையிலிருந்த ருஷ்ய நாட்டைத் தொழில் வளமாக்கத் திட்டமிடப்பட்டது. சோவியத் ஆட்சிக் கட்டமைப்பு+மின்சாரம் இரண்டும் சேர்ந்து இணைந்து திட்டமிட்டு முன்னேற வேண்டுமென்று லெனின் தலைமையில் சோவியத் ஆட்சி முயற்சி எடுத்தது.

கொடிய அடக்குமுறையிலிருந்து விடுபட்ட முற்போக்காளர்கள் சிலருக்கு அதிதீவிர உணர்வு ஏற்பட்டது. தொழிற்சாலையில் நிர்வாகிகளாகப் பணியாற்றிய பொறியாளர்களின் மீதும் தாக்குதல் தொடுக்கப்பட்டது. இப்போக்கு பரவலாகியது. லெனின் தலையிட்டார். புரட்சி நடத்துவது வேறு; புரட்சியின் திட்டங்களை நாட்டின் மறுசீரமைப்புக்கு தொழில் வளர்ச்சி பற்றிய அனுபவமும் நிர்வாகப் பயிற்சியும் பெற்ற பொறியாளர்களையும் நிர்வாகிகளையும் முதலாளிகளைப் போல் எதிரிகளாகக் கருதக்கூடாது என்று அறிவித்தார். வெளியேறிய பொறியாளர்களையும் மீண்டும் நாட்டுக்குத் திரும்பி வந்து ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். புதிய சோவியத் ஆட்சியின் மீது அக்கறை கொண்ட

அறிவாளிகளிருந்தாலும் சோவியத் யூனியன் வரலாமென்று வேண்டுகோள் விடுத்தார். அழைப்பை ஏற்று சோவியத் ருஷ்யா சென்ற இந்தியர்களும் உண்டு. இத்திட்டம் *NEP* -புதிய பொருளாதாரக் கொள்கை என்று அழைக்கப்பட்டது. முதலாளி களிடம் தொழிற்சாலைகளை ஒப்படைப்பதாகச் சொன்னதாகத் தகவல் எதுவும் கிடையாது.

சோவியத் வீழ்ச்சி சோஷலிசத்தின் வீழ்ச்சியல்ல என்பது நிரூபிக்கப்பட்டு வருகிறது.

"சோவியத் ருஷ்யா போன்று தனி ஒரு நாட்டில் சோஷலிசம் நிலைக்காது. உலகு தழுவிய புரட்சி நடந்து வெற்றி பெற்றால்தான் சோஷலிச சமூகக்கட்டமைப்பு நிலைத்து நிற்கும்" என்று வாதாடினார்கள். அக்கொள்கை முரண்பாடு நீடித்தது. டிராட்ஸ்கி போன்றவர்கள் மீது ஏற்பட்ட நடவடிக்கைகள் நீண்ட வரலாறாகும்.

சோவியத் வீழ்ச்சி சோஷலிசத்தின் வீழ்ச்சியல்ல என்பது நிரூபிக்கப்பட்டு வருகிறது. சோஷலிசக் கட்டமைப்பை நடைமுறைப்படுத்தும்பொழுது ஏற்பட்ட தவறுகள், குறைபாடுகள் பற்றிய படிப்பினைகள் எதிர்வரும் காலத்துக்கு வழிகாட்டியாக எடுத்துக்கொள்ளப்படுகிறது.

தென்அமெரிக்க நாடுகளில் 'கியூபா'வில் சோஷலிசக் கொள்கை அந்த நாட்டின் அடிப்படையில் அமுலாக்கப்பட்டு வருகிறது. அமெரிக்க ஏகாதிபத்திய அரசின் அருகிலிருக்கும் கியூபா-தென் அமெரிக்க நாடுகளில் பிரேசில், வெனிசுலா, பொலிவியா, சிலி போன்ற நாடுகளுக்கு ஆதர்சமாக விளங்கி வருகிறது. இதுவும் வெற்றி வரலாறாகும்.

அ.மார்க்ஸ்:

கியூபா மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகள் அமெரிக்காவை எதிர்த்து நிற்பது நமக்கு உற்சாகமூட்டக் கூடியதுதான். ஆனால் அதை ஒரு லட்சிய சோஷலிசச் சமூகமாகக் கருத வேண்டியதில்லை. அங்கே ஏகப்பட்ட பிரச்சினைகள் உள்ளன. இந்தியாவில் உள்ள அளவு கூட சில அடிப்படை வசதிகள் அங்கே இல்லை என்கிறார்கள். ஒரு ஆட்சி தொடர்வதாலேயே அல்லது ஒரு அரசியல் வெற்றிபெற்றுவிட்டதாலேயே அது சரியாகிவிடாது. மார்க்சியத்தில் ஏற்பட்ட பிழைகளில் இதுவும் ஒன்று. யார் அரசியல் ரீதியில் வெற்றி

பெற்றார்களோ, அதுவே சரியான கருத்து என்பதாக ஒரு நடைமுறை தொடர்ந்து பேணப்பட்டு வருகிறது. கார்ல் மார்க்ஸ் வரலாற்றில் நிலைத்து நின்றுவிட்டார் என்பதற்காகவே அவரால் விமர்சிக்கப்பட்ட பகூனின் முதலான 'அனார்கிஸ்டு' களின் கருத்துக்களெல்லாம் தவறு என்றாகி விடாது. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்கிற கருத்தையும், கட்சி அமைப்பு பற்றிய லெனின் கருத்தையும் ரோசா லக்சம்பர்க் எதிர்த்தார். புகாரின், ஓசின்ஸ்கி போன்றோரின் விமர்சனத்தை முன்பே சொன்னேன். பெண்ணியம் குறித்த லெனின் கருத்துக்களிலிருந்து கிளாரா ஸெட்கின் போன்றோர் வேறுபட்டனர். காவுட்ஸ்கிக்கும் எங்கல்சுக்கும் நடந்த விவாதம், புரட்சி குறித்து போல்ஷ்விசத்திலிருந்து ட்ராட்ஸ்கி வேறுபட்ட புள்ளி ஆகிய பிரச்சினைகளில் அரசியல் ரீதியில் வெற்றிபெற்றவர்கள் என்கிற வகையில் லெனின், மார்க்ஸ், எங்கல்ஸ், ஸ்டாலின் ஆகியோர் சொன்னவையெல்லாம் சரி மற்றவர்கள் சொன்னதெல்லாம் தவறு, ஓடுகாலிக் கருத்துக்கள், அராஜக வாதம் என்று மார்க்சியப் பாரம்பரியத்தில் இதுவரை கருதப்பட்டு வந்தது. இன்று ஏற்பட்டுள்ள பின்னடைவுகளின் பின்னணியில் இவை குறித்த மறுபரிசீலனை, தெரிவிக்கப்பட்ட மாற்றுக் கருத்துக்களை மீண்டும் மதிப்பிடுதல் ஆகியவை இன்று மிகவும் அவசியமாகிறது.

நல்லகண்ணு:

ருஷ்ய நாட்டில் சோஷலிச சோவியத் ஆட்சி எழுபதாண்டுகளுக்குப் பின்னர் வீழ்ச்சியுற்றது. இது சோஷியலிஸ்ட் தத்துவத்தின் தோல்வி அல்ல. அச்சமூகக் கட்டமைப்பில் ஏற்பட்ட நடைமுறைத் தவறுகளும் ஏகாதிபத்திய நாடுகளின் சதிகளும் காரணமாக அமைந்துள்ளன.

வழிகாட்டிய கம்யூனிஸ்ட் கட்சியின் நடைமுறைத் தவறுகளும் காரணமாக இருக்கலாம்.

சோஷலிச ஆட்சியின்போது, வழிகாட்டிய கம்யூனிஸ்ட் கட்சியின் நடைமுறைத் தவறுகளும் காரணமாக இருக்கலாம். ஆனால் அதுவே முழு முதற்காரணமென்று அவதூறு கிளப்புவதும், இனிமேல் வருங்காலத்தில் சோஷலிச சமுதாயம் அமைவதற்கு சாத்தியமே இல்லையென்றும், உலக மக்களின் பிரச்சினைகளுக்கெல்லாம் சர்வரோக நிவாரணமான சஞ்சீவி மருந்து முதலாளித்துவ

அமைப்புதான் என்று கடந்த பத்தாண்டுகளாகத் தம்பட்டம் அடிக்கப்பட்டது. ஆனால் கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளுக்குத்தான் எனும் பழமொழி உண்டு. உலகப் பன்னாட்டு மூலதனப் பெருமுதலாளிகளின் புதிய கொள்கையான உலகமயமாக்கல், தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல் என்ற கொள்கை-உலக மக்களை உய்விக்கத் திறனற்றது; ஏற்றத் தாழ்வை விரிவுப்படுத்தும் தன்மையுள்ளது என்பது உலகறியப்பட்ட அனுபவமாகி விட்டது.

கார்ல் மார்க்ஸ், எங்கல்ஸ் இருவரின் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அக்குழு 1847இல் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையைத் தயார் செய்தது.


மார்க்சீயத் தத்துவம் ஒரு வேதநூல் அல்ல; அது செயலூக்கத்துக்கு வழிகாட்டுவதாகும். அவ்வப் போது உலக சமுதாய மாற்றறங்களோடு ஒப்பிட்டுப் பார்த்து மாற்றத்துக்கான வழிகளைக் கண்டறியும் துணையாகும்.

மார்க்சின் அணுகுமுறையே அறிவியலை அடிப்படையாகக் கொண்டது. அறிவியலே வரலாற்றின் வலுமிக்க நெம்புகோல் என்று மார்க்ஸ் அறிவியலைக் கருதுகிறார்.

மனிதகுல வரலாறே, வர்க்கப் போராட்டத்தின் வரலாறு என்று வகைப்படுத்தியிருக்கிறார். எல்லாத் தத்துவ ஞானிகளும் உலகத்தை பல வகைகளில் வியாக்கியானப்படுத்துகிறார்கள். ஆனால் இப்போதுள்ள பிரச்சினை உலகத்தை எப்படி மாற்றுவது என்பதேயாகும்? என்ற குறிக்கோளோடு, தனது தத்துவ அறிவியல் ஆய்வுக்களத்தில் இறங்குகிறார்.

மார்க்சீயத் தத்துவம் ஒரு வேதநூல் அல்ல.

சுரண்டலையும் உழைப்பின் உபரியையும் அடித்தளமாகக் கொண்ட முதலாளிகளின் ஆதிக்கத்தைப் புரிந்து உணர்ந்து போராடும் தன்மையுள்ள தொழிலாளர்கள்-சங்கமாகச் சேர்கிறார்கள்; வர்க்க பேதம் பெறுகிறார்கள். ஆதலால் அவர்களே முதலாளித்துவக் கோட்டையைத் தகர்த்தெறியும் தன்மையுள்ள அரசியல் தலைமையாகச் செயல்பட முடியும். ஆகையால் அவர்கள் அந்தந்த நாடுகளில் அரசியல் உணர்வுள்ளவர்களாக வளர்க்கப்பட வேண்டுமெனத்



தெரிவிக்கிறார். காலனியாதிக்க நாடுகளில் விவசாயிகளையும் தங்களின் நேச சக்திகளைத் திரட்ட வேண்டும்; இல்லையேல் தனிமைப்படுத் தப்படுவார்களென்று கார்ல் மார்க்ஸ் எச்சரிக்கிறார். முதலாளித்துவ சமூகத்தை மாற்றுவதற்கும், தலைமை தாங்குவதற்கும் தொழிலாளி வர்க்கம் அரசியல் தலைமைப் பாத்திரக் கடமையைச் செய்யத் தயாராக வேண்டும் என்பதற்காகவே உலகத் தொழிலாளி வர்க்கத்துக்கு கருத்தாயுதமாக "கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையைத் தயாரித்தார். இதை உலகக் கம்யூனிஸ்ட் லீக் அமைப்பும் அங்கீகரித்தது.

1879இல் நடந்த பிரஞ்சுப்புரட்சியில் (பாரீஸ் கம்யூன்) தொழிலாளி வர்க்கத்தின் 72 நாள் அதிகாரத்தை முதலாளிகள் திரண்டு எதிர்த்து முறியடித்தார்கள். இந்நிகழ்ச்சி புதிதாகத் தோன்றிய தொழிலாளி வர்க்கத்துக்கு மீண்டும் ஒரு படிப்பினையைக் கொடுத்தது. தொழிலாளி வர்க்கத்துக்குத் தலைமை தாங்கும் வர்க்க பே தம் பெற்ற அரசியல் கட்சி தேவை என்றும் உணரப்பட்டது.

"தத்துவக் கொள்கை இல்லாத செயல்பாடு குருட்டுத்தனம்; செயல்பாடில்லாத தத்துவம் மலட்டுத்தனம்" என்றும் சொல்லப்படுகிறது.

தொழிலாளி வர்க்கத்தின் உரிமைப் போராட்டத்தை வழிகாட்டி வெற்றி பெற வேண்டுமானால், அரசியல் கொள்கைத் தெளிவுள்ள அமைப்பு அவசியப் படுகிறது. அத்தகைய அமைப்பு அவசியம் என்பதை லெனின் வலியுறுத்தினார். லெனின் காலத்திலேயே மென்ஷ்விக் பிரிவினர் அத்தகைய கட்சி அமைப்பு தேவையில்லை என்று மார்ட்டோ போன்றவர்கள் வாதிட்டார்கள். அவர்களின் கருத்து ஏற்றுக் கொள்ளப்படவில்லை. புரட்சிகரமான கட்சி அமைப்புக்கும் சில விதிமுறைக் கட்டுப்பாடுகள் தேவை என்றும் லெனின் கருதினார். கீழே இருந்தும் கருத்துக்களைப் பெறுவதற்கும், கருத்துக்களை உள்வாங்கிக் கொண்டு, நிலைமையை ஆய்வு செய்து வழிகாட்டும் நெறியாக "ஜனநாயக மத்தியத்துவம்" வலியுறுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு நாட்டினுடைய கம்யூனிஸ்ட் கட்சியிலும் அனுபவத்தின் அடிப்படையில் கட்சி வழிகள் வகுக்கப்பட்டுள்ளன!

சோவியத் யூனியனில் போல்ஷ்விக் கட்சி அமைப்பின், தொழிலாள வர்க்க சர்வாதிகாரம் என்ற கட்டுக்கோப்பால் புதிய நிர்வாக எந்திரம் உருவாகியதாகவும் சுய விமர்சனம் செய்யப்பட்டது.

இயக்கவியல் பொருள் முதல்வாதம்

வரலாற்றியல் பொருள் முதல்வாதம்

கட்சி தேவைதான். அது கொள்கை கொண்டது.

என்ற இருகூறுகளைக் கொண்ட மார்க்சீய தத்துவ அடிப்படை அனுபவத்தில் உலகம் முழுவதும் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. சோஷலிச சமூக அமைப்பே, மனித குல முன்னேற்றத்துக்கு வழி வகுக்கும் என்பது உறுதிப்பட்டுள்ளது. சோவியத் ஆட்சியின் 70 ஆண்டு அனுபவங்கள், புதிய படிப்பினைகளைக் கொடுத்துள்ளது. பல்வேறு நாடுகளின் தனித் தன்மைகளுக்கேற்ப சோஷலிச அமைப்பை உருவாக்கும் புதிய வழிமுறைகளைக் கையாள வேண்டுமென்ற படிப்பினை உணரப்பட்டுள்ளது. புதிய வேகத்தில் சீனம், வியட்நாம் மற்றும் கியூபா உள்ளிட்ட தென் அமெரிக்க நாடுகளில் அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு வலுவடைந்து வருகிறது. வெற்றி பெற்றும் வருகிறது.

கட்சி தேவையா என்ற கேள்வி லெனின் காலத்திலேயே ஏற்பட்டது. கட்சி தேவைதான், அது கொள்கை கொண்டது. கட்டுப்பாடுள்ள அமைப்புகளில்தான் விவாதங்கள் நடத்த முடியும் என்று முடிவானது. கட்சி அரசியல் அடிப் படையானது. அதில் நம்பிக்கை கொண்டவன் நான். கட்சியால் மட்டுமே கொள்கைகளை வடிக்க முடியும். வார்த்தெடுக்க முடியும். மக்களிடம் கொண்டு சேர்க்க முடியும். தத்துவங்களை கட்சிகளே வென்று காட்ட முடியும்.

சோவியத்தில் லெனின் சிலை உடைக்கப்பட்டது ஒரு நிகழ்வு. அந்தப் படங்களைப் பார்த்து உலகம் முழுவதும் கம்யூனிஸ்ட் இயக்கமே அழிந்து விடும் என்றார்கள். அழியவில்லை. அழியாது. கட்டுப் பாடான கட்சி, பல நாடுகளில் உயிரோட்டமாக உள்ளன. சோஷலிச தத்துவம் செயல்படுத் தப்படும்போது, புதிய அனுபவங்களைப் பெற்று வருகிறது; சோதனைகளைச் சந்தித்து வருகிறது. அதனுடைய தேவை இன்னும் அதிகமாகியிருக்கிறது.

பல்வேறு நாட்டு மக்கள் மார்க்சீயத்தின் பக்கம் தங்கள் கவனத்தை திருப்பி வருகிறார்கள். முதலாளித்துவ அவதூறுப் பிரச்சாரத்தோடு போஸ்ட் மார்டனிசம் என்ற பெயரிலும் கம்யூனிச எதிர்ப்பு திட்டமிட்டு பரப்பப்படுகிறது. உபரி மதிப்பு என்பதையே போஸ்ட்மார்டனிசத்தில் மறுக்கிறார்கள்.

அ.மார்க்ஸ்:

எனக்குத் தெரிந்த வரையில் போஸ்ட் மார்டனிசம் பேசுகிறவர்கள் எல்லோரும் மார்க்சியத்திற்கெதிராகப் பிரச்சாரம் செய்வதாகத் தெரியவில்லை. உபரி மதிப்பு என்கிற கோட்பாட்டை போஸ்ட் மார்டனிசம் மறுக்கிறது என்றும் நீங்கள் எதை வைத்துச் சொல்கிறீர்கள் என்பதும் தெரியவில்லை. மார்க்சியம் என்றால் இயக்கவியல் பொருள்முதல் வாதம் + வரலாற்றுப் பொருள் முதல் வாதம் + அரசியல் பொருளாதாரம் என்று இறுக்கமாக வரையறுக்கப் பட்டுள்ளது போல போஸ்ட்மார்டனிசம் என்று எதுவும் வரையறுக்கப்பட்டிருக்கவில்லை. எல்லாவற்றிற் குள்ளும் பல்வேறு போக்குகள் இருப்பது போலவே போஸ்ட் மார்டனிசத்திலும் உள்ளன. ஒரு சிலர் தமது வலதுசாரி நோக்கங்களுக்காக எங்காவது போஸ்ட் மார்டனிசம், குறியியல் ஆகியவற்றைப் பயன் படுத்தியிருக்கலாம். அதை வைத்துக் கொண்டு ஒட்டுமொத்தமாய் போஸ்ட் மார்டனிசத்தையே அப்படிச் சொல்லிவிட வேண்டியதில்லை. அல்துஸ்ஸர் போன்றவர்களெல்லாம் இறுக்கமான மார்க்சியத்திற்குள் நின்று மார்க்சியத்தை வளப்படுத்த முனைந்தவர்கள். ஃபூக்கோவெல்லாம் மார்க் சியத்திலிருந்து தொடங்கியவர்தான். தெரிதாவைப் பொருத்தமட்டில் அவரது கடைசிகால எழுத்துக்கள் அனைத்தும் மார்க்சியத்தை புகழ்ந்து பாராட்டுபவை. அவருடைய *'Spectres of Marx', 'Politics of friendship'* முதலிய நூற்கள் குறிப்பிடத்தக்கவை. போத்ரிலா, பரிமாற்ற மதிப்பு என்கிற மார்க்சியக் கருத்தாக்கத்திலுள்ள சில குறைகளைக் களையும் நோக்கில் *Symbolic Exchange* என்கிற கருத்தாக்கத்தை முன்வைத்தார். பியூரி பூர்தோ, சார்த்தர் பற்றிய ராஜதுரையின் நூற்களை வாசித்தால் இவர்களின் சிந்தனைகள் மார்க்சியத்தை வளப்படுத்துவதை உணர்ந்து கொள்ள முடியும்.

எல்லாவற்றிற் குள்ளும் பல்வேறு போக்குகள் இருப்பது போலவே போஸ்ட் மார்டனிசத்திலும் உள்ளன.

இந்த போஸ்ட்மார்டனிசச் சிந்தனையாளர்களாகக் கருதப்படும் ஃபூக்கோ, தெரிதா, பாத்ரிலா, தெல்யூஸ், கடாரி எல்லோருமே கலகக்காரச் சிந்தனை யாளர்களாகவே வாழ்ந்து மடிந்திருக்கிறார்கள். அதிகபட்சமாக இவர்களுக்குக் கிடைத்த அங்கீகாரம் பேராசிரியப் பதவிகள்தான். அதற்குமேல் பெரிய அளவில் அரசுப் பாராட்டுகளோ, நோபல் பரிசுகளோ இவர்களுக்குக் கிடைத்ததில்லை.

வித்தியாசங்களுக்குள் வித்தியாசங்களை எல்லாம் பார்க்க வேண்டும்

சோஷலிசத்தின் உச்ச கட்டத்தில் கம்யூனிசச் சமூகம் உருவாகும்போது அரசு உதிர்ந்து போகும் என்பதுதான் மார்க்சிய எதிர்பார்ப்பு. சுரண்டல் இல்லாத சமுதாயம் மட்டுமல்ல, அதிகாரம் இல்லாத சமுதாயமாகவும் இருப்பதுதான் கம்யூனிசச் சமுதாயம். ஆனால் நடைமுறையில் புரட்சிக்குப் பிந்திய சமூகங்கள் அனைத்தும் அரசு ரொம்பவும் வலிமையான சமூகங்களாகவும், சகல மட்டத்திலும் அதிகாரம் நிரம்பிய சமூகங்களாகவும் இருந்தன. பிற நாடுகளை ஒடுக்கும் சமூகங்களாகவும் இருந்தன. இந்த அடிப்படையில்தான் அதிகாரம் குறித்த கேள்வியை போஸ்ட்மார்டனிஸ்டுகள் எழுப்பு கிறார்கள். வித்தியாசம், பன்மைத்துவம் முதலிய கருத்துக்களை அவர்கள் வற்புறுத்தினார்கள். அந்த வகையில் ஒரு உறுதியான பாசிஸ எதிர்ப்பு தளத்தையும் அது கொண்டுள்ளது.

வெறுமனே பொருளாதார அளவுகோல், பண்டப் பரிமாற்றம், உபரிமதிப்பு ஆகியவற்றை மட்டும் பார்த்தால் போதுமா? மார்க்சியம் தான் முதலில் மக்களை வர்க்கங்களாகப் பிரித்துப் பார்த்த வகையில் சமூக வித்தியாசங்களை முதன்மைப்படுத்தியது. ஆனால் வித்தியாசங்கள் அதோடு முடிந்து விடுவதில்லை. வித்தியாசங்களுக்குள் வித்தியா சங்களை எல்லாம் பார்க்க வேண்டும் என்பதைப் போஸ்ட்மார்டனிசம் வலியுறுத்தியது. வர்க்கம், இனம் என்றெல்லாம் மட்டும் பார்த்து இந்த உள் வித்தியாசங்கள் மறுக்கப்படுவதையும், மக்களை வித்தியாசங்களற்ற பொதுமைகளாகப் பார்த்து எல்லோருக்குமான விடுதலை, புரட்சி போன்ற பெருங்கதையாடல்களை விரிப்பதிலும் உள்ள பிரச்சினைகளை போஸ்ட்மார்டனிசம் சுட்டிக் காட்டியது. சாதிகளாய்ப் பிளவுண்ட நமது சமூகத்தில்

இந்தப் பார்வை மிக அவசியம். விளிம்பு நிலை மனிதர்கள், தலித்கள், பெண்கள் ஆகியோரின் பிரச்சினைகள் குறித்த அரசியலை போஸ்ட் மார்டனிசம் நியாயப்படுத்தியது. பொதுவாக எதையும் வரையறுக்கும்போது பல சிறுபகுதிகள் விடுபட்டுப் போவது குறித்த கவலையை அது வெளிப்படுத்தியது.

போஸ்ட்மார்டனிசத்தை தேசிய வாதம் பேசுவோரும், பாசிஸ்டுகளும் விமர்சிப்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. இங்கே தமிழ்த் தேசியவாதிகள் போஸ்ட்மார்டனிசத்தைக் கடுமையாக எதிர்த்தார்கள். புத்தகங்கள் எல்லாம் போட்டார்கள். அதைப் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால், கம்யூனிஸ்ட்கள் போஸ்ட்மார்டனிசத்தை எதிரியாகப் பார்ப்பது தேவையில்லை என்றுதான் நினைக்கிறேன். போஸ்ட்மார்டனிசம் உண்மையில் தத்துவம் தொடர்பான ஒரு விஷயம். பண்டைத் தத்துவம், இடைக்காலத் தத்துவம்-அதாவது மதம் ஆட்சியிலிருந்த காலம், நவீனத்துவம் ஆகிய வற்றுக்குப் பின் வருவதுதான் பின் நவீன நிலை. இதை ஏதோ ஒரு இலக்கிய வகை, ஓவியம், கதை எழுதுகிற விவகாரம் மட்டும்தான் என்பதுபோல அரசியல் நீக்கம் செய்து, தத்துவ நீக்கம் செய்து பேசுகிறவர்கள் எல்லா இடங்களிலும் இருக்கிறார்கள். தமிழ்நாட்டிலும் உள்ளார்கள். அதை வைத்து போஸ்ட் மார்டனிசத்தின் பங்களிப்புகளை நாம் புறக்கணிக்கத் தேவையில்லை. எல்லாவற்றையும் ரொம்பவும் விசால மனத்துடன் அணுகக் கூடியவர் நீங்கள். போஸ்ட் மார்டனிசம் குறித்து முன் முடிவுகள் இல்லாமல் அணுக வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே தலித்தியம் பேசப்பட்டபோது இன்றுள்ள வரவேற்பு அன்று அதற்கு இல்லை.

15 ஆண்டுகளுக்கு முன் இங்கே தலித்தியம் பேசப்பட்டபோது இன்றுள்ள வரவேற்பு அன்று அதற்கு இல்லை. சோஷலிச எதார்த்த வாதத்தின் ஒரு உட்பிரிவுதான் தலித்தியம் என்பதுபோல கேசவன் போன்றோர் எழுதினர். தலித்தியத்திற்கு தத்துவம் கிடையாது என்று ஞானியெல்லாம் குறிப்பிட்டார். ‘இது எதுல கொண்டு போய் முடியுமோ?’ என ஒரு பிரபல எழுத்தாளர் தனிப்பட்ட உரையாடல்களில் குறிப்பிட்டார். இந்தச் சூழலில் தலித்தியத்தை தத்துவார்த்த, அரசியல் தளத்தில் நியாயப்படுத்த எங்களுக்குப் போஸ்ட்மார்டனிசம்

பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம், சோஷலிச எதார்த்தவாதம் ஆகியவை குறித்து மறுபரிசீலனை தேவை.

தான் அன்று பயன்பட்டது. இன்று அரவாணிகள், ஹோமோ செக்சுவல்கள் முதலானோர் எல்லாம் தங்கள் நியாயங்களை முன்வைப்பதற்கும், அதைச் சமூகம் ஏற்பதற்குமான ஒரு சூழல் உலகளவில் உருவாகியுள்ளதென்றால் அதில் இத்தகைய பின் நவீனச் சிந்தனைகளின் பங்கு ரொம்பவும் முக்கியமானது.

இப்படி வித்தியாசம் பார்ப்பது ஒட்டுமொத்தத்தைப் பலவீனப்படுத்திவிடும் என்கிற கவலை நியாயமானதுதான். ஆனால் வித்தியாசத்தை உருவாக்குவதே போஸ்ட் மார்டனிசம் என்பது போலப் பார்க்க வேண்டியதில்லை. ஏற்கனவே வித்தியாசங்கள் இங்கே இருக்கிறதுதானே.


சோசலிசக் கட்டுமானத்திற்கு உலகெங்கிலும் ஏற்பட்ட சிதைவுகளின் பின்னணியில் நாம் இவற்றின் முக்கியத்துவத்தை விளக்கிக் கொள்ள வேண்டியிருக்கிறது. சில விஷயங்களை மரபு என்று கருதி, ஏற்க வேண்டியதில்லை. பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம், சோஷலிச எதார்த்தவாதம் ஆகியவை குறித்து மறுபரிசீலனை தேவை. மறைந்த மூத்த மார்க்சிய விமர்சகர் தொ.மு.சி. ரகுநாதன் அவர்கள் சோஷலிச எதார்த்தவாதத்தைத் தனது இறுதிநாட்களில் முற்றாக மறுத்தார். எண்பதுகளில் என்.சி.பி.எச் நடத்திய ஒரு உள் விவாதத்தில் தனது வாதத்தை அவர் எழுத்து மூலம் வைத்தார். ஆனால் அது இன்றுவரை நூலாக வரவில்லை. விவாதத்திற்கு அழைக்கப்பட்ட பேராசிரியர் சிவத்தம்பி மூலமாகத்தான் என்னைப் போன்றவர்கள் அதை விமர்சிக்க முடிந்தது. இந்த விமர்சனம் அப்படி அமுக்கப்பட்டிருக்க வேண்டிய அவசியமில்லை. விவாதங்களை வெளிப்படையாக்க வேண்டும்.

நல்லகண்ணு:

போஸ்ட்மார்டனிசம் தொடர்பான மூல நூல்களை நான் படித்ததில்லை. விளிம்புநிலை மனிதர்கள், தலித்தியம், பெண்ணியம், பண்பாடுகள் குறித்து இடதுசாரிகள் ஏன் முக்கியத்துவம் தரவில்லை என்று சில பேராசிரியர்களும், சில தொண்டு நிறுவனங்களும் கேள்வி எழுப்புகிறார்கள். பண்பாட்டுத் துறையில் இன்று ஏற்பட்டுள்ள பல்வேறு

மாற்றங்களுக்கு கம்யூனிஸ்ட் கட்சி அடிப்படையாக அமைந்திருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

1940 ஆவது ஆண்டுகளில் கம்யூனிஸ்ட் கட்சி தலைமையில் நடந்த இயக்கங்களைக் குறிப்பிடுவது அவசியமென்று கருதுகிறேன். சாகுபடி துவங்குவதற்கு முன்னால், ஏழைப்பெண்கள் உரம் சுமப்பார்கள். அக்காலங்களில் தலித் மற்றும் மிகவும் பின்தங்கிய சாதிகளைச் சேர்ந்த பெண்கள் ரவிக்கை, ஜாக்கெட் போன்றவைகளைப் பயன்படுத்துவதில்லை. பெரும்பாலும் மார்பை மறைக்கும் உடைகளை அணியக்கூடாதென்ற தடைகளும் இருந்த காலமும் உண்டு. தலைச்சுமையாகக் கொண்டு செல்லும்போது, பெண்களின் மார்பைப் பார்த்து மிராசுதார்களின் அடியாட்களும், மேல்சாதி இளைஞர்களும் உழைக்கும் பெண்களைச் சீண்டுவதும் பழக்கமாக இருந்தது. இக் கொடுமையை எதிர்த்து 1943இல் தஞ்சை மாவட்டம் (இப்போதுள்ள திருவாரூர் மாவட்டத்தில்) உத்திராபதி மடத்துக்குச் சொந்தமான தென்பரைக் கிராமத்தில் செங்கொடி இயக்கம் போர்க்கொடி ஏற்றியது. பெண்கள் உரம் சுமக்க மாட்டார்களென்று ஒன்றுபட்ட போராட்டம் வெடித்தது. அடக்கு முறைகளையும் எதிர்த்து உறுதியாகப் போராடியதால், விவசாயத் தொழிலாளர்களின் போராட்டம் வெற்றி பெற்றது.



அதிகாலைப் பொழுதில்- வெள்ளி உதிக்கும் முன்பே, தலித் மக்கள் பண்ணையின் தொழுவத்துக்குச் சென்று வேலை செய்ய வேண்டும். சிறிது தாமதமானாலும், சவுக்கடியும் சாணிப்பாலும் ஊற்றப்படும். தண்டனை கொடுக்கப்படும். அப்போது அந்நியர் ஆட்சி! எந்தச் சட்டமும், சலுகைகளும் கிடையாது. மிராசுதார்களின் ஏவலாள்களாகத்தான் காவல்துறையும் செயல்படும். கிராமப்புற ஏழை மக்கள் அனைவரையும் ஒன்று திரட்டியது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி! அடியாட்களும் அதிகாரிகளும் சேர்ந்து தாக்கியபோதும் ஒன்றுபட்ட இயக்கம் வலுவடைந்தது. அதிகாரிகளும் மிராசுதார்களும் இறங்கி வந்தார்கள். காவல்துறை அதிகாரிகள், சப்-கலெக்டர்கள் முன்னிலையில் விவசாயத்

தொழிலாளர்களை சவுக்கால் அடிக்க மாட்டோம்; சாணிப்பால் ஊற்ற மாட்டோமென்று கையெழுத்துப் போட்டார்கள். 1944இல் மன்னார்குடி ஒப்பந்தம் என்று பெயர் பெற்றது. “தங்கம் செய்யாததைச் சங்கம் செய்யும்” என்ற நம்பிக்கையைக் கொடுத்தது கம்யூனிஸ்ட் இயக்கம்.

தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டத்தைச் சுற்றியுள்ள அதிகமான நிலங்கள் கோட்டைப் பிள்ளைகள் என்ற வகுப்பாருக்குச் சொந்தம். அவர்கள் வைத்ததுதான் சட்டம்; கொடுத்தது தான் கூலி என்ற நிலை இருந்தது. விவசாயத் தொழிலாளர்களைத் திரட்டினோம். கூலியை இரட்டிப்பாக்கச் செய்த போராட்டம் நடந்தது. வெற்றியும் கிடைத்தது.

நெல்லை மாவட்டத்தில் நான்குநேரி ஜீயர் மடம், திருக்குறுங்குடி ஜீயர் மடம் என்ற இரு மடங்களும் வைணவ மதத்தைச் சேர்ந்தவை. இரு மடங்களுக்கும் பல கிராமங்கள் ஆதிக்கத்தில் இருந்தன. அக்கிராமங்களில் வாழும் குடிகள் ஓடும் குடிகள் என்றழைக்கப்படுவார்கள். காரணம், அவர்களின் குடியிருப்புகளுக்கு நிலத்தைத் தோண்டி அடித்தளம் போடக்கூடாது. கதவுகளோ, நிலைகளோ நிலத்தின் மேலே உருளைகளாகத்தானிருக்க வேண்டும். அம்மியோ, ஆட்டுரலோ நிலத்தில் பதிக்கக் கூடாது. நிலம் மடத்துக்குச் சொந்தமானதால் மடாதிபதி குடிகளை வெளியேற்றினால், பூமிக்கு மேலே உள்ள பொருள்களைத் தான் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவார்கள். அதனால்தான் ஓடும் குடிகள் என்றழைக்கப்பட்டார்கள். இக்கொடுமையை எதிர்த்தும் செங்கொடி இயக்கம் போராடி வெற்றி பெற்றது. அக்குடிகள் அனைவரும் நிலைத்த குடிகளாக வாழ்ந்து வருகிறார்கள்.

விவசாயிகளை திரட்டி மரக்காலை உடைத்தெறிந்தோம்.

குத்தகை சாகுபடி விவசாயிகளிடமிருந்து விளைச்சலை அளந்து வாங்கும்போது அவர்களே மரக்கால் கொண்டு வருவார்கள். இதற்கு கள்ள மரக்கால் என்று பெயர். விவசாயிகளை திரட்டி மரக்காலை உடைத்தெறிந்தோம். அரசு முத்திரையிட்ட மரக்காலை பயன்படுத்த செய்தோம். கிராமப்புறங்களில் நிலப்பிரபுகளின் ஆதிக்கக் கோட்டைகளை கட்சி தகர்த்தது.

1946ஆம் ஆண்டு நாங்குநேரியில் ஆதிதிராவிட மகா ஜனசங்க தொழிலாளர் மாநாடு ஏர்வாடி லட்சுமி நரசிங்கபுரத்தில் நடந்தது. அம்பாசமுத்திரம் தாலுகா ரெங்க சமுத்திரத்தில் உயர்சாதியினர் நில உடைமையாளர்களாக இருந்தனர். அறுவடைக்கு செல்லும் தலித் மக்கள் களத்து மேட்டுடன் நின்றுவிட வேண்டும். உயர்சாதியினர் தெருவில் வரக்கூடாது. இந்த சமயத்தில் தலித் தெருவில் தான் தமிழ்நாடு விவசாயிகள் சங்கக் கிளை அமைக்கப்பட்டது.

தலித் பெண்களை தங்களின் பாலியல் இச்சையை தீர்க்கும் போகப் பொருளாக பண்ணையார்கள் பயன்படுத்தி வந்தார்கள்.

பண்ணை வேலைக்கு வருபவர்களை மட்டுமல்ல தலித் பெண்களை தங்களின் பாலியல் இச்சையை தீர்க்கும் போகப் பொருளாக பண்ணையார்கள் பயன்படுத்தி வந்தார்கள். ஆனால் இந்தப் பெண்களின் வாழ்க்கைக்கு எந்த உத்திரவாதமும் இல்லை. களக்காடு பண்ணை ஐயர் ஒருவர் ஆசைகளை தீர்த்துக் கொள்ள மதிய நேரங்களில் மாட்டு வண்டியில் செல்வார். எங்கள் சங்க ஆட்கள் அவர்களது வண்டியை மறித்தார்கள். பண்ணை ஐயருக்கு அபராதம் போடப்பட்டது. சாகிபுக்கு மனைவி, பிள்ளைகள் இருந்தன. ஆனாலும் இவர் தலித் பெண் ஒருவர் வீட்டுக்கு வந்து போய்க் கொண்டிருந்தார். இதை சங்கம் கண்டித்தது. கடைசியில் 12 சென்ட் இடத்தை அந்த பெண்ணுக்கு எழுதி வைத்தார். இப்படி நிறைய சம்பவங்களை சொல்லிக் கொண்டே போகலாம்.

விஜய நாராயணம் அருகில் திருமலாபுரம். ரெட்டியார், தேவர், நாடார், ஆசாரி, தலித்.. என சாதி மக்கள் இருந்தார்கள். தலித், நாடார்கள் ஒரு பிரிவாகவும் மற்ற சாதியினர் தனியாகவும் பிரிந்து விட்டார்கள். நாடார் வீட்டு கலப்பையில் பழுது விழுந்துவிட்டது. அதை சரி பார்க்க தச்சுவேலை செய்பவர் மறுத்துவிட்டார். இந்த சமயத்தில் பணக்கார ரெட்டியார் வீட்டில் ஒரு மரணம் ஏற்பட்டது. ஏழு ஊர் ரெட்டியார்களுக்கு தகவல் சொல்ல தலித்துதான் போக வேண்டும். தலித்தை போகக் கூடாது என்று சொல்லிவிட்டோம். இது ஊருக்குள் பிரச்னையாகி விட்டது. வள்ளியூர் இன்ஸ்பெக்டர் எங்களை வரவழைத்துப் பேசினார். 'ஊருல இல்லாத பழக்கத்தை உருவாக்குறீங்களே' என்று கேட்டார். 'வழக்கமா துஷ்டி சொல்றது அவங்கதான. இப்ப ஏன் போக மாட்டேன்றாங்க'

என்றார். 'சொந்தக்காரன் செத்துட்டான்னா சொந்தக்காரன்தான் துஷ்டி சொல்லப் போகணும். அதோட துஷ்டி சொல்லப் போறவனை கேவலமா மதிக்கிறாங்க. பொண்ணு கூட தரமாட்டேன்றாங்க' என்று நாங்கள் சொன்னோம். இப்படி ஒவ்வொரு ஊர்களிலும் இருந்த சிறு சிறு பிரச்னைகளை தீர்ப்பதில் ஆரம்ப காலத்திலேயே கம்யூனிஸ்ட் கட்சி கவனம் செலுத்தியது.

வெறும் கூலிக்கான போராட்டத்தை மட்டும் நாங்கள் நடத்தவில்லை.

சிவகங்கை மாவட்டம் கீழப்பசலைக் கிராமத்தில் நிலம் அனைத்தும் இனாம்தார்களுக்குச் சொந்தம். இனாம்தார்களனைவரும் பிராமணர்கள். விவசாயிகள் சங்கம் அமைத்துப் போராடினார்கள். இனாம் நிலம் குடிகளுக்கானது. இனாம்தார்கள் படித்தவர்கள்; அனைவரும் மதுரை போன்ற நகர்களுக்கு குடிபெயர்ந்து போய்விட்டார்கள். அக்கிரகாரத் தெருவே இல்லை. வத்திராயிருப்பில் தெப்பக்குளத்தில் சாதிவாரிப் படித்துறைகள் இருந்தன. 1945-46இல் விவசாயிகள் சங்கம் துவங்கப்பட்டது. நிலவெளியேற்றம் தடுக்கப்பட்டது. சாதிவாரிப் படித்துறையும் ஒழிக்கப்பட்டது. சிதம்பரம் வட்டத்தில் விவசாயக் கூலிகளுக்கு மண் வெட்டியில்தான் சோறும் மிளகாயும் கொடுப்பது பழக்கமாக இருந்தது. சங்கம் திரண்டுதான் இம்முறையை நிறுத்தியது. இவ்வாறாக பண்பாட்டு விஷயங்களில் தலையிட்டுதான் கட்சி வளர்ந்தது. பொருளாதார பிரச்னைகளில் மட்டுமல்ல பண்பாட்டு விஷயங்களிலும் கவனம் செலுத்தினோம். இதை சமுதாயம் ஒப்புக் கொள்ளவில்லை. அடக்கப்பட்டு அடிமையாக கிடந்த தலித் மக்களுக்கு கம்யூனிஸ்ட்டுகளின் இந்தப் போராட்டங்கள்தான் புதுத்தெம்பு கொடுத்தது. தாழ்ந்த சாதியினர் வீட்டில் திண்ணை கட்டக்கூடாது, மேளம் தட்டக்கூடாது, முதல் தாம்பூளம் பண்ணையாருக்குத்தான், சில இடங்களில் பெண்களை கன்னி கழிப்பதே பண்ணையார்தான்... என்பது போன்ற கொடூரங்களை செங்கொடி சங்கம் உடைத்தது.

வெறும் கூலிக்கான போராட்டத்தை மட்டும் நாங்கள் நடத்தவில்லை. கம்யூனிஸ்ட் தலைவர்களான சீனிவாசராவ், பி.ராமமூர்த்தி, ஜீவானந்தம், மாணிக்கம், மாயவரம் வைத்தியநாதன்... இப்படி

அனைவருமே சாதி மறுப்பு திருமணம் செய்தவர்கள்தான். தோழர் சிவலிங்கம் தமிழில் தந்தி அனுப்ப முடியும் என்று முதலில் கண்டுபிடித்தவர்; மத்திய அரசும் ஒத்துக்கொண்டது. தபால்–தந்தி இலாக்காவும் தமிழில் தந்தி கொடுக்கும் முறையை அமுலாக்கியது. இவர் உயர் சாதி இந்து; தன் மகள்களுக்கும், மகன்களுக்கும் அவர்களின் விருப்பத்தோடு தலித் குடும்பங்களிலிருந்து திருமணம் செய்து வைத்தார். இவர் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர். இலக்கிய நூல்கள் எழுதியிருக்கிறார். தோழர் பாலதண்டாயுதம் கிறிஸ்தவப் பெண்ணைக் காதலித்துத் திருமணம் செய்துகொண்டவர்; இதனாலேயே குடும்பத்தை விட்டு விரட்டப்பட்டார். இதை வெளியே சொல்லி பெருமை பாராட்டிக் கொள்வது அசிங்கமாக இருக்கிறது. சாதி ஒழிப்பு திருமணங்களை நாங்கள்தான் பரவலாக்கினோம் என்று சொல்ல வரவில்லை. அதேசமயம் பண்பாட்டு போராட்டங்களை நடத்தாமல் குறைத்து விட்டோம் என்றும் சொல்ல முடியாது. நிலப்பிரபுக்களும், ஆதிக்கக்காரர்களும் சாதிப்பிரிவினைகளைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். ஊரைப் பிளவுபடுத்தி தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்ள முயற்சிக்கிறார்கள். உழைக்கும் மக்களின் ஒன்றுபட்ட வலுவான சக்தியே சாதிக் கொடுமைகளை ஒழிக்க முடியும்; ஒற்றுமையைக் கட்டுவது சிரமமாக இருந்தாலும் அதுவே, சாதி வேற்றுமையில்லாமல், ஜனநாயகத்தைக் காப்பாற்ற வழிவகுக்கும்.

ப.திருமாவேலன்:

பண்பாட்டு போராட்டங்களை நடத்தாமல் குறைத்து விட்டோம் என்றும் சொல்ல முடியாது.

நில பிரபுத்துவத்தின் மிச்சங்களையும், அந்நிய மூலதனக்கொள்கை என்ற பெயரால் அடிமைப்படுத்தும் போக்கையும் தொடர்ந்து கண்டிக்க வேண்டிய இடத்தில் அனைத்து அரசியல் கட்சிகளும் இருக்க வேண்டும். துரதிர்ஷ்டவசமாக அப்படி இல்லை. கம்யூனிஸ்ட்டுகளாவது அதில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். இதில் இன்னொரு முக்கியமான விஷயம் மதவாதம்.

இந்தியா பன்முக தன்மை கொண்ட நாடு. இது அனைவருக்கும் பொதுவானது. பெரும்பான்மை

மக்களின் அடிமைகள் சிறுபான்மையினர் என்றும் அவர்களது விருப்பங்கள் நிராகரிக்கப்படுவதும் உதாசீனப்படுத்தப் படுவதும் தொடர்கிறது. இது தொடர்பாகப் பேசலாமா?

அ.மார்க்ஸ்:

முஸ்லிம் தீவிரவாதம், லக்ஷர்-ஏ-தொய்பா, எல்லை தாண்டிய பயங்கரவாதம், அல் கொய்தா, ஓசாமா பின் லேடன் என்பதெல்லாம் இன்று அடிக்கடி உச்சரிக்கப்படும் வார்த்தைகள்.

இன்று உலகை எதிர்நோக்கியுள்ள மிகப்பெரிய பிரச்சினை பயங்கரவாதம் என்பதை யாரும் மறுக்க முடியாது. பயங்கரவாதம் என்கிற பெயரில் மக்கள், அப்பாவிகள் கொல்லப்படுவதை யாரும் நியாயப்படுத்திவிட முடியாது. இந்த பயங்கர வாதத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக இன்று உலகெங்கும் மேற்கொள்ளப்படும் வழி முறைகளைத்தான் முழுமையாக ஏற்க முடியவில்லை. இந்தப் பயங்கரவாதத்திற்குப் பின்னணியாக உள்ளது மதமல்ல. இதை நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். இது முழுக்க முழுக்க அரசியல் பிரச்சினை.

இன்றும் தீர்க்கப்படாத பாலஸ்தீனப் பிரச்சினை, இந்தியா, ஆப்கான், ஈராக் போர்கள், ஆக்ரமிப்புப் படைகளை அங்கே நிறுத்தி வைத்தல், இந்தியாவைப் பொருத்தமட்டில் காஷ்மீர்ப் பிரச்சினை ஆகியவை முழுக்க முழுக்க அரசியல் சார்ந்த பிரச்சினைகள். சர்வதேசப் பயங்கரவாதத்தையும், இந்தியாவில் நடைபெறும் பயங்கரவாத தாக்குதல்களையும் இவற்றிலிருந்து பிரித்துப் பார்க்க இயலாது. இந்த அரசியல் காரணங்களை அமுக்கிவிட்டு, இதை ஒரு மதப்பிரச்சினையாகவும், மதவெறியர்களாக உள்ள 'ஜிஹாதிகள்' தான் இதைச் செய்கிறார்கள் என்பது போலவும் செய்யப்படும் பிரச்சாரம் மோசமானது.

பயங்கரவாதத்திற்குப் பின்னணியாக உள்ளது மதமல்ல.

அரசியல் பிரச்சினைகளை அரசியல் மட்டத்தில் தீர்க்க வேண்டும். அரசியல் பிரச்சினைகளைத் தீர்க்காமல் அப்படியே வைத்துக்கொண்டு வெறுமனே மனித உரிமைகளைப் பறிக்கும் கருப்புச் சட்டங்களை இயற்றுவதாலும், போர்களை ஏவுவதாலும், ஆக்கிரமிப்புப் படைகளை

நிறுத்துவதாலும், உள்ளூர் மக்களை அகதிகளாக்குவதாலும், கொன்று குவிப்பதாலும், சித்திரவதைகள் செய்வதாலும் மட்டும் பயங்கரவாதத்தை நிறுத்திவிட இயலாது என்பதை அரசுகள் புரிந்துகொள்ள வேண்டும்.

முஸ்லிம்களின் உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பற்ற நிலை இன்றளவும் தொடர்கிறது.

இந்திய முஸ்லிம்களைப் பொருத்தமட்டில் 1947க்குப் பின் அரசியல் சட்ட உருவாக்கத்திலிருந்தே சில அநீதிகள் அவர்களுக்கு இழைக்கப்பட்டுள்ளன. பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்து வந்த தனிவாக்காளர் தொகுதி, இட ஒதுக்கீடு எல்லாம் ஒழிக்கப்பட்டன. உருது மொழி புறக்கணிக்கப்பட்டது. பெரும்பான்மையாக உருது மொழி பேசுகிற மாநிலங்களில் இரண்டாவது ஆட்சி மொழியாகக் கூட அது ஏற்கப்படவில்லை. பொதுசிவில் சட்டம் குறித்த பிரிவும் அரசியல் சட்டத்தில் சேர்க்கப்பட்டது. நாட்டைப் பிரித்தவர்கள் என்கிற குற்றச்சாட்டின் பின்னணியில் முஸ்லிம்களின் வாயடைக்கப்பட்டது. கிட்டத்தட்ட இதே காலத்தில் பாபர் மசூதிக்குள் ஒரு ராமர் சிலையும் வைக்கப்பட்டது. அதன் பின் விளைவுகளை விரிவாக இங்கே விளக்க வேண்டியதில்லை. எல்லோருக்கும் தெரிந்த கதை அது. 1960க்குப் பின் தொடர்ச்சியாக மதக் கலவரங்கள். முஸ்லிம்களின் உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பற்ற நிலை இன்றளவும் தொடர்கிறது. அகில இந்திய அளவில் முஸ்லிம்களுக்கு வலுவான அரசியல் கட்சியும் இல்லை, தலைமையும் இல்லை.

காந்தி கொலையை ஒட்டி கொஞ்ச நாள் அடங்கியிருந்த இந்துத்துவ பாசிஸ்டுகள் 1964 தொடங்கி தீவிரமாகச் செயல்படத் தொடங்கினார்கள். 1980களில் ராமர் விவகாரத்தை அரசியலாக்கினார்கள். கொஞ்சம் கொஞ்சமாக, படிப்படியாக மக்களை அணி திரட்டத் தொடங்கினார்கள். ரதயாத்திரை, செங்கல் ஊர்வலம்.. இப்படி. பெரிய அளவில் அடித்தள மக்களையும் தங்கள் வேலைக்காகத் திரட்டினார்கள். ஆனால் இதற்கெதிராக, இதற்குச் சமமாக வலுவான இயக்கங்களையும் பிரச்சாரங்களையும் மதச் சார்பற்ற சக்திகள், ஜனநாயக சக்திகள், இடதுசாரிகள் ஆகியோார் செய்யவில்லை.

மதவாதத்திற்கு எதிராக உறுதியான நிலைப்பாட்டை முன்வைத்து இயங்குவதற்காக மார்க்சிஸ்ட்கட்சி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றைப் பாராட்டியாக வேண்டும். சாதிக் கட்சிகள், மாநிலக் கட்சிகள் ஆகியவை காட்டாத உறுதியை இடதுசாரிகள்தான் கடைபிடிக்கின்றன. தேர்தல் களத்தில் பாசிஸ்டுகளுடன் கூட்டு இல்லை என்பதையும் அவர்கள்தான் கடைபிடிக்கின்றனர். ஆனாலும் இந்து பாசிசத்திற்கு எதிராக மக்களைத் திரட்டுவதற்கு உரிய முன்னுரிமையை யாரும் அளிப்பதில்லை.

இடிக்கப்பட்ட இடத்தில் மீண்டும் மசூதியைக் கட்டித் தீர வேண்டும் என்கிற நியாயமான கோரிக்கையை முஸ்லிம்கள் வைக்கும்போது யாரும் அதை ஆதரிப்பதில்லை. விவகாரம் நீதிமன்றத்தில் இருக்கிறது என்று அரசு சொல்கிற பதிலைத்தான் எல்லா அரசியல் கட்சிகளும் சொல்லுகின்றன. மசூதி இடிக்கப்பட்டது முழுக்க முழுக்க ஒரு அரசியல் பிரச்சினை. அரசியல் பிரச்சினையை அரசியல் களத்தில்தான் தீர்க்க வேண்டும். மாறாக நீதிமன்றம் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றால் பிறகு எதற்கு நாம் கட்சி நடத்த வேண்டும்?


எல்லோருடைய கண்முன் மசூதி இடிக்கப்பட்டது. எல்லோரின் கண்முன் குஜராத்தில் முஸ்லிம்கள் கொல்லப்பட்டார்கள். இடித்தவன் நான்தான் இடித்தேன் என்கிறான். கொன்றவன் நான்தான் கொன்றேன் என்கிறான். மத்தியில் ஆளும் காங்கிரஸ் அரசு 'மென்மை இந்துத்துவம்' பேசுகிறது. இந்நிலையில் என்னதான் தீர்வு?

முஸ்லிம்களை பயங்கரவாதிகளாகச் சித்தரிப்பது எங்கும் நடைபெறுகிறது. தமிழகமும் விதிவிலக்கல்ல.

அரசியல் பிரச்சினையை அரசியல் களத்தில்தான் தீர்க்க வேண்டும்

நல்லகண்ணு:

செப்டம்பர் 11ஆம்தேதி அமெரிக்காவில் நடந்த சம்பவத்தை வைத்து இவை நியாயப்படுத்தப்படுகிறது. பின்லேடன் கலாச்சார பயங்கரவாதியாக சித்தரிக்கப்படுகிறார். அதேபோல் மதமாற்றம் நடப்பதையும் ஒருகாரணமாக காட்டுகிறார்கள். மதமாற்ற தடைச்சட்டமும் அதனால் வருகிறது. சாதாரண விஷயத்தை விசிறி வைத்து வீசி



செப்டம்பர் 11 அன்று அமெரிக்க வர்த்தக மையத்தின் மீது நடந்த தாக்குதல்.

பூதாகரமாக காட்டுவது மதவாத சக்திகளின் வேலை. நம்முடைய வரலாறு இந்து-முஸ்லிம் ஒன்றாகப் போரிட்ட வரலாறாகும். *1806*இல் வேலூர் புரட்சியும், *1857*இல் வடஇந்தியாவில் நடந்த முதல் சுதந்திரப் போரும் இந்து-முஸ்லிம் ஒற்றுமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். நீதிமன்றத்தை நாடுவது தற்காலிகமாகக் கலகத்தைத் தடுக்கும் உபாயமேயாகும். மதவெறி சக்திகளைக் கட்டுப்படுத்துவதற்கு, மதநல்லிணக்கத்தை வளர்ப்பதும் ஒற்றுமைப்படுத்துவதுமே நிரந்தரத் தீர்வாகும்.

அ.மார்க்ஸ்:

மத நல்லிணக்கம், மத ஒற்றுமை ஆகியவற்றில் யாருக்கும் கருத்து வேற்றுமை இருக்க முடியாது. மதக் கலவரங்களில் ஈடுபட்ட குற்றவாளிகள் தண்டிக்கப்படுதல், பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய இழப்பீடும் நீதியும் வழங்குதல் என்பதிலிருந்துதான் அதைத் தொடங்க முடியும். முஸ்லிம்கள்

பிரச்சினையில் அரசியல் கட்சிகள் இன்னும் திறந்த மனத்துடன் இருக்க வேண்டும். மதக் கலவரத் தடுப்புச் சட்டம் வெறும் வரைவு வடிவத்திலேயே இருக்கிறது. அதைச் சட்டமாக்குவதற்கும் அமுல்படுத்துவதற்கும் எந்த முயற்சியும் இல்லை. அரசியல் கட்சிகளும் கண்டுகொள்வதில்லை. சச்சார் கமிட்டி அறிக்கையை உடனடியாக அமுல் செய்வது குறித்தும் கூட முன்னுரிமை அளித்து யாரும் இயங்குவதில்லை.

சச்சார் கமிட்டி அறிக்கையை உடனடியாக அமுல் செய்ய வேண்டும்.

நல்லகண்ணு:

சி.ஆர்.பி.எப்.இல் முஸ்லிம்களுக்கு இடம் கொடுக்கப்படவில்லை. சச்சார் குழு அறிக்கையை மத்திய அரசு உடனே அமுலாக்க வேண்டுமென்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துகிறது. தமிழ்நாடு அரசு கொண்டு வந்துள்ள இட ஒதுக்கீட்டையும் ஆதரிக்கிறது. சிறுபான்மை முஸ்லிம்களின் உரிமைகள் பற்றித் தனி நூலை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வெளியிட்டிருக்கிறது.

அ.மார்க்ஸ்:

மதக் கலவரங்களின்போது அவற்றைத் தடுப்பதற்காக நிறுத்தப்படுகிற இராணுவம், அரை இராணுவம், போலீஸ் ஆகியவற்றில் உரிய அளவில் சிறுபான்மையினர் இருக்க வேண்டும். இப்போது டெஹல்கா வெளியிட்டுள்ள 'டேப்'களில் கூட முஸ்லிம் அதிகாரிகள் இருந்த இடங்களில் முஸ்லிம்கள் கொல்லப்படுவதிலிருந்து காக்கப் பட்டிருப்பது தெரிய வருகிறது. முஸ்லிம்கள், தலித்கள் அதிகமாக உள்ள இடங்களில் உள்ள ரெவின்யூ மற்றும் போலீஸ் ஸ்டேஷன்களில் அதிக அளவில் சிறுபான்மையோர், தலித்கள் நியமிக்கப்பட வேண்டும். உதாரணமாக மேட்டுப்பாளையம், கோட்டைமேடு போலீஸ் ஸ்டேஷன்களில் குறைந்தது மூன்றில் ஒரு பங்காவது முஸ்லிம்கள் இருக்க வேண்டும்.

ப.திருமாவேலன்:

தென்மாவட்டங்களில் பெரும்பான்மை மக்களாகவுள்ள சில குறிப்பிட்ட சமூகத்தைச் சார்ந்த கலெக்டர், எஸ்.பி.களை நியமிப்பதில்லை என்ற மரபு

சில காலம் கடைப்பிடிக்கப்பட்டது. ஆனால் நீங்கள் கேட்பது வேறுமாதிரியாகவுள்ளதே....

அ.மார்க்ஸ்:

தென் மாவட்டக் கலவரங்களின்போது உண்மை அறியும் குழுக்களில் நான் பங்கு பெற்றிருக்கிறேன். நடைமுறை நீங்கள் சொல்கிற மாதிரி இல்லை. முக்கிய போலீஸ் அதிகாரிகள், தாலுகா அளவிலான ரெவின்யூ அதிகாரிகளெல்லாம் ஆதிக்க சாதிகளைச் சேர்ந்தவர்களாகத்தான் இருந்தனர். அதோடு பெரும்பான்மையினர் குறித்து அத்தகைய கொள்கையை அரசு வைத்திருந்தால் அதைப் புரிந்து கொள்ளலாம். முஸ்லிம்கள் நிலை அப்படியல்ல. அவர்கள் சிறுபான்மையினர்தான். தமிழகத்தைப் பொருத்தமட்டில் எந்த மாவட்டத்திலும் அவர்கள் பெரும்பான்மையினராக இல்லை. அவர்களுக்கு பயமற்ற சூழலும் இல்லை. அதை ஏற்படுத்தித் தர நாமும் தவறிவிட்டோம்.

நல்லகண்ணு:


1992 ஆம் ஆண்டு டிசம்பர் 6 ஆம் நாள் பாபர் மசூதி இடிக்கப்பட்ட அதே தினத்தில் அகில இந்திய அளவில் மதவாத சக்திகளை எதிர்த்து கம்யூனிஸ்ட்டுகள்தான் பிரசார இயக்கம் நடத்தினோம். பாபர் மசூதி இடிப்பு படங்களை போட்டோ ஆல்பங்களாக வெளியிட்டோம். அரசியல் ரீதியாக அடுத்து என்ன செய்வதென்று மதவாத சக்திகள் முழித்துக் கொண்டிருக்கின்றன.

இவர்களுக்கு காஷ்மீரத்தில் நடக்கும் கொலைகள், அதற்கு பாகிஸ்தான் தான் தூண்டுதல் என்று சொல்லப்படும் காரணம் வசதியாகப் போய் விட்டது. பாகிஸ்தானுக்கு இனி அவர்கள் பிரச்னையிலிருந்து விடுபடவே நேரம் போதாது. பாகிஸ்தானில் ஏற்பட்ட எமர்ஜன்ஸி சூழலை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்?

பாகிஸ்தானில் இன்று ஜனநாயக நிறுவனங்கள் முழுமையாக முடக்கப்பட்டுவிட்டன.

அ.மார்க்ஸ்:

பாகிஸ்தானில் இன்று ஜனநாயக நிறுவனங்கள் முழுமையாக முடக்கப்பட்டு விட்டன. முஷாரப்பின் ஒரே நோக்கம் தனது பதவியைக் காப்பாற்றிக் கொள்வதுதான். கிட்டத்தட்ட பத்து நீதிபதிகள் இன்று பதவி நீக்கப்பட்டுள்ளனர். பலர் சிறையில். மனித



பாபர்
மசூதி
இடிக்கப்படுகிறது.

உரிமைப் போராளிகளும் இன்று சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். ஹேபியஸ் கார்பஸ் உரிமை ரத்து செய்யப்பட்டுள்ளது. பத்திரிகை தணிக்கை முறை அமுலில் உள்ளது. இந்த நிலையில் தேர்தல் சுதந்திரமாக நடைபெறாது என்பதும் விளங்குகிறது. முஷாரப் தனது கட்சியை வெற்றி பெறச் செய்ய பெரிய அளவில் தேர்தல் ஊழல் புரியலாம். பாகிஸ்தான் முழுமையும் இன்று முஷாரப்பின் கட்டுப்பாட்டில் இல்லை. வடமேற்கு மாகாணம், வாஸிர்ஸ்தான் பகுதிகளில் பல இடங்கள் அல்குவேதாவின் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களாக உள்ளன. இந்தப் பகுதிகளையும் இதை ஒட்டிய ஆப்கானிஸ்தான் பகுதிகளையும் சேர்த்து 'அல்குவேதா நாடு' எனப் பிரகடனப்படுத்தப் போவதாகவும் கூட சில செய்திகள் வருகின்றன. இவற்றைக் காரணம் காட்டி சர்வதேசப் பயங்கரவாதம் என்கிற பெயரில் பாகிஸ்தானின் மீது அமெரிக்கக் கட்டுப்பாடும் அதிகமாகிவிட்டது. இந்த நிலையில் ஒரே ஒரு ஆறுதலான அம்சம் அங்கே நடக்கும் எதிர்ப்புப் போராட்டங்கள்தான். இந்த ஆண்டு தொடக்கத்தில் தலைமை நீதிபதி இப்திகார் சவுத்ரி பதவிநீக்கம் செய்யப்பட்டவுடன் மிகப்பெரிய எதிர்ப்பு ஏற்பட்டது. வழக்கறிஞர்கள் பெரிய அளவில் போராடினார்கள். மீண்டும் அவரைப் பதவியில் அமர்த்த வேண்டிய நிலை ஏற்பட்டது. அதேபோல அங்குள்ள நீதிபதிகளும் நம்முடைய நாட்டுடன்

ஒப்பிடும்போது நல்ல தீர்ப்புகளை வழங்கக்கூடிய நிலையையும் பார்க்கிறோம். மனித உரிமைப் போராளிகள், ஊடகங்கள் எல்லாமும் கூட தீவிரமாகப் போராடக்கூடியவர்களாக உள்ளனர். முஷாரப்பின் அடக்குமுறைகள் எதிர்க்கப்படாமல் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய நிலையில் பாகிஸ்தான் இல்லை. ஆனால், இங்கே ஜனநாயகம் இருக்கிறது என்கிற பெயரில் கொஞ்சம் சுரணையற்ற மதமதப்பான நிலையே உள்ளது.

நல்லகண்ணு:

இந்தியாவிலிருந்து உரிமை கேட்டு பிரிந்த பாகிஸ்தானில் இஸ்லாம் மதமும் கட்டமைப்புக்குள் சேர்த்துக் கொள்ளப்பட்டது. பாகிஸ்தானை போராடிப் பெற்ற முகமது அலி ஜின்னாவுக்குப் பிறகு அங்கு ராணுவ ஆட்சி, சர்வாதிகார ஆட்சி உருவானது. கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டது. மற்ற அமைப்புகளிலும் ஜனநாயக தன்மை இல்லை. இதை அமெரிக்கா பயன்படுத்திக் கொள்கிறது. இந்த குழப்பத்தை தாலிபான்கள் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

அ.மார்க்ஸ்:


ஜியா வுல் ஹக் ஆட்சியைத் தவிர மற்ற யாருடைய




பின்லேடன்

ஆட்சியிலும் பாகிஸ்தானில் இஸ்லாமிய அரசு உருவாக்கப் படவில்லை. பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள இன்றைய நெருக்கடிகள், குழப்பங்களுக்கும் இஸ்லாம் மதத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. ஜின்னா கேட்டது முஸ்லிம்களுக்கான தனிநாடுதானே ஒழிய, முஸ்லிம் நாடு அல்ல. மதச்சார்பற்ற ஜனநாயக அரசுதான் அவர் லட்சியமாக இருந்தது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அரசு சார்பில் ஒரு இந்து கோயில் புதுப்பிக்கப்பட்டு அதன் குட முழுக்கு விழாவிற்கு இந்தியாவிலிருந்து அத்வானி அழைக்கப்பட்டிருந்தார். அப்போது ஜின்னா பற்றி அவர் பேசிய பேச்சு கூட பின்னால் சர்ச்சைக்குள்ளானது. இங்கு அது சாத்தியமா என்று யோசித்துப் பார்க்க வேண்டும். அங்கு ஒரு இந்து நீதிபதி கூட உள்ளார்.

பாகிஸ்தான் பற்றி இங்கே ரொம்ப விவரம் தெரிந்தவர்கள் மத்தியில்கூட நிறைய தவறான கருத்துக்கள் உள்ளன. பெண்களுக்கு அரசியலில் 33 சதவீத ஒதுக்கீடு செய்வது இங்கு இன்று வரை கனவாகவே இருந்து வருகிறது. அங்கு பல மட்டங்களில் இது இப்போது நடைமுறையில் உள்ளது. சிறுபான்மையினருக்கு அங்கே தனி வாக்காளர் தொகுதி நடைமுறைப்படுத்தப்பட்டது. சிறுபான்மையினரே வேண்டாம் எனச் சொல்லி அது நிறுத்தப்பட்டது. *The Last Mughal* என்கிற புகழ் பெற்ற நூலின் ஆசிரியர் வில்லியம் டார்லிம்பிள் 60ஆம்



பெனாசிர்



நவாஸ் செரீப்

ஆண்டு சுதந்திர தினக் கொண்டாட்டத்திற்கு முன்பாக பாகிஸ்தான் சென்று வந்து 'இந்து' நாளிதழில் கட்டுரை ஒன்று எழுதியிருந்தார். அங்கே பிச்சைக்காரர்கள் இங்குள்ளது போலக் கிடையாது. இங்குள்ளதுபோல அங்கும் 7 சத பொருளாதார வளர்ச்சி. சாலை வசதி, விமானப் போக்குவரத்து முதலான விஷயங்களில் இங்குள்ளதைக் காட்டிலும் அங்கே நல்ல நிலை என்பதை எல்லாம் எழுதியிருந்தார்.

இப்படிச் சொல்வதால் பாகிஸ்தான் எல்லாவிதத்திலும் சிறந்துள்ளது என்று பொருளல்ல. கல்வி வளர்ச்சி அங்கு ரொம்ப மோசம். அரசு பள்ளிகளில் நாலில் ஒரு பங்கு வேலை செய்வதே இல்லை. அப்புறம் அங்குள்ள அரசியல் குழப்பத்தையும் நாம் அறிவோம். கடந்த 60 ஆண்டுகளில் 32 ஆண்டுகள் அந்நாடு இராணுவ ஆட்சியின் கீழ் இருந்துள்ளது. பெருநிலவுடைமையாளர்களே அங்கு இன்றும் அரசிய'லில் செல்வாக்கு வகிக்கின்றனர். 1960களில் இங்கு அந்நிலைமை சிதைந்து அதிகாரம் அடுத்த

கட்டத்திற்கு இறங்கியதுபோல அங்கு நடக்கவில்லை. உளவுத்துறை, இராணுவம் ஆகியவற்றில் அரசியல் ஊடுருவல் அங்கே ரொம்ப அதிகம். ஆனால், சவூதி அரேபியா போல மதச்சட்டத்தின் கீழ் ஆளப்படுகிற நாடாக நாம் அதைப் பார்க்க வேண்டியதில்லை.

ப.திருமாவேலன்:


பாகிஸ்தான் மக்களுக்கு ஏற்பட்டுள்ள துயரம்தான் ஜனநாயக சக்திகளை கவலைப்பட வைக்கிறது. முஷாரப்பை எதிர்த்து நவாஸ் செரீப், பெனாசிர் நடத்தும் போராட்டங்கள் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தியுள்ளன. இவர்களுடன் இருக்கும் ஜியாத் ஏ உலேமா இ இஸ்லாம் என்ற கட்சி மதம் சார்ந்த கட்சி. இவர்கள் செரீப் எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போடுவதாக கூறப்படுகிறது. தேர்தலை புறக்கணிப்பது, ஆதரிப்பதில் கட்சிகளிடையே பெரும் குழப்பம் காணப்படுகுறது. அதேநேரத்தில், அங்கு நடந்து வரும் நடவடிக்கை ஒவ்வொன்றுக்கும் அமெரிக்காவின் ஆசீர்வாதம் பெறுவதும் நடந்து கொண்டிருக்கிறது. இந்த குழப்பம் இப்போதைக்கு தீரும் நிலைமையில் இல்லை.

நல்லகண்ணு:

இப்படிப்பட்ட குழப்ப சூழ்நிலை இந்தியாவை சுற்றிலும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக இலங்கை விவகாரம் நமக்கு தொடர்ந்து கவலை தருவதாகவே உள்ளது.

குழப்ப சூழ்நிலை இந்தியாவை சுற்றிலும் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இலங்கை நமக்கு அண்டை நாடு மட்டுமல்ல, நம் தமிழ் இனத்தைச் சேர்ந்தவர்கள் அங்கு வாழ்கிறார்கள். பேச்சு வார்த்தை மூலமாக அந்தப் பிரச்னை தீர்க்கப்பட வேண்டும். ஆனால் ராணுவமும், அரசும் ஒரு இனத்தை அழிக்கும் வேலையை திட்டமிட்டு செய்கிறது. சிங்களவர்கள் பூர்வகுடிகள் என்றால் தமிழர்களும் பூர்வகுடிகள்தான். தமிழர்கள் அனைத்து மதத்தை சேர்ந்தவர்களாகவும் இருக்கிறார்கள். முதலில் தமிழர்களின் அறிவுச் சொத்தான யாழ்ப்பாணம் நூலகம் எரிக்கப்பட்டது. தமிழர்கள் கொல்லப்பட்டார்கள். நாளுக்கு நாள் இந்த பிடிவாதம் கூடிக் கொண்டே போனது. நிலைமையை



முஷாரப்

சமாளிக்க முடியாமல் தமிழர்கள் எதிர்தாக்குதல் நிலையை எடுத்தார்கள். தேசிய இனப்பிரச்னையாக வடிவெடுத்து தமிழர்கள் தனிநாடு கேட்டு போராடிக் கொண்டிருக்கிறார்கள். சரியாகச் சொன்னால் போர் நடத்தி வருகிறார்கள்.

சொந்த நாட்டு மக்கள் மீதே விமான தாக்குதல் நடத்தபபடுவதையும், மனித உரிமைகள் தொடர்ந்து மீறப்படுவதையும் எப்படி அனுமதிக்க முடியும்? தமிழர்களின் ஜனநாயக உரிமை நிலைநாட்டப்பட இறுதித் தீர்வு என்ன என்பது குறித்து பேச்சு வார்த்தை நடத்தப்பட வேண்டும். இந்தியாவைப்போல பெடரல் செட்டப் சரியாக இருக்குமா என்று பார்க்க வேண்டும். இவையெல்லாம் சரிப்பட்டு வர காலம் ஆகலாம்.


ஆனால் சிங்கள இனவெறியில் இருந்து தற்காத்துக் கொள்ள உடனடி நடவடிக்கை வேண்டும். இது

மட்டுமல்ல, கச்சத்தீவு பிரச்னை அப்படியே இருக்கிறது. தமிழக மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க செல்ல முடியவில்லை. அங்குள்ள கடற்படை தடுக்கிறது. அகதிகள் வருகை அதிகரித்து வருகிறது. அவர்களை பராமரிப்பது இங்கு முக்கிய விஷயங்களில் ஒன்றாகி வருகிறது. யாழ்ப்பாணத்து மக்கள் உணவுப்பொருட்கள் கிடைக்காமல் சிரமப்படுகிறார்கள். மொத்தத்தில் தமிழ் மக்கள் வாழ்க்கை நம் கண்முன்னால் சீரழிக்கப்படுகிறது.

அ.மார்க்ஸ்:

நீங்கள் சொல்வது சரிதான். தமிழர்கள் என்கிற வகையில் நாம் அவர்களுக்கு உதவ நினைப்பதில் எந்தத் தவறும் இல்லை. அங்கே ஆள்வது ஒரு பவுத்த சிங்கள அரசு. உலகின் மிக மோசமான மனித உரிமை மீறல்கள் செய்யப்படும் நாடுகளில் ஒன்று ஸ்ரீலங்கா. மனித உரிமை மீறல்களைப் பொருத்தமட்டில் இலங்கை அரசைப் போலவே விடுதலைப்புலிகளும் உள்ளனர் என்பதை நாம் கவனிக்கவும் சொல்லவும் தயங்கக் கூடாது. முஸ்லிம் தமிழர்கள் அங்கே விடுதலைப்புலிகளால் ஒடுக்கப்பட்டுள்ளனர். அகதிகளாக்கப்பட்டுள்ளனர். உள்நாட்டிலேயே அகதிகளாக்கப்பட்டுள்ள அவர்களை விடுதலைப்புலிகள் வீடு திரும்ப இன்னும் அனுமதிக்கவில்லை. விடுதலைப்புலிகளையும் அதன் தலைவர் பிரபாகரனையும் கண்மூடித்தனமாக

குண்டு வீச்சில் சிதைந்த பள்ளிக்கூடத்தில் படிக்கும் ஈழத்து சிறுமிகள்.



ஆதரிக்கும் தமிழ்த் தேசிய அமைப்புகள் இந்தப் பிரச்சினையில் சாதிக்கும் மௌனம் ரொம்பவும் ஆபத்தானது. கவலைக்குரிய இன்னொரு விஷயம் இங்கே சமீபகாலமாய் அரங்கேறுகிறது. ஸ்ரீலங்காவிலும் மலேசியாவிலும் உள்ள தமிழர்களை ‘இந்துக்களாக’ அணுகிப் பிரச்சினையை இந்துத்துவ அரசியலாக்கும் முயற்சிதான் அது. யாழ்ப்பாணத்து மக்களுக்கு உதவுகிறேன் என்கிற பெயரில் இங்கேயுள்ள பா.ஜ.க., இந்து முன்னணி முதலான அமைப்புகள் இறங்கியுள்ளதும் அவர்கள் நடத்துகிற ஊர்வலங்கள், போராட்டங்களில் புலிகளை ஆதரிக்கும் தமிழ்த்தேசியர்கள், நெடுமாறன் போன்றோர் பங்கேற்பதும் கவலைக்குரியது. ஈழத் தமிழர்களை இந்துக்களாகப் பார்க்கும், அணுகும் போக்கை தமிழ்த்தேசியம் பேசுபவர்களில் திருமாவளவன் மட்டுமே கண்டித்துள்ளார். மற்றவர்கள் யாரும் கண்டிக்கவில்லை. மறை முகமாகவும் நேரடியாகவும் ஆதரித்துள்ளனர். பொள்ளாச்சி மகாலிங்கத்துக்கு உலகப் பெரும் தமிழர் விருது அளிப்பதை எல்லாம் நாம் கவலை யோடு பார்க்க வேண்டி இருக்கிறது. தமிழ்த் தேசியத்தின் இந்து மதச் சார்பைக் குறித்து பெரியார் ஒலித்த எச்சரிக்கை நினைவுக்கு வருகிறது.

இன அடிப்படையை முன்னிறுத்தி வேறுபல உள் வேறுபாடுகளை மூடி மறைத்து விடக்கூடாது.

நல்லகண்ணு:

இலங்கை விவகாரத்தை புலிகள் பிரச்னையாக மட்டும் பார்க்கக் கூடாது. இனப்பிரச்னையாக பார்க்க வேண்டும். பௌத்தம் - இந்துவாக பார்ப்பதும் தவறான கற்பிதம்.

அ.மார்க்ஸ்:

மொழி, இன அடிப்படையை முன்னிறுத்தி வேறுபல உள் வேறுபாடுகளை மூடி மறைத்து விடக் கூடாது. காவிரிநீர், முல்லைப்பெரியார் பிரச்சினை எல்லாம் நம்மைப் பாதிக்கிற முக்கிய விவசாயப் பிரச்சினைகள். தமிழ் மக்கள் ஒன்றாக இணைந்து போராட வேண்டிய பிரச்சினைகள். அதேநேரத்தில் மலையாளிகள், கன்னடர் ஆகியோரை எதிரிகளாக நிறுத்துகிற வகையில் இந்த அரசியல் அமைந்து விடக் கூடாது. வடவர் ஆதிக்கம், இந்தி எதிர்ப்பு என்கிற வடிவில் இதுவரை கட்டமைக்கப்பட்ட



வவுனியா
காட்டில்
புலிகள்.

தமிழ்த் தேசியம் இப்போது வேறு திசையில் போகிறது. ஆங்கில எதிர்ப்பு, மலையாள, கன்னட எதிர்ப்பு என்பதாக மாறுகிறது. தமிழ்நாட்டில் சுமார் மூன்றில் ஒரு பங்கு மொழிச் சிறுபான்மையினர் உள்ளனர். தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழியினர் இவர்கள். குறைந்தபட்சம் முன்னூறு ஆண்டுகளாக அவர்கள் இங்கே வசிக்கின்றனர். அவர்கள் எங்கிருந்து வந்தபோதிலும் இன்று அவர்களுக்கு அங்கே வேர்கள் கிடையாது. அவர்களுக்கு எதிரான ஒரு அரசியலாக வடிவெடுத்துவிடக் கூடாது. குணா போன்றவர்கள் முன் வைத்த தமிழ்த் தேசியம் இந்த வகையிலானது. அருந்ததியர்கள், தெலுங்கர்கள் என அவர்களுக்கு இடஒதுக்கீடு கொடுக்கக் கூடாது என்று கூட ஒரு கட்டத்தில் அவர் பேசினார். ஆனால் இன்றுள்ள எதார்த்த நிலையோ அருந்ததியர்களுக்குத் தனி உள்ஒதுக்கீடு கொடுக்க வேண்டும் என்று சொல்கிற அளவிற்கு உள்ளது. அதேபோல உருது பேசுகிற தமிழ்நாட்டு முஸ்லிம்களை வேறுபடுத்திப் பார்க்கும் போக்கும் உள்ளது. சில முஸ்லிம்களிடையே கூட இம்மாதிரிப் போக்கு உள்ளது வருந்தத்தக்கது.

நல்லகண்ணு:

மொழிவாரி மாகாணங்கள் பிரிக்கப்படுவதற்கு முன்பே காங்கிரஸ் கட்சி கமிட்டிகள் மொழிவாரி பிரிக்கப்பட்டுதான் செயல்பட்டு வந்தன. தேசிய இனங்கள் ஒன்றுசேர்ந்து விடக்கூடாது என்பதில்

பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் தெளிவாக இருந்தனர். 1905 ஆம் ஆண்டு வங்காளத்தை இரண்டாகப் பிரித்தது அந்த சூழ்ச்சி காரணமாகத்தான். இதை நமது தேசிய தலைவர்கள் கடுமையாக எதிர்த்தார்கள். சென்னை கடற்கரையில் பிபின் சந்திரபாலும், பாரதியும் பேசினார்கள்.

சென்னை மாகாணத்தில் பல்வேறு மொழி பேசும் மக்கள் வாழும் பகுதிகள் இருந்தன. தெலுங்கு பேசும் விஜயவாடா, கடப்பா சென்னை மாகாணத்தில் இருந்தன. தெலுங்கு பேசும் பெல்லாரி, மைசூர் சமஸ்தானத்தில் இருந்தது. தமிழ பேசும் கன்னியாகுமரி, செங்கோட்டை பகுதிகள் திருவாங்கூர் சமஸ்தானத்தில் இருந்தன. மலையாளம் பேசும் வடமலபார், கண்ணனூர், பாலக்காடு போன்றவை சென்னை மாகாணத்தில் இருந்தன. தமிழர் பகுதிகளை இணைத்து ஐக்கிய தமிழகம் அமைக்க கோரிக்கை எழுந்தது. தென் மாநிலங்களை இணைத்து தட்சிண பிரதேசம் அமைக்க வேண்டும் என்றார் இராஜாஜி. ஒவ்வொருவரும் தங்கள் பிரதேசத்துக்கு முன்னுரிமை வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். இதிலிருந்துதான் வடக்கு வாழ்கிறது; தெற்கு தேய்கிறது என்ற முழக்கத்தை திராவிட இயக்கங்கள் முன்னெடுத்தது. ஆந்திரர்களுக்கு தனி மாகாணம் வேண்டும் என்று பொட்டி ஸ்ரீராமுலு உண்ணாவிரதம் இருந்தார். தமிழ்நாடு என்று பெயர் மாற்றக்கோரி விருதுநகர் சங்கரலிங்கனார் உண்ணாவிரதம் இருந்தார். மொழிவாரி மாகாணங்கள் பிரிக்கப்பட்டன. அவரவர்கள் தங்கள் மாநிலத்துக்கு தேவையான தொழில் வளர்ச்சியை போராடிப் பெற்றனர்.

மொழிவாரி மாகாணங்கள் ஏற்பட்ட பிறகு புது சிக்கல் ஏற்பட்டுள்ளது.

மொழிவாரி மாகாணங்கள் ஏற்பட்ட பிறகு புது சிக்கல் ஏற்பட்டுள்ளது. இந்த மாநிலங்கள் ஒவ்வொன்றும் அடுத்த மாநிலத்துக்கு விட்டுக் கொடுக்க மறுக்கிறது. காவிரி பிரச்னையை இன்னும் தீர்க்க முடியவில்லை. காவிரி நடுவர் மன்றம் பிறப்பித்த இடைக்கால தீர்ப்பை அமல்படுத்த முடியவில்லை. அவர்கள் தீர்ப்பளித்தபடி தண்ணீர் அளவு ஒரு ஆண்டு கூட தமிழகத்துக்கு தரப்படவில்லை. இறுதித் தீர்ப்பு வழங்கப்பட்டு அதுவும் உச்சநீதிமன்றத்தில் இருக்கிறது. இது கர்நாடகா நிலைமை.

கேரளத்தோடு பார்த்தால் முல்லைப் பெரியாறு விவகாரம் முற்றுகிறது. அணையின் நீர்மட்ட அளவை உயர்த்துவது குறித்து உச்சநீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை அமல்நடத்த முடியவில்லை. ஆந்திராவுடன் பாலாறு பிரச்னை. இப்படி பக்கத்து மாநிலங்களுடன் பிரச்னை. இந்த பிரச்னை களையெல்லாம் தீர்க்கக்கூடிய கொள்கையுள்ள வலுவான மத்திய அரசு தேவை. நேரு காலத்தில் அந்த வலு இருந்தது. இங்கே காமராஜர் இருந்தார். தமிழ்நாட்டில் பெரிய பெரிய தொழிற்சாலைகள் பொதுத்துறையில் துவங்கப்பட்டன. கல்வி, வேலை வாய்ப்பில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இடஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று பெரியார் போராட்டம் நடத்திய நேரத்தில், "அதைச் செய்துதான் ஆக வேண்டும். இல்லையென்றால் தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சியை கலைத்து விட வேண்டி யதுதான்" என்று சொல்லும் துணிச்சல் மிக்க காமராஜர் இருந்தார். கொள்கை வழிப்பட்ட அரசியல் கட்சிகளும் தலைவர்களும் செயல்பட வேண்டும்.

நீங்கள் பேசும்போது அருந்ததியர் இடஒதுக்கீடு குறித்து பேசினீர்கள். அவர்களை புறக்கணிக்கக் கூடாது. அதே சமயத்தில் தலித் மக்களிடையே பிளவு ஏற்படாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும். தலித் கிறிஸ்தவர்களையும் தலித்துகளாக கருதி இடஒதுக்கீடு கொடுக்கப்பட வேண்டும். இடஒதுக்கீடு குறித்து உச்ச நீதிமன்றத்தில் விவாதம் வந்தபோது, சாதிவாரியான கணக்கெடுப்பு 1936க்கு பிறகே இல்லை என்று கூறப்பட்டது. மறுபடியும் சாதிரீதியாக கணக்கெடுப்பு எடுக்க வேண்டும் என்று பல்வேறு அமைப்பினர் கோரிக்கை வைத்து வருகிறார்கள். இதுபோன்ற கணக்கெடுப்பு நடத்தி சாதியை மீண்டும் காப்பாற்றிக் கொண்டே போகப் போகிறோமா? என்பதும் கேள்வியாகத் தொடர்கிறது.

தலித் மக்களிடையே பிளவு ஏற்படாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

அந்தக் காலத்தில் கணக்கெடுப்பு நடத்தியபோது கோத்திரத்தை சொல்லுங்க என்று கேட்டு பதிவு செய்தார்கள். தேர்தலில் சம்பந்தப்பட்ட மக்களின் வாக்குகளை பெறுவதற்காக சாதிகளுக்கு சலுகைகள் முன்னுரிமைகள் தரப்படுகின்றன. இது ஜனநாயக சக்திகள் மிகுந்த பிரச்னையாக இருக்கிறது. சாதி கணக்கெடுப்பு நடத்துவதன் மூலம் சாதி பிரச்னையும்

மூர்க்கமும் அதிகமாகவே செய்யும் என்று நான் நினைக்கிறேன். ஜனநாயக முறையில் நடக்கும் தேர்தலில் சாதியின் பங்கு முக்கியமானதாக பயன்படுத்தப்படுகிறது. சும்மா இருக்கும்போது சாதி உணர்வு மங்கிக் கிடக்கிறது. தேர்தல், போட்டி என்று ஆகும்போது சாதி உணர்வு தூண்டி விடப்படுகிறது.

சாதி ஒழிப்பு குறித்து தேர்தல் சார்ந்த அரசியல் கட்சிகள் தீவிரமாகப் பேசுவதில்லை.

அ.மார்க்ஸ்:

சாதி ஒழிப்பு குறித்து தேர்தல் சார்ந்த அரசியல் கட்சிகள் தீவிரமாகப் பேசுவதில்லை. அப்படியே பேசும்போது கூட மேலோட்டமாகவே பேசுகின்றனர். மேலவளவு போன்ற நிகழ்ச்சிகளிலும் சரி, தலித் பஞ்சாயத்துத் தலைவர்கள் அந்த நாற்காலியில் உட்கார முடியாமல் போகிற நிகழ்ச்சிகளிலும் சரி, இதற்கெல்லாம் வெறுமனே அரசை மட்டும் குற்றம் சாட்டிப் பயனில்லை. எல்லா அரசியல் கட்சிகளும் இதற்குப் பொறுப்பேற்க வேண்டும். ஏதாவது பேசினால், செய்தால் அவர்கள் ஓட்டு போய் விடுமே, இவர்கள் ஆதரவு போய்விடுமே என்கிற அச்சம்தானே இதற்கெல்லாம் காரணம்.

ப.திருமாவேலன்:

இந்தியாவில் சமூக சீர்திருத்தவாதிகள் அனைவரும் எதிர்கொள்ளவேண்டிய முக்கியமான சிக்கல்களில் ஒன்று சாதி. இது நாளுக்கு நாள் கெட்டிப்பட்டு வருகிறது. வர்க்கம், சாதிக்கு இடையிலான உறவுகளைப் பற்றிய சரியான பார்வை, புரிதல் இங்கு பரவலாக இல்லை. சாதிப்பாகுபாடுகள் குறித்து அரசியல் கட்சிகள் பேசுவதில்லை. ஒரு பிரச்னை நடக்கும்போது எது சரி எது தவறு என்று பேசுவதே தவறானதாக கருதப்படுகிறது. நாகரீகம் கருதி இவர்கள் அப்படி பேசுவதை தவிர்ப்பதாக கூறப்படுகிறது. ஆனால் இவர்கள் ஆதாயம் கருதிதான் பேசுவதில்லை.

இடஒதுக்கீடு, சாதி கணக்கெடுப்பு குறித்து நீங்கள் சில கருத்துகளை சொன்னீர்கள். இடஒதுக்கீடு இத்தனை ஆண்டுகாலம் தரப்பட்டும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் அப்படியே இருக்கிறார்கள் என்றால் அதன் தேவை இன்னும் பல ஆண்டுகளுக்கு தேவைப்படுகிறது என்பது தான் பொருள். பல நூற்றாண்டுகளாக அடிமைப்படுத்தப்

பட்டவர்களுக்கு சில பத்து ஆண்டுகள் இட ஒதுக்கீடு தருவதால் உயர்த்திவிட முடியாது. சாதிக் கணக்கெடுப்பு எடுக்கப்படாதது கூட ஒருவித சூழ்ச்சியின் விளைவுதான். இடஒதுக்கீட்டுக்கு எப்படியாவது தடைபோட நினைப்பவர்கள் கண்டுபிடித்த அஸ்திரங்களில் இதுவும் ஒன்று. இதன்மூலம் சாதிப் பெருமை பேசப்படும், மூர்க்கம் அதிகமாகும் என்பது உண்மைதான். ஆனால் வேறு வழியில்லை. சாதிரீதியான கணக்கெடுப்பு கண்டிப்பாக நடத்தப்பட வேண்டும். அதே நேரத்தில் சாதி எதிர்ப்பு பிரசாரங்கள் அதிகப்படுத்தப்பட வேண்டும்.

அ.மார்க்ஸ்:

நீங்கள் சொல்வது சரி. சாதிரீதியான கணக்கெடுப்பு ரொம்ப அவசியம். சாதிரீதியாகக் கணக்கு இல்லை என்று சொல்லித்தான் இன்று உச்சநீதிமன்றம் 27 சதவீத ஒதுக்கீட்டை நிறுத்தி வைத்துள்ளது.

ஜீவாவுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் சீனிவாசராவுக்கு அளிக்கப்படவில்லையோ.

நான் தஞ்சாவூர் மாவட்டத்துக்காரன். விவசாயக் கூலிகளை, தலித் மக்களை முதன்முதலில் ஒன்று திரட்டி கூலிச் சுரண்டலையும், தீண்டாமைக் கொடுமைகள் பலவற்றையும் ஒழிப்பதை முன்னெடுத்தவர் சீனிவாசராவ். எங்கோ கன்னடத்தில் பிறந்து தமிழ் மக்கள் மத்தியில், தலித் மக்கள் மத்தியில் பணியாற்றி, தலைமறைவாய் வாழ்ந்து, எளிய வாழ்க்கை வாழ்ந்து மறைந்தவர் அவர். அவர் தலைமறைவு வாழ்க்கையின்போது எழுதிய கடிதம் ஒன்றில் தங்களைப் பற்றி அவர் எழுதிய உயரிய வாசகங்கள் இப்போது என் நினைவுக்கு வருகிறது. இந்த ஆண்டு சீனிவாச ராவுக்கும், ஜீவாவுக்கும் நூற்றாண்டு. கம்யூனிஸ்ட் கட்சிகள் நடத்துகிற இந்த நூற்றாண்டு விழாவில் ஜீவாவுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் அளவுக்கு சீனிவாசராவுக்கு அளிக்கப்படவில்லையோ எனத் தோன்றுகிறது. நிச்சயமாக இதற்குத் தமிழ்த் தேசிய உணர்வு காரணமாக இருக்காது என்று எனக்குத் தெரியும். இருந்தபோதிலும் ஏன் அந்த நிலை. சில மாதங்களுக்கு முன் திருத்துறைப்பூண்டியில் நடைபெற்ற விழாவில்கூட ஜீவா பேசப்பட்ட அளவிற்கு சீனிவாசராவ் பேசப்படவில்லை என அங்குள்ள நண்பர்கள் சிலர் குறிப்பிட்டனர்.

நல்லகண்ணு:




அப்படிச்சொல்ல முடியாது. சீனிவாசராவ் தலைமையில் கம்யூனிஸ்ட் கட்சி செய்த பணி தொடர்கிறது. விவசாயத் தொழிலாளர் சங்கம், விவசாயிகள் சங்கம் என்ற அமைப்புகள் செயல்படுகின்றன. குறைந்தபட்சக் கூலி, ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரே வேலையில் சமக்கூலி, முதியோர்களுக்கு ஓய்வூதியம், பெண் தொழிலாளர்களுக்கு பிரசவ கால உதவி, சாதிக்கொடுமைகள் எதிர்ப்பு போன்ற பிரச்னைகளை முன்வைத்து தொடர்ந்து போராடி வருகிறோம். இதன்மூலம் கிராமப்புற மக்களை சாதிப்பகைமை இல்லாமல் சங்கமாகத் திரட்டி வருகிறோம். தேர்தல் சார்ந்த அரசியல் கட்சிகள் சாதி ஒழிப்பு குறித்துப் பேசுவதில்லை என்று பொதுவாகக் குற்றஞ் சாட்டுவது சரியல்ல. கம்யூனிஸ்டுகளுக்கு தேர்தலில் போட்டியிடுவது என்பது, ஆட்சி மாற்றத்துக்கான தேர்தல் களத்திலிருந்து ஒதுங்கி விடுவது, ஜனநாயக வழிமுறையில் தவறாகும் என்று கருதுகிறோம். மக்களிடம் அரசியல் கொள்கைகளை எடுத்துச் சொல்வதற்குத் தேர்தல் களம் பயன்படுகிறது.

சாதிமறுப்பு, அடித்தட்டு மக்களின் வாழ் நிலைகளிலிருந்து உயர்த்துவதற்கான பொருளா தாரக் கோரிக்கைகளை வலியுறுத்தித் தொடர்ந்து இயக்கங்களை கம்யூனிஸ்டுகளே நடத்துகிறார்கள். ஆகவே, எங்களைக் கிசான் கட்சி என்றும், பள்ளர், பறையர் கட்சி என்றும் இதரப்பகுதி மக்கள் கருது கிறார்கள். இதை நாங்கள் பெருமையாகக் கருதுகி றோம். 1940ஆம் ஆண்டுகளில் சுதந்திரப் போராட்டத் தில் ஈடுபட்ட இராஜபாளையம் பங்காரு ராஜா தலித்து மக்களின் முன்னேற்றத்துக்காகத் தொடர்ந்து பாடுபட்டார். இவரைப் பள்ளப் பங்காரு என்றே அழைப்பார்கள். இவர் இராஜபாளையம் வட்டாரத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கி வளர்த்தவர். இதுபோன்ற பல எடுத்துக் காட்டுகளைச் சொல்ல முடியும். கம்யூனிஸ்ட் கட்சிகள் பலமாக இருக்கும் இடங்களில் சாதிக்கலவரம், பிரச்னைகள் குறைவாகவே நடக்கின்றன. முதுகுளத்தூர் கலவர நேரத்தில்கூட கம்யூனிஸ்ட்டுகள் அதிகம் இருந்த ஊரில் கலவரம் இல்லை.

அ.மார்க்ஸ்:

முதுகுளத்தூர் பற்றிச் சொன்னீர்கள். கலவரத்தை அடக்க முத்துராமலிங்கத் தேவர் கைது செய்யப்பட வேண்டும் என்பதை அன்று உரத்துச் சொன்னவர் பெரியார்தான். அண்ணா, அதாவது திராவிட முன்னேற்றக் கழகம் வழக்கம்போல இந்த விஷயத்தில் சொதப்பியது. கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் தோழர் எம்.கல்யாணசுந்தரம் கூட முத்துராமலிங்கத் தேவர் கைது செய்யப்பட்டதைக் கண்டித்தார். இது எப்படிச் சரியாக இருக்க முடியும்?



இமானுவேல்

நல்லகண்ணு:

இமானுவேல் கொலை செய்யப்பட்டதைக் கண்டித்தோம்; நடத்தப்பட்டது திட்டமிட்ட கொலை. இதனால் ஏற்பட்ட கொந்தளிப்பு சாதிக்கலவரமாக மற்ற மாவட்டங்களுக்கும் பரவி விடாமல் தலைவர் கல்யாணசுந்தரம், கே.டி.கே.தங்கமணி போன்றவர்கள் சுற்றுப்பயணம் செய்தார்கள். கலவர நிலையைத் தணித்தது கம்யூனிஸ்ட்டுகள்தான். கீழத்தூவலில் ஊருக்கு வெளியே கண்ணை கட்டி வைத்து ஐந்து பேரை சுட்டதையும் கம்யூனிஸ்ட்டுகள் கண்டித்தார்கள். அப்போது பல்வேறு இடங்களில் தாக்குதல் நடந்தது. கம்யூனிஸ்ட் கொடி பறந்த இடங்களில் தாக்குதல் இல்லை. பாதிக்கப் பட்டவர்களுக்கு கம்யூனிஸ்ட்டுகள் பாதுகாப்பு கொடுத்தார்கள்.

அ.மார்க்ஸ்:

சமீபத்தில் நடந்த முத்துராமலிங்கத் தேவர் நூற்றாண்டு விழாவுக்குக் கூட நீங்கள் போய் வந்துள்ளீர்கள். அரசு விழாவாக இருந்தபோதிலும் அது ஒரு சாதிப்பெருமையை நிலைநாட்டும் விழாவாகத்தான் இருந்தது. கம்யூனிஸ்ட் கட்சி இதைத் தவிர்த்திருக்கலாமே.

நல்லகண்ணு:

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் நூற்றாண்டு விழாவைத் தமிழக அரசும், மற்றும் சில அரசியல் கட்சிகளும் கொண்டாடி வருகின்றன. அன்று அங்கு நாங்கள் கலந்து கொண்ட விழா சாதிரீதியான விழாவல்ல; திராவிட முன்னேற்றக் கழகத்

தலைவரும், முதல்வருமான கலைஞர் தலைமையில் நடந்த நூற்றாண்டு விழா. இதில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கட்சி, பாட்டாளி மக்கள் கட்சி, தேசீய காங்கிரஸ் கட்சி, யூனியன் முஸ்லீம் லீக், திராவிடர் கழகம் ஆகிய கட்சிகளின் தலைவர்களும் கலந்து கொண்டார்கள்.

முத்துராமலிங்கத் தேவர் விடுதலைப் போராட்டத்தில் முழுமையாக ஈடுபட்டுச் சிறை சென்றவர். காமராஜர், ஜீவானந்தம், பி.இராமமூர்த்தி ஆகியோருடன் சேர்ந்து, 1936ல் நடந்த திரிபுரி காங்கிரஸ் மாநாட்டில் நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸை ஆதரித்து வெற்றி பெறச் செய்தார்கள். மதுரையில் பஞ்சாலைத் தொழிலாளர் போராட்டங்களில் ஈடுபட்டு முத்துராமலிங்கத் தேவர், ஜீவானந்தம், இராமமூர்த்தி ஆகியோர் 1937ல் காங்கிரஸ் ஆட்சியால் கைது செய்யப்பட்டார்கள்.

தமிழ்நாட்டில் பிரிட்டிஷ் ஆட்சியில் தென் மாவட்டங்களில் மறவர், கள்ளர், ஜெயங் கொண்டான் வட்டாரத்திலுள்ள வன்னியர், சேலம் குறவர், மற்றும் சில இடங்களில் நாயக்கர் என்ற பிரிவு மக்கள் மீது குற்ற பரம்பரைச் சட்டம் போடப்பட்டது. குடும்பங்களே சிதையும் அளவு வெள்ளையர் ஆட்சியில் சீரழிக்கப்பட்டார்கள். இதை எதிர்த்து முத்துராமலிங்கத் தேவரும் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சியும் உறுதியாகப் போராடியது. நாடு விடுதலையடைந்ததும், 1948ல்தான் குற்றப் பரம்பரைச் சட்டம் ரத்து செய்யப்பட்டது.

சுதந்திரத்துக்கு முந்திய காலங்களில் நடந்த தேர்தலில் அனைத்துப் பகுதி மக்களையும் அணி திரட்டியதில் முத்துராமலிங்கத் தேவர் பணி யாற்றினார்.

குறிக்கோளில்லாத கட்சிகளிலும் தலைவர்கள் வாழ்க்கையிலும் தடுமாற்றம் ஏற்பட்டது.

சுதந்திர இந்தியாவில் பொதுத்தேர்தல்களும், அரசியல் அதிகாரப் போட்டியும் அதிகமானது. வெள்ளையனை வெளியேற்ற வேண்டுமென்ற விடுதலை வேகம் தணிந்து, அதிகாரப்போட்டிகள் அதிகரித்தபோது, எதிர்காலத்தைப் பற்றியும் சமூகப் பொருளாதாரத் திட்டங்களைப் பற்றியும் குறிக்கோளில்லாத கட்சிகளிலும் தலைவர்கள் வாழ்க்கையிலும் தடுமாற்றம் ஏற்பட்டது.

இச்சூழலில் முதுகுளத்தூர் சாதிக்கலவரமும் நடந்துவிட்டது. இதில் இமானுவேல் கொலை செய்யப்பட்டதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வன்மையாகக் கண்டித்தது.

அதேநேரத்தில் கீழத்தூவலில் குளத்துக்கரையில் 7 பேர்களை புறம் கையைக் கட்டி வைத்துக் காவல்துறையினர் சுட்டதையும் கண்டித்தோம். இதையொட்டி சாதிக்கலவரம் வெடித்தது. பலர் இதை வேடிக்கை பார்த்தார்கள். செங்கொடி இயக்கம்தான் இக்கலவரம் பரவாமல் தடுத்தது. நேரடியாக வயல் வரப்புகளில் அடுத்தடுத்து உழைக்கும் மக்களிடையே சாதி வெறியைக் கிளப்பி மோத விடுவது சரியான அணுகுமுறை ஆகாது. அதேநேரத்தில் சாதியின் பேரால் இழிவுகளையும் அனுமதிக்கக் கூடாது என்பதில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உறுதியாகப் பணியாற்றுகிறது. இதை எடுத்துச் சொல்லிப் பிரச்சாரம் செய்ததற்காகவே என்னைப் போன்ற வனுக்கு சாதியின் பேரால் கறுப்புக் கொடியும் காட்டப்பட்டது.

அ.மார்க்ஸ்:

முத்துராமலிங்கத் தேவர் ஆரம்ப முதலே ஒரு இந்துத்துவ அடையாளத்துடன் செயல்பட்டவர் என்பதை நாம் மறந்து விடக் கூடாது. கோல்வார்கரை அழைத்து பணமுடிப்பு கொடுத்ததை எல்லாம் மறந்து விட இயலாது. இந்து மத உணர்வும், சாதி ஆதிக்கமும் அவரிடமிருந்து பிரித்துப் பார்க்க இயலாதவை.

கூட்டணி என்பதற்காக ஆளும்கட்சியை ஆதரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது.

இன்று பல பிரச்சினைகளில் கூட்டணி என்பதற்காக மத்தியிலும் மாநிலத்திலும் ஆளும்கட்சியை ஆதரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் கூட்டணிக் கட்சிகளுக்கு இருக்கிறது. உங்களுக்கும் இருக்கிறது. எனவேதான், பல்வேறு பிரச்சினைகளில் வெளிப் படையான விமர்சனத்தை உங்களால் வைக்க முடியவில்லை. மத்தியிலாவது அணு ஒப்பந்த விஷயத்தில் கடுமையான விமர்சனத்தை வைக்கிறீர்கள். மாநிலத்தில் ரொம்பவும் விமர் சனமின்றி கலைஞரை புகழ்பாடுகிற நிலைமை இருப்பதாகத் தோன்றுகிறது.

நல்லகண்ணு:

கூட்டணியில் இருக்கிறோம் என்பதற்காக தனித்தன்மையை விட்டுக் கொடுப்பதில்லை.

கூட்டணியில் இருக்கிறோம் என்பதற்காக தனித்தன்மையை விட்டுக் கொடுப்பதில்லை. அணு ஒப்பந்தத்துக்கு நாங்கள் கொடுத்து வரும் நிர்ப்பந்தமே ஊரறிந்த உதாரணம். துணை நகரங்கள், சிறப்பு பொருளாதார மண்டலங்கள் என்ற பெயரில் விளைநிலங்களை எடுப்பதற்கு நாங்கள் ஒப்புக் கொள்வதில்லை. இப்படி பல உதாரணங்களை சொல்ல முடியும். கூட்டணி இல்லாமல் தனித்த ஒரு கட்சி ஆட்சி என்பது இனி சாத்தியமில்லை. யாருடனும் கூட்டணி கிடையாது; தனிக்கட்சி ஆட்சிதான் என்று விஜயகாந்த் கூறி வருகிறார் தனித்த ஆட்சி இனி வர வாய்ப்பே இல்லை.

1967ஆம் ஆண்டு தமிழகத்தில் காங்கிரஸ் கட்சி தோற்றது. மத்தியிலும் தனித்த காங்கிரஸ் ஆட்சி முடிவுக்கு வந்தது. மாநிலத்தில் செல்வாக்குள்ள கட்சிகள் ஆதரவுடன் ஆட்சி நடத்த வேண்டிய நிர்ப்பந்தம் அனைத்து மத்திய அரசுகளுக்கும் ஏற்பட்டுள்ளது. மாநிலத்தில் செல்வாக்கான பெரிய கட்சி, வேறு சில சிறிய கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சி நடத்த வேண்யடி நிர்ப்பந்தம் மாநில அரசுகளுக்கு உள்ளது. எனவே இதில் ஆளுங்கட்சிக்கும் பிரச்னை இருக்கிறது. ஆதரிக்கும் கூட்டணி கட்சிகளுக்கும் நெருக்கடி இருக்கிறது.

அ.மார்க்ஸ்:

பல விஷயங்களில் இன்று காங்கிரசுக்கும் பாரதிய ஜனதாவிற்கும் பெரிய வித்தியாசமில்லை. தலைவர்கள்தான் வேறு வேறு. கொள்கை பெரும்பாலும் ஒன்றாகத்தான் இருக்கிறது. குறிப்பாக வெளியுறவுக் கொள்கை விஷயத்தில் பழைய நேருவியக் கொள்கையை எல்லாம் விட்டு விட்டு இடையில் ஆட்சி புரிந்த பா.ஜ.க.வின் கொள்கையை இன்று காங்கிரஸ் ஏற்றுக் கொண்டு விட்டது. இந்துத்துவ எதிர்ப்பு விஷயத்திலும் கூட ஒரு 'மென்மை இந்துத்துவம்' என்கிற வடிவையே காங்கிரஸ் எடுக்கிறது. மதச்சார்பற்ற ஜனநாயகக் குரலை ஒலிக்கும் வகையில் ஒரு மூன்றாவது அணியை உருவாக்கும் முயற்சியில் கம்யூனிஸ்ட் கட்சி ஈடுபடுமா?

நல்லகண்ணு:

மூன்றாவது அணி அமைவதற்குரிய சரியான காலம் வரவில்லை.

அ.மார்க்ஸ்:

அதற்காக அணு ஒப்பந்தம், முழுக்க முழுக்க கார்ப்பரேட் ஆதரவு என மன்மோகன்சிங் அரசு பிடிவாதமாகச் செய்து வருபவற்றை படிப்படியாக ஆதரிக்கிற நிலைக்குச் சென்று விடலாமா?

நல்லகண்ணு:

இல்லை. அப்படி நாங்கள் விட்டுவிட மாட்டோம். மேற்கு வங்காளத்தில் நடக்கும் நந்திகிராம் பிரச்னையை எடுத்துக் கொள்ளுங்கள். அங்கு ஆட்சி நடத்தும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் அரசை இந்திய கம்யூனிஸ்ட் ஆதரிக்கிறது. கூட்டணியில் அங்கம் வகிக்கிறது. ஆனால் டாடா கம்பெனி அமைய விவசாய விளைநிலங்களை எடுக்கக் கூடாது என்று இந்திய கம்யூனிஸ்ட் வெளிப்படையாக எதிர்ப்பு சொல்லியிருக்கறது.

அ.மார்க்ஸ்:

நந்திகிராம், சிங்கூர் பிரச்சினையில் உங்கள் நிலைப்பாடு ஒப்பீட்டளவில் பாராட்டக் கூடியதுதான். பறிக்கப்பட்டது ரொம்ப நல்ல விவசாய நிலம் என்பதைத் தோழர்கள் அதுல்குமார் அஞ்சானும் பிரபாத் பண்டாவும் அறிவித்தது குறிப்பிடத்தக்கது. ஆனால் அதிலும்கூட இறுதியில் கூட்டணி என்கிற அடிப்படையில் ஒத்துப் போய் விடும் நிலையே உள்ளது. நிலம் கையகப்படுத்துதல், நிலமிழந்தோருக்கு மறுவாழ்வு அளித்தல் தொடர்பான தேசியக் கொள்கை மற்றும் சட்ட உருவாக்கத்தில் இடதுசாரிகள் செயலூக்கமான பங்கை வகிக்க வேண்டும். தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடிப்பது போல பின்னால் எதிர்த்துப் பயனில்லை. கூட்டணி அரசில் நேரடியாகவும் வெளியிலிருந்தும் பங்கேற்கும் வாய்ப்பைப் பயன்படுத்தி தனித்துவமான சில விஷயங்களை நீங்கள் நிறைவேற்ற வேண்டாமா?

நல்லகண்ணு:

எங்களிடம் சில குறைகள் இருக்கலாம். ஆனால்

மற்ற அமைப்புகளுக்கும் எங்களுக்கும் வித்தியாசம் இருக்கிறது. விஷயங்களை கையிலெடுப்பதற்கும், விட்டு விடுவதற்கும் எங்களுக்கு உள்நோக்கம் கற்பிக்க முடியாது. இயக்கத்தின் வீச்சுக்கும் மக்கள் ஆதரவைப் பொறுத்தும் உள்ளது.

அ.மார்க்ஸ்:

தமிழகத்தில் இப்போது வாழும் அரசியல்வாதிகளில் அதிகளவு அடக்குமுறைகளை அனுபவித்தவர் நீங்கள். தியாக வாழ்க்கை உங்களுடையது. இன்றைய அரசியல் நிலவரத்தைப் பார்க்கும்போது செய்த தியாகமெல்லாம் வீண் என்று எப்போதாவது நினைத்திருக்கிறீர்களா?

நல்லகண்ணு:

சமூகரீதியான ஏற்றத்தாழ்வு இன்னும் மறையவில்லை என்ற ஏக்கம் உண்டு. நான் உயர்ந்த சாதி, நீ தாழ்ந்த சாதி என்று வெட்டிக் கொண்டும் குத்திக் கொண்டும் சாகிற இரண்டு சாதிக்காரனும் கஞ்சிக்கு இல்லாமல் தான் கிடக்கிறான். சாதி அமைப்பு என்பது அண்ணல் அம்பேத்கர் சொல்லியிருப்பதைப் போல் தரப்படுத்தப்படுத்தப்பட்ட சமத்துவமின்மையாகும். எந்த ஒரு சாதியும் மற்ற சாதியோடு இணைந்து பழக முடியாத தன்மையில் பிரிக்கப்பட்டுள்ளது. ஒன்றுபடுத்துவதில் அதிகமான விடாமுயற்சி அவசியமாகும். இருக்கிறது. காலம் தோறும் இறுகி இறுகி இன்றைக்கும் நிலை பெற்று இருக்கிறது. இதை தகர்க்க சிரமப்பட வேண்டும். சாதிப் பிரச்னையை சில தலைவர்கள் பற்ற வைக்கிறார்கள். சாதாரண மக்கள் பற்றி எரிகிறார்கள். கலவரப் பகுதியில் தொழில் இல்லை. விவசாயமும் இல்லை. சும்மா இருப்பவன் மூளையில் புகுந்து சைத்தான் ஆட்டுவிக்கிறான். இது என் முதல் வருத்தம்.



இரண்டாவது... அரசியல் இன்று கிரிமினல்மயமாகி விட்டது. புதிது புதிதாக தலைவர்கள் வருகிறார்கள். இவர்கள் நேற்று வரை என்ன செய்தார்கள், என்ன தொழில் பார்த்தார்கள் என்பதே தெரியவில்லை. ஏதாவது ஒரு சிலைக்கு மாலை போட ஐம்பது கார்கள்... அதுவும் பெரிய பெரிய வாகனங்களில் வந்து இறங்குகிறார்கள். பத்து விரலிலும் மோதிரம் போட்டிருக்கிறார்கள். இவர்கள் பெரும்பாலும்

கட்டப்பஞ்சாயத்து செய்கிறார்கள். சமூக சேவகர் என்கிறார்கள்.

அரசியல்வாதிகள், ரௌடிகளை பயன்படுத்திய காலம் போய் ரௌடிகளே அரசியல் கட்சிகளுக்குள் நுழைந்து விட்டார்கள். எனக்கு தெரிய இந்த தொடர்பு 15 ஆண்டுகளுக்கு முன்பே ஆரம்பமாகி விட்டது. அதன்பிறகு இதில் போலீசும் சேர்ந்து கொண்டது. இம்மூன்று பிரிவினரின் கூட்டு ஆபத்தானதாகும்.

மூன்றாவது.... இன்று சாதாரண இயக்கங்களில், கட்சிகளில் தேர்தலை சந்திக்க முடியாது. கட்சி நடத்துவதே செலவு பிடிக்கும் விஷயமாக ஆகிவிட்டது. தேர்தலில் பங்கேற்பது என்றால் அவ்வளவுதான். கம்யூனிஸ்ட்கள் உட்பட சில கட்சிகள் தேர்தலில் பங்கேற்பதே சிரமமாகிக் கொண்டு வருகிறது.

அ.மார்க்ஸ்:

தேர்தல் முறையில் பல சீர்திருத்தங்கள் செய்தாக வேண்டும். இப்போதுள்ள யார் அதிக வாக்குகளைப் பெறுகிறார்களோ அவர்களே வென்றவர்கள் என்கிற 'திவீகூஷீடீமீ ஜீணீடீமீ மீ லீமீ ஜீஷீடீமீ' முறை மோசமானது. 30 சத வாக்குகளை வாங்கிய ஒரு அரசியல் கட்சி 200 இடங்களில் வெல்கிறது என்றால், 28 சதம் வாங்கிய கட்சி வெறும் 20 இடங்களை மட்டுமே வெல்ல முடிவது சரியான ஜனநாயகமல்ல. தவிரவும் ஒரே இடத்தில் குவிந்திராத அமைப்பினர் உரிய பிரதிநிதித்துவம் பெற முடிவதில்லை. பெரிய கட்சிகளுடன் அவர்கள் கூட்டணி சேர நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். பெரிய கட்சிகளிடம் நிதி உதவியை நாட வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படுகிறது. எனவே, வேறு பல தேர்தல் நடைமுறைகளை முயற்சிக்கலாம். உலகிலுள்ள ஜனநாயக நாடுகளில் வேறு எத்தனையோ முறைகள் உள்ளன. குறைந்தபட்சம் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவ முறையை நாம் யோசிக்க வேண்டும்.

தேர்தல் முறையில் பல சீர்திருத்தங்கள் செய்தாக வேண்டும்.

இன்னொன்றையும் நான் உங்களிடம் கேட்க விரும்புகிறேன். தேவையற்ற ஒழுக்க வாதங்களில் கம்யூனிஸ்ட்டுகள் சிக்க வேண்டியதில்லை. குடிப்பிரச்சினை இவற்றில் ஒன்று. மனித குல வரலாற்றிலிருந்து குடிப் பழக்கத்தை பிரிக்க இயலாது.

மதுவிலக்கு எந்த நாட்டிலும் வெற்றி பெற்றதில்லை. அதிகக் குடி உடலைக் கெடுக்கும் என்பது உண்மைதான். ஆனால் குடி பொருளாதார ரீதியில் ஒருவரை வீழ்த்துவது என்பது இன்றுள்ள அதிகபட்ச வரிகளால்தான். அதோடு நமது உள்நாட்டு, இயற்கை பானமான கள்ளைத் தடை செய்துவிட்டு அந்த இடத்தில் *Indian made foreign liquour* எனப்படும் அயல்நாட்டு மதுவகையை அனுமதித்துள்ளது ரொம்பவும் அபத்தம்.

கள் ஒரு உணவுப் பொருளும் கூட புரோட்டீன் அதிகம்.

சமீபத்தில் நான் தரங்கம்பாடிக்கு ஒரு ஆய்வு நிமித்தம் சென்றிருந்தேன். அங்கிருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் காரைக்கால் எல்லை ஆரம்பமாகி விடுகிறது. அங்கே மதுக்கடைகள் இருந்தன. கள்ளுக்கடையில் லிட்டர் 15 ரூபாய்க்கு கள் கிடைக்கிறது. ஒருவர் என்னதான் பெரிய குடிகாரராக இருந்தபோதிலும் இரண்டு அல்லது மூன்று லிட்டருக்கு மேல் குடிக்க இயலாது. செலவு அதிகமில்லை.

கள் ஒரு உணவுப் பொருளும் கூட. புரோட்டீன் அதிகம். கெடுதலும் அதிகமில்லை. தவிரவும் இந்த 15ரூ விலையும் கூட அரசுக்கு வரிகட்ட வேண்டியதால்தான். பிரிட்டிஷ் ஆட்சிக்கு முன்பு இருந்த நிலை அதாவது மாடு இருப்பவர்கள் பாலைக் கறந்து குடிக்கலாம் என்பதுபோல, மரம் இருப்பவர்கள் கள்ளை வடித்துக் குடிக்கலாம் என்றிருந்தால் இன்னும் குறைந்த செலவில் கலப்படமில்லாத கள் கிடைக்கும். நிறைய பேருக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கும். இன்றுள்ள முறையில் சாராய ஆலை முதலாளிகள்தான் பயனடைகின்றனர். கம்யூனிஸ்ட் கட்சிகள் இது குறித்து ஆதரவான முடிவுகளை எடுக்கலாமே.

நல்லகண்ணு:

தேர்தலில் விகிதாச்சார முறை அவசியமென்று கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது. கள்ளை அனுமதிப்பது பற்றிச் சொன்னீர்கள். கள்ளை அனுமதிக்க வேண்டும் என்பதுதான் எங்கள் நிலைப்பாடும்.

மார்க்ஸ்:

ஆனால் நடைமுறையில் நீங்கள் அதைப் பேசுவதில்லையே.

நல்லகண்ணு:

கட்சித் தீர்மானம், கள் இறக்குவது அனுமதிக்கப்பட வேண்டும் என்பதுதான். இருந்தாலும் பெண்கள் அதை ஏற்பதில்லை. அதனால் நாங்கள் அதை வற்புறுத்துவதில்லை.


அ. மார்க்ஸ்:

சொந்த வாழ்வில் அப்பழுக்கற்ற நேர்மையாளராக வாழ்ந்துள்ளீர்கள் நீங்கள். தங்கள் துணைவியாரைப் பற்றியும் மிகவும் பெருமையாகவே அறிந்துள்ளேன். அவர்கள் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர் என அறிகிறேன். மதத்தை ஒரு பொருட்டாகவே கருதாமல் அதைத் தாண்டி அந்தத் திருமணத்தைச் செய்தது உங்களைப் பொறுத்தமட்டில் எதிர்பார்க்கக் கூடியதுதான். அவர்களின் தனித்துவமான நம்பிக்கைகளைப் பேணுவதற்கு நீங்கள் தொடர்ந்து அனுமதிப்பீர்கள். தங்கள் பிள்ளைகளுக்கு காசி பாரதி, ஆண்டாள் எனப் பெயரிட்டுள்ளீர்கள். இரண்டும் இன்று மரபு சார்ந்த பெயர்களாக உள்ளன. உங்கள் தேர்வு தான் முதன்மையாகச் செயற்பட்டது எனக் கருதலாமா?

நல்லகண்ணு :

எங்கள் ஊர் பக்தி மார்க்கத்தில் சிறந்து விளங்கிய ஊர். நூற்றியெட்டு திருப்பதிகளில் ஒன்று. மார்கழி மாத விடியல் வேளையில் கைகளில் ஜால்ராவுடன் பஜனை செய்வோம். நாங்கள் நான்கு மணிக்கே எழுந்து, ஊர்ப் பெரிய மனிதர்கள் வீட்டின் எதிரில் நின்று பஜனை செய்வோம். என்னுடைய தந்தையார் விஷ்ணு பக்தர். அதனால் மூத்த மகளுக்கு காசி என்று பெயர் வைத்தார். பாரதி எனக்கு பிடித்தம் என்பதால் பாரதியையும் சேர்த்து காசி பாரதி என்று ஆனது. எங்கள் ஊரில் காசியம்மாள், காசிநாதன் என்ற பெயர்கள் அதிகம்.

அப்பா அடிக்கடி ஸ்ரீவில்லிபுத்தூர் போய் ஆண்டாளை தரிசித்து வருவார். மார்கழி மாதத்தில் மகள் பிறந்ததால் ஆண்டாள் என்று பெயர் வைக்கப்பட்டது. அவரது விருப்பத்தை தடுக்க வேண்டாம் என்று வைத்தோம். மற்றபடி வேறு இல்லை.



அ.மார்க்ஸ் :

காந்தி குறித்த எனது கட்டுரைகளையும் நூலையும் நீங்கள் பாராட்டியது எனக்கு மிகவும் உற்சாகமளித்த ஒன்று. காந்தி பற்றிய உங்கள் பார்வையைச் சுருக்கமாக சொல்ல இயலுமா?

நல்லகண்ணு :

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை இந்திய சூழலை முன்வைத்து எதிர்த்ததில் காந்தி முக்கிய பங்கு வகித்தார். இதில் இஸ்லாமியர்கள், தலித்துகள், பெண்கள் என பலதரப்பட்டவர்களும் பங்கேற்க வேண்டும் என்று நினைத்தார். அதே சமயம் இவர்களுக்கு தரப்படவேண்டிய உரிமைகள் குறித்தும் நிறைய பேசினார். எழுதினார். மக்கள் ஒன்று திரண்டு நடத்தக்கூடிய போராட்டங்கள் தீவிரமடையும்போது அது மேலும் வலுவடையாமலும் அதை ஆதரிப்பதிலும் தயக்கம் காட்டியிருக்கிறார். 1946 பிப்ரவரியில் கப்பற்படை ஊழியர்கள் வேலை நிறுத்தம் நடந்தபோது, நாடு முழுவதும் ஆதரவு பெருகியது. பம்பாய் துறைமுகத்தில் காங்கிரஸ், கம்யூனிஸ்ட், முஸ்லிம் லீக் கொடிகளை ஏந்தி தொழிலாளர்கள் போராடியபோது இது 'தகாத கூட்டு' என்று காந்தி விமர்சித்ததையும் மறந்துவிட முடியாது. அவருக்கென்று இருந்த சில தனிப்பட்ட எண்ணங்களை பிரதிபலித்தார்.

அவரின் அடையாளமாக இன்று நாம் பார்க்க வேண்டியது இந்து-முஸ்லிம் ஒற்றுமை. அதற்காகத்தான் அவரது உயிரே பலியானது. பெரியார் கூட இந்த நாட்டுக்கு காந்தி தேசம் என்று பெயர் வைக்கச் சொன்னார். அப்படிப்பட்ட காந்தியை இந்து என்ற கூட்டுக்குள் அடக்கி வைக்க முடியாது.

✠